Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (05.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily க... 8



கடந்த காலங்களை மறந்து...

ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்தில் நேற்று அவருடன் பேச்சு நடத்தி விட்டு வைகோ செய்தியாளர்களைச் சந்திக்க வந்தபோது....

## அ.தி.மு.க. அணியில் இணைந்தார் வைகோ! ஈழத்தமிழர் நிலைப்பாடு மாறாது என அறிவிப்பு

### தமிழக அரசியல் களநிலையில் திடீர் திருப்பம்

சென்னை,மார்ச் 5

சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் தமிழகத்தின் அரசியல் கள நிலைவரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

கலைஞர் மு.கருணாநிதியின் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இதுவரை அங்கம் வகித்து வந்த வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று முதல்வர் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அணியோடு போய்ச் சேர்ந்துகொண்டது.

கடந்த சில தினங்களாக ம.தி.மு.கவின் தேர்தல் கூட்டு தொடர்பாக இருந்துவந்த பரபரப்புகள் நேற்றுடன் முடிவுக்கு வந்திருக்கின்றன.

பரமவைரிகளாக இருந்துவந்த முதல்வர் ஜெயலலிதாவும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவும் சுமார் எட்டு ஆண்டுகளின் பிறகு நேற்று நேரில் சந்தித்துக் கொண்டனர். அப்போது சட்டமன்றத் தேர்தலில் வைகோவின் கட்சிக்கு 35 தொகுதிகளை அள்ளி வழங்கினார் ஜெயலலிதா.

அ.தி.மு.க. அணியுடனான இந்தத் தேர்தல் கூட்டு ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாகத் தமது கட்சி கொண்டிருக்கும் நிலையான கொள்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று உடனேயே அறிவித்து விட்டார் வைகோ.

ஜெயலலிதாவின் 'போயஸ்' தோட்ட இல்லத்திற்குச் சென்ற வைகோ, தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுகளை நடத்தினார். அதன் பின்னர் ம.தி.மு.க. தலைமையகமான தாயகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைகோ கூறியதாவது:-

பொடா சட்டத்தை நாங்கள் பங்கேற்றிருந்த மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுதான் அமுல்படுத்தியது. அதைச் செயற்படுத்தியதுதான் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு.

பொடாவை அமுல்படுத்திய அரசாங்கத்தில் எமது அமைச்சர்களும் இருந்தனர். அப்போது அவர்கள் பதவி விலக முன்வந்தனர். ஆனாலும் அரசாங்கத்திலே நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஆகையால் பொடா சட்டத்தின் கீழ் எம்மை கைதுசெய்த விவகாரம் பெரிதானது அல்ல. கடந்த காலங்களை மறக்கின்றோம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# வவுணதீவில் புலிகள் நிலை மீது ஒட்டுப்படைகள் திடீர் தாக்குதல்!

## இரு போராளிகள் உயிரிழப்பு மட்டு. அரசியல்துறை கண்டனம்

மட்டக்களப்பு,மார்ச் 5

**மட்டக்களப்பில் - வவுணதீவுப் பகுதியில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் முன்னரங்க நிலை ஒன்றின் மீது இராணுவத்தினரின் துணையுடன் ஒட்டுப் படைகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் இரண்டு போராளிகள் உயிரிழந்திருக்கின்றனர்.**

**வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் போர்நிறுத்த உடன்படிக்கையை மதித்துப் பேணுவது என்ற ஜெனீவா உடன்பாட்டை அப்பட்டமாக மீறுகின்ற - மிலேச்சத்தனமான - செயல் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.**

நவீன ஆயுதங்கள் தரித்த ஒரு குழுவினர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் புலிகளின் நிலை மீது தாக்குதல் தொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலையை நெருங்கி வந்து சுமார் 10 நிமிட நேரம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் பின்னர் வவுணதீவில் அமைந்துள்ள படை முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றனர் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்திருக்கிறார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

### தொடர்பில்லை என்கிறது இராணுவம்

கொழும்பு,மார்ச் 5

வவுணதீவில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலை மீது நடத்தப்பட்டிருக்கும் தாக்குதலில் படையினர் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று படைத்தரப்பு தெரிவித்திருக்கின்றது.

ஆயுதக் குழுக்களுடன் இணைந்து இராணுவத்தினரே இத்தாக்குதலை நடத்தினர் என்று வெளியாகிய ஊடகச் செய்திகள் உண்மைக்குப்புறம்பானவை என்று இராணுவத் தரப்பு வெளியிட்ட கள நிலைவரை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படும் இடம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அந்தப் பகுதிக்குள் படையினர் எவருமே பிரவேசிக்கவில்லை - என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ஐ)

**யாழ். படைத் தளபதியின் கொடும்பாவி எரிப்பு!**
**செய்தி, படங்கள் 3ஆம் பக்கத்தில்.**

## குழந்தைகளை கொன்றுவிட்டு தற்கொலை முயற்சி

றொறன்ரோ, மார்ச் 5

கனடாவின் றொறன்ரோ பிராந்தியத்தில் வசிக்கும் ஈழத்தமிழ் பெண் ஒருவர் தனது குழந்தைகள் இருவரையும் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை புரிய முயன்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

இவரது வீட்டில் குளியல் அறையில் தண்ணீர் தொட்டிக்குள் இருந்து இரண்டு வயதான குழந்தையினதும், மூன்று மாதங்களேயான பச்சிளம் குழந்தையினதும் சடலங்களை கனடா பொலீஸார் மீட்டிருக்கின்றனர் என்று இணையச்செய்திகள் தெரிவிக்கின்றன.

மணிக்கட்டில் ஆழமான வெட்டுக்காயத்துடன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் வேட்பாளர் குடும்பம் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

### பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 5

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்.மாநகர சபைக்குப் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளரும் அவரது குடும்பத்தினரும் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டமையை யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் கண்டித்திருக்கின்றன.

மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களில் ஒருவரான எஸ்.எம்.ஸுகைப்பும் அவரது மனைவி மற்றும் தந்தை ஆகியோருமே வீட்டில் வைத்துத் தாக்கப்பட்டிருக்கின்றனர். (விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்).

இந்தத் தாக்குதலைக் கண்டித்து யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

03.03.2006 அன்று காலை 9 மணியளவில் வேட்பாளர் எஸ்.எம்.ஸுகைப் அவர்களது குடும்பத்தினர் கோழைத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ஆயுதந்தாங்கிய குழுவினரின்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு மக்கள் போராடுவதற்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம்,மார்ச் 5

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலுள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி அங்கு பொதுமக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி பெரும் எடுப்பில் போராட்டங்களை நடத்த பொதுமக்கள் அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகள் மீளத் தொடங்கியுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் பகுதியில் காகங்கள் மயங்கி வீழ்ந்தன!

கொழும்பு, மார்ச் 5

புத்தளம் மணல்தீவு பகுதியில் நேற்று ஒரே சமயத்தில் பல காகங்கள் மயங்கி தரையில் வீழ்ந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தக் காகங்கள் பறவைக் காய்ச்சல் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டதால் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பும் பதற்றமும் காணப்பட்டதாக நேற்றிரவு வெளியான செய்திகள் தெரிவித்தன.

காகங்கள் மயங்கி வீழ்ந்தமை தொடர்பாக கால்நடை மருத்துவ அதிகாரி எம். எம்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை ஊடாக டீஸல் கடத்த முயற்சி

கொழும்பு, மார்ச் 5

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக பெருமளவு டீஸலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கடத்த முயன்ற லொறிச் சாரதி ஒருவர் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆறுமுகம் சுகந்தன் என்ற இந்த லொறிச் சாரதி நேற்றுமுன்தினம் நண்பகல் சோதனைச் சாவடியைக் கடந்து செல்ல முயன்ற

(20ஆம் பக்கம் பார்க்க)



கராத்தே மகளிர் இளநிலை அதிகாரிகளுக்கு தேசியத் தலைவர் சான்றிதழ் வழங்குகிறார்...

# சாந்தைக் கிராமத்தில் மின்னல் தாக்குதல்!

வலி.தென்மேற்கு,மார்ச் 5

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் திடீரென ஏற்பட்ட இடிமுழக்கத்தின் போது வீடொன்றில் மின்னல் தாக்கியதில் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

வீட்டில் இருந்த இலத்திரனியல் சாதனங்கள் பாதிக்கப்பட்டன.

சில்லாலை, வடக்கு சாந்தைக் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டின் தொலைக்காட்சி அன்ரனா,மீதே மின்னல் தாக்கியது. அன்ரனா முற்றாகச் சேதமடைந்தது.

வீட்டில் தங்கியிருந்த பெண் ஒருவருக்கும் அயல் வீட்டுக்காரர் ஒருவருக்குமே காலில் சிறுகாயங்கள் ஏற்பட்டன.

தொலைக்காட்சி, 'சீ.டி.பிளேயர்', வீடியோ டெக் என்பன செயல் இழந்தன.

(ஐ-135)

## கராத்தே பயிற்சியை நிறைவு செய்த

# மகளிர் இளநிலை அதிகாரிகளுக்கு தேசியத் தலைவர் சான்றிதழ் வழங்கினார்

கிளிநொச்சிமார்ச் 5

விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் இளநிலை அதிகாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி உள்ளார்.

இந்த வைபவத்தில் தளபதிகள், போராளிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பயிற்சியை நிறைவுசெய்த மகளிர் இளநிலை அதிகாரிகளுக்கான தகைமைச் சான்றி தழ்களையும் பரிசில்களையும் தமிழீழத் தேசியத் தலைவர் வழங்கினார்.

இப்பயிற்சி நெறியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கும் கராத்தே கலையைக் கற்றுத் தேறிய போராளிகளுக்கும் முதலாவது, மூன்றாவது கறுப்புப் பட்டிகளையும் தேசியத் தலைவர் வழங்கிச் சிறப்பித்தார்.

(ஐ)

# யாழ். மாநகர சபை வேட்பாளரின் வீட்டினுள் புகுந்தோர் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,மார்ச் 5

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்.மாநகர சபையில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களில் ஒருவரான எஸ்.எம்.ஸுகைப்பின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று அங்கிருந்தவர்களை கடுமையாகத் தாக்கியிருக்கிறது.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் நகரில் மானிப்பாய் வீதியில் உள்ள அவரது வீட்டுக்கு 'ஹைஏஸ்' வான் ஒன்றில் வந்த ஐந்து பேர் அடங்கிய குழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று கூறப்பட்டது. இதில் மாநகர சபை வேட்பாளரின் மனைவியான நிஸ்னியா, தந்தையான எஸ்.எ.சி.சாப்தீன் (வயது 56) ஆகியோர் கடுமையான காயங்களுக்கு இலக்காகினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை யாழ். மாநகர சபையின் மற்றொரு முஸ்லிம் வேட்பாளரான ஷஹீல் மௌலவி வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

ஆயுதம் தாங்கிய ஒரு குழுவினரே இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலில் ஈடுபட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அவர் சொன்னார். காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களை ஆயுதம் தாங்கிய குழு ஒன்றே தாக்கியது என்பது சம்பவத்தை நேரில் கண்டவர்கள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

இதனை மாநகர சபையின் மற்றொரு வேட்பாளர் என்ற வகையில் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்று ஷஹீல் மௌலவி மேலும் தெரிவித்தார்.

(ஐ-த)

# நாளைய பகிஷ்கரிப்புக்கு கல்விச் சமூகத்தின் ஆதரவைக் கோருகின்றது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,மார்ச் 5

தமிழ் மாணவர்களுக்கு எதிராகவும் அவர்களது அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும் செயற்பட்டுவரும் இராணுவத்தினரது நடவடிக்கைகளைக் கண்டித்து நாளை இடம்பெறஇருக்கும் பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குமாறு கல்விச் சமூகத்தினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த பத்திரிகை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மாணவராகிய நாங்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் சுதந்திரமான கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வதைச் சீரழிக்கும் வகையில் சிங்கள இராணுவத்தால் காலங்காலமாகத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறையின் ஓர் அங்கமாகவும் மாணவர்களை சீண்டும் வகையிலும் சமாதானத்தைக் குழப்பும் நோக்குடனும் சிங்களக் கூலிப்படை செயற்பட்டு வருகின்றது. அவ் வகையில் -

* மாணவர்கள் அரச அடக்குமுறைக்கு எதிராகவும் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகவும் கிளர்ந்தெழ அனுமதிக்கக்கூடாது எனவும் எழுச்சி நிகழ்வுகளை நடத்த அனுமதிக்கக்கூடாது எனவும் யாழ்.இராணுவத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறி அவர்கள் கூறியிருப்பது -
* 24.02.2006 அன்று பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சென். ஹென்றீஸ் பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமை -
* சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வீடுகளுக்குச் சென்று மிரட்டியமை -
* உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது பாடசாலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை.

ஆகியவற்றுக்கு எதிராக எமது ஒருமித்த எதிர்ப்பினை வெளிப்படுத்தவும் அரசோ அரச கூலிப்படையோ எமது உரிமையில் தலையிட முடியாது என்பதை முன்வைத்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சந்திரசிறிக்கும், சிங்கள அரசுக்கும் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் நாளை திங்கட்கிழமை எமது அனைத்துக் கல்வி செயற்பாட்டையும் புறக்கணித்து எமது ஒருமித்த எதிர்ப்பைத் தெரிவிப்போம்.

எமது இந்தப் பகிஷ்கரிப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும்படி அனைத்து கல்வி சமூகத்தையும் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## வாசகர் கவனத்துக்கு

இன்றைய உதயனிலும், ஞாயிறு சிறப்பம்சம் சூரியகாந்தியிலும்

**"அமெரிக்க யுத்தக் கப்பலை ஆட்டிப் படைக்கும் ஆவிகள்"**

என்ற ஒரே கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

அச்சிடுதலுக்கு முந்திய நிலையில் உண்டான தொழில்நுட்பத் தவறே இதற்குக் காரணமாகும். பொறுத்தருளுமாறு வாசகர்களை மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- ஆசிரியர்.


# கோழிப் பண்ணைகளின் விவரங்கள் சேகரிப்பு

வலி.தென்மேற்கு,மார்ச் 5

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கோழிப்பண்ணைகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் விவரங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

உலகின் பல பாகங்களிலும் இந்தியாவிலும் பறவைக்காய்ச்சல் பரவி வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கோழிப் பண்ணைகளின் விவரங்கள் யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரின் உத்தரவுக்கமைய திரட்டப்பட்டு வருகின்றன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தத் தமது பகுதிகளிலுள்ள கோழிப்பண்ணைகள் பற்றிய விவரங்களை சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் சேகரிக்கத் தொடங்கி உள்ளனர்.

(ஐ-135)



விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவினர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் யூணாஸ் ஸ்தோராவை நேற்று முன்தினம் சந்தித்தனர். அமைச்சருடன் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து உரையாடுவதை முதல் படத்தில் காணலாம். நோர்வேயின் நோபல் நிறுவனத்தை புலிகளின் குழுவினர் பார்வையிடுவதை அடுத்த படத்தில் காணலாம்.

# ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 9 உழவு இயந்திரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 5

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திற்கு இழுவைப் பெட்டியுடன் கூடிய ஒன்பது உழவு இயந்திரங்கள் நேற்றுப் பிற்பகல் வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டன.

உழவு இந்தியரங்களைக் கையளிக்கும் வைபவம் நேற்று யாழ்.மாநகர சபையில் இடம்பெற்றது.

யாழ்.மாநகரசபைக்கு நான்கு உழவு இயந்திரங்களும் பருத்தித்துறை பிரதேச சபைக்கு இரண்டு உழவு இயந்திரங்களும் பருத்தித்துறை நகர சபைக்கும் வல்வெட்டித்துறை நகரசபைக்கும் தலா ஓர் உழவு இயந்திரமும் மருதங்கேணி கடற்றொழில் சங்கங்களின் சமாசத்திற்கு ஓர் உழவு இயந்திரமும் வழங்கப்பட்டன.

உழவு இயந்திரங்களுக்குரிய ஆவணங்களை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உரியவர்களிடம் கையளித்தார்.

கையளிப்பு வைபவத்துக்கு மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமை வகித்தார்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சுனாமிப் பிரிவுக்கான உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா, ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டப் பொறியியலாளர் சர்மா ஆகியோரும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பசுபதியும் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

மருதங்கேணி பிரதேச சபைக்கும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் தலா ஒவ்வொரு கணனித் தொகுதிகளும் நேற்றைய வைபவத்தில் வழங்கப்பட்டன.

(படங்கள் 15ஆம் பக்கத்தில்) (ஐ-7)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கல்விச் சமூகத்தில் கை வைத்தால்.....!

தமிழ் மக்களின் சிவில் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தலையிடுவதை உடன் நிறுத்த வேண்டும் என்று கோரியும் அவரது தலையீட்டைக் கண்டித்தும் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நாளை வகுப்புகளைப் பகிஷ்கரித்துத் தமது ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்தவிருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களினதும் பணிப்பாளர்களையும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப் பாளரையும் பலாலி இராணுவத்தளத்துக்கு அழைத்து அவர்களை அச்சுறுத்தும் பாணியில் கல்வி நிர்வாகம் தொடர்பான சில உத்தரவுகளை வடபகுதி இராணுவத் தளபதி விடுத்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

சிவில் நிர்வாகத்தில் இராணுவம் நேரடியாகத் தலையீடு செய்யும் இந்த நடவடிக்கையையும் அண்மைக் காலத்தில் மாணவர்களுக்கு எதிராகவும் அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு எதிராகவும் குடாநாட்டில் அரசுப் படைகள் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள், கெடுபிடிகள், அட்டகாசங்கள் போன்றவற்றையும் ஆட்சேபித்தே நாளைய பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

"பாடசாலை மாணவர்கள் இளம் சிறார்கள். அவர்கள் கல்விக்கு அப்பால் அரசியலிலோ அல்லது அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளிலோ பாடசாலை நேரத்தில் ஈடுபடக் கூடாது; அதற்கு அரசிடம் சம்பளம் வேண்டிப் பணிபுரியும் கல்வி அதிகாரிகள் ஒத்துழைக்கவே கூடாது" - என்றெல்லாம் மேற்படி வலயக் கல்விப்பணிப்பாளர்களுடனான சந்திப்பில் 'அன்புக் கட்டளை' போட்டு 'நல்லுபதேசம்' செய்திருக்கின்றார் யாழ்.கட்டளைத் தளபதி.

சாதாரண சூழ்நிலையில் - வழமையான வாழ்நிலையில் - இந்தக் கூற்றும் பொருத்தமானதுதான்; ஏற்புடையதுதான்.

ஆனால், இன்று ஈழத்தமிழரின் வாழ்வே விடுதலைக்கான போராட்டம் என்றாகிவிட்ட பின்னர் -

'கற்பதற்காகப் போராடுவோம்; போராடுவதற்காகக் கற்போம்!' - என்பதே ஈழத்தமிழ் மாணவரின் மூலமந்திர வாசகமாகிவிட்ட பின்பு -

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியின் மேற்படி கருத்து - பணிப்புரை - அபத்தம் மிக்கதாகிவிட்டது.

விடுதலைப் போராட்டமும் வாழ்வும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துவிட்ட தமிழரின் வாழ்வில் போராட்டப் பங்களிப்பு இல்லாக் கல்வி என்பது பொருத்தப்பாடு அற்றதாகிவிட்டது என்ற உண்மையை யாழ்.தளபதி புரிந்துகொள்வது பொருத்தமானதாகும்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் - அதன் கீழ் ஒரு மாவட்டத்தின் சிவில் நிர்வாகப் பொறுப்புகளை அரச அதிகாரிகளிடமிருந்து பிடுங்கி, படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமிருந்தாலும் - யாழ்.குடாநாட்டு விடயத்தில் அத்தகைய அதிகார மாற்றம் பற்றிய அறிவிப்பு அல்லது அது தொடர்பான ஏற்பாடு ஏதும் நடைபெற்றதாக - இடம்பெற்றதாக - தகவல் இல்லை.

இந்தப் பின்னணியில் பார்த்தால் -

கல்வித்துறை தொடர்பான மூத்த அதிகாரிகள் அறுவரை யாழ்.படைத்தளபதி தமது பலாலிப் படைமுகாமிற்கு அழைத்து, கல்வி நிர்வாகம் தொடர்பாக அச்சுறுத்தல் பாணியிலான அறிவுறுத்தல்களை அவர்களுக்கு விடுத்திருக்கின்றமை சிவில் நிர்வாகத்தில் தேவையற்ற படைத் தலையீடு என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரிதத்தை - கடந்த கால நிகழ்வுகளை - சரிவரப் புரிந்துகொண்ட எவரும் அதில் முக்கிய பங்கை வகிக்கும் கல்விச் சமூகத்துடன் முண்டிக்கொள்ள முனையமாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

சரிதம் தெரியாமல் - அதன் பெறுபேறுகள் புரியாமல் - ஆழம் தெரியாமல் காலைவிடுவது போல - இவ்விவகாரத்தில் தமது மூக்கை நுழைத்துக் கொண்டுள்ளார் போலும் யாழ். இராணுவத் தளபதி.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் இன ஒழிப்பு அடக்குமுறை தமிழினத்துக்கு எதிராகப் பல் பரிமாண வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழினத்தின் இருப்புக்கு ஆதாரமான மொழி உரிமை முதலில் பறிக்கப்பட்டது. அதனையடுத்து கல்வி உரிமைக்கும் வேலைவாய்ப்பு உரிமைக்கும் ஆப்பு வைக்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமை பிடுங்கப்பட்டது. திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழரின் தாயகம் கபளீகரம் செய்யப்பட்டது. தமிழரின் சமய, பண்பாட்டு வாழ்வுக்கும் பங்கம் விளைவித்த பேரினவாதம், தமிழரின் உயிர்வாழும் உரிமையையும் தட்டிப்பறிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்த அரச ஒடுக்கு முறையில் அதிகம் தாக்குதலுக்கு உள்ளானது தமிழரின் கல்வித்துறைதான். இளம் தமிழ்ச் சமுதாயம் இனப்பாகுபாடு மற்றும் ஒதுக்கல் காரணமாக உயர்கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளை இழந்தது.

இதுவே, இளம் சமுதாயத்தைப் பேரினவாதத்துக்கு எதிராக வீறுகொண்டு எழச் செய்து ஒரு புதிய - ஆயுதவழி - புரட்சிக்கு வித்திட்டது அந்தப் புரட்சியின் சீற்றத்தைத்தான் - கிளர்ச்சியைத்தான் - இன்று தாங்க முடியாமல் - எதிர்கொள்ள முடியாமல் - அல்லல்பட்டுஅவலப்படுகின்றது தென்னிலங்கை.

அந்தப் பட்டறிவை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத அரச இராணுவம் மீண்டும் தமிழரின் இளம் தலைமுறையை - மாணவ சக்தியை - சீண்டிப்பார்க்க முனைகிறது; முயல்கிறது. அதையே யாழ்.தளபதியின் செய்கை புலப்படுத்துகின்றது. பட்டறிவுப் பாடம் விளங்காததால் ஏற்பட்ட வினை இது.

### திருநெல்வேலிச் சந்தியில் நேற்று

# உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்களால் யாழ். படைத்தளபதியின் கொடும்பாவி எரிப்பு!

## படையினர் குவிக்கப்பட்டதால் சிறிது நேரம் பதற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச் 5

தமிழ் மக்களின் சிவில் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி தலையிடுவதைக் கண்டித்து உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் இராணுவத் தளபதியின் கொடும்பாவியை நேற்று திருநெல்வேலிச் சந்தியில் வைத்து தீயிட்டுக் கொளுத்தினர். தமிழ் மக்கள் மீதும் தமிழ் மாணவர்கள் மீதும் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அழுத்தங்கள் கொடுத்துவருகிறார் என்று தெரிவித்து, அதனைக் கண்டித்தே இந்தக் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் யாழ். பலாலி வீதியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஒன்று திரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ். மாவட்ட இராணுவத்தளபதியின் கொடும்பாவியை உயர் தொழில்நுட்ப நிறுவனம் முன்பாக வைத்து வெடிகளைக்கொளுத்தி ஒப்பாரி' வைத்து கத்தினர். அதன்பின்னர் கொடும்பாவியை கயிற்றில் கட்டி பலாலி வீதியூடாக திருநெல்வேலிச்சந்திக்கு 'பறை' மேளங்கள் முழங்க பட்டாசுகளைக் கொளுத்தியவாறு இழுத்துச் சென்றனர் - அவ்வேளையில் பலாலி வீதியால் படையினரின் வாகனத் தொடரணி ஒன்று வந்துகொண்டிருந்தது.

கொடும்பாவியை மாணவர்கள் இழுத்துச் செல்வதைக் கண்டதும் சற்றுத் தொலைவில் - வீதி ஓரமாக - படையினர் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு நின்றுவிட்டனர்.

கொடும்பாவி திருநெல்வேலிச்சந்தியை சென்றடைந்ததும் சந்திக்கு நடுவே வைத்து மாணவர்கள் அதற்குத் தீமூட்டினர். ஏராளமான மாணவர்களும் பொதுமக்களும் சூழ்ந்து நிற்க அங்கு இராணுவத் தளபதியின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. சற்று நேரத்தில் அங்கு வந்த படையினரும் கலகம் அடக்கும் பொலீஸாரும் எரிந்துகொண்டிருந்த கொடும்பாவியை நோக்கி ஓடிவந்தனர் -

இதனையடுத்து மாணவர்கள் அந்த இடத்தில் இருந்து கலைந்து சென்றனர் -

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. அன்றாடத் தேவைகளுக்காக திருநெல்வேலிச் சந்திக்கு வந்த மக்கள் அவசர அவசரமாக வீடுகளுக்குத் திரும்பினர்.

சுமார் அரை மணிநேரத்தின் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

(த-7-86)

# தளபதியின் கொடும்பாவியில் மூண்ட தீயை விளக்குமாற்றினால் அணைத்தார் சிப்பாய்

யாழ்ப்பாணம்,மார்ச் 5

திருநெல்வேலிச் சந்தியில் நேற்று மாணவர்களால் யாழ். படைத்தளபதியின் கொடும்பாவி எரியூட்டப்பட்டபோது திடீரென எங்கோ இருந்து ஓடிவந்த பெருமளவு படையினர் அங்கு கூடிநின்றவர்களைக் கலைத்தனர். சந்தியின் நடுவே படைத்தளபதியின் கொடும்பாவி கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. படைச்சிப்பாய்களில் ஒருவர் கொடும்பாவியை நோக்கி ஓடோடிச்சென்றார். கொடும்பாவியின் கழுத்துப் பகுதியில் பிடித்து தர தரவென இழுத்து வீதி ஓரமாகக்கொண்டு சென்றார் அந்தச் சிப்பாய்.

பின்னர் அருகிலுள்ள கடை ஒன்றுக்குச் சென்று கடைக் காரரிடம் 'விளக்குமாறு' ஒன்றை வாங்கிவந்த சிப்பாய் அந்த விளக்குமாற்றினால் தளபதியின் கொடும்பாவியில் அடித்து அதில் மூண்டிருந்த தீயை அணைத்தார். அவரது அடியின் வேகத்தில் கொடும்பாவியில் பிடித்திருந்த தீ அணைந்ததுடன் கொடும்பாவியும் சுக்குநூறாகிச் சிதறிப்போனது.

(த-7)



தமிழ்மக்களின் சிவில் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தலையிடுவதைக் கண்டித்து நேற்றுக்காலை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியின் கொடும்பாவியை எரித்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பலாலி வீதியூடாக திருநெல்வேலிச் சந்திக்கு இழுத்துச் செல்வதையும் சந்தியில் வைத்துக் கொடும்பாவி எரிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்றே' இயக்குநர் இல்லை!

## இதனால் நோயாளர்கள் அசௌகரியம்

வடமராட்சி, மார்ச் 5

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சகல வளத்துடன் 'எக்ஸ்றே' இயந்திரம் இருந்தும் 'எக்ஸ்றே' படம் எடுக்க ஆள் இன்மையால் 'எக்ஸ்றே' பிரிவு மூடப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையின் 'எக்ஸ்றே' படப்பிடிப்பாளர் ஒருவர் முன்னர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு பணியாற்றிவந்தார். கடந்த நவம்பர் மாதத்துடன் இந் தியப் பிரஜையான அந்தப் படப்பிடிப்பாளரின் ஒப்பந்தம் முடிவுற்றதையடுத்து அவர் தாயகம் திரும்பினார்.

மீண்டும் அவர் தனது சேவையைத் தொடர கடந்த ஜனவரிமாதம் இலங்கை வந்தபோது குடாநட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைக் காணரம் காட்டி அவரை யாழ்ப்பாணம் வர அனுமதிக்கவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 'எக்ஸ்றே' படப்பிடிப்பாளர் இன்மையால் அப்பிரிவு மூடப்பட்டுள்ளதுடன் எக்ஸ்றே படம்பிடிப் பதற்காக நோயாளர்கள் யாழ். போதனா வைத்தி யசாலைக்கும் தனியார் வைத்தியசாலை களுக்கும் செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளன.

(த-173)

# சட்டவிரோத மதுபான விற்பனை ஆவரங்கால் மேற்கில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

ஆவரங்கால் மேற்குப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்துள்ளதால் மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

பெருமைமிக்க இக்கிராமத்தில் அதிகரித்துள்ள சட்ட விரோத மது விற்பனையை பூரணகட்டுப்பாட்டில் கொண்டுவர அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் என பொது மக்கள் பலரும் தெரிவித்துள்ளனர். பிரபலம் வாய்ந்த பாடசாலைகள், கோயில்கள், சனசமூகநிலையங்கள் உள்ள இக்கிராமத்தில் சமூகசேவையாளர்களும் சமாதான நீதிவான்கள் பலரும் உள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் இங்கு சட்டவிரோத மது விற்பனை பெருமளவில் இடம்பெறுகிறது.

(த-)

### உதயவாக்கு

உண்மை பேசுவது கசப்பாக இருப்பினும் அதுவே எல்லாவற்றிலும் சிறந்தது.

- ஓர் அறிஞர்.

### நாளை

மாசி 22
திங்கட்கிழமை
06.03.2006
திதி: ஸப்தமி
முன்னிரவு:07.34 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
முற்பகல் : 08.45
சுபநேரம் : 12.25 - 01.55
ராகுகாலம் :07.55 - 09.25
(யாவும் பழைய நேரப்படி)

# மகளிர் தினத்தை முன்னிட்டு நகரில் நேற்று பெண்கள் பேரணி

வலி.வடக்கு,மார்ச் 5

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கியூடெக், கரித்தாஸ் நிறுவனங்கள் இணைந்து நேற்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கொண்டாடினார்கள்.

நண்பகல் ஒரு மணிக்கு யாழ். முனியப்பர் ஆலயத்திற்கு அருகில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட பெண்கள் காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையைச் சென்றடைந்தார்கள். இவ் ஊர்வலத்தில் பெண்கள் தமக்கு எதிராக இடம்பெறும் பல்வேறு அநீதிகளும் விலக்கப்பட வேண்டும் எனக் கோரும் வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கிச்சென்றார்கள்.

வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் கியூடெக் நிறுவன மகளிர் பொறுப்பாளர் செல்வி பத்மா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் திட்ட இணைப்பாளர் திருமதி செறின், கியூடெக் நிறுவன இயக்குநர் வண. பிதா ஜெயக்குமார் அடிகளார், ஜோசேப் பாலா உட்பட மற்றும் பலர் ஏற்றினார்கள். தொடர்ந்து சிறப்புற நடைபெற்ற நிகழ்வுகளில் பலர் உரையாற்றினர்.

(படங்கள் 14 ஆம் பக்கத்தில்)

(த-86)

# மாணவர்களுக்கு கட்டளையிடும் அதிகாரத்தை இராணுவத் தளபதிக்கு வழங்கியது யார்?

கல்லூரி - பாடசாலை மாணவர்கள் எவரும் வெளிநிகழ்வுகளில் கலந்துகொள்ளக் கூடாது என யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி கட்டளையிட்டுள்ளதாக அனைத்து ஊடகங்களிலும் செய்தி வெளிவந்துள்ளது.



இவர் தமிழீழத்தின் குடியரசுத் தலைவரா? அல்லது தலைமை அமைச்சரா? அல்லது முதல்வரா?

இவ்விதம் அதிகாரத்தொனியில் ஆணவத்தோடு எமக்குக் கட்டளையிடுவதற்கு இவர் யார் என்று நாம் கேட்க விரும்புகிறோம்.

சிறிலங்கா வேறு தமிழீழம் வேறு. இவை இலங்கைத்தீவில் உள்ள இரு நாடுகள். இதனை உணராது எம் மண்ணில் வலோக்காரமாகக் குடிபுகுந்து தம்படைகொண்டு எம்மைத் தாக்கி வருபவர்கள். இத்தளபதிக்கு எங்கள் மாணவர்கள் வாழ்வில் தலையிடுவதற்கு யார் அதிகாரம் வழங்கியுள்ளார் என அறிய விரும்புகின்றோம்.

20 ஆண்டுகளுக்கு மேலாக யாழ். மண்ணில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேலான எல்லைப்பரப்பை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அபகரித்து அட்டகாசம் செய்யும் இவர்கள் எம் மாணவர் உரிமையில் தலையிடுவதற்கு என்ன உருத்துண்டு.

ஏழு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இம்மண்ணில் இருந்து வெளியேறுவதற்குக் காரணமாக விளங்கிய இச் சிங்கள இராணுவம் எம்மை மண்ணிலேயே வேரோடு - வேரின் மண்ணோடு - சாய்க்க முனைகின்ற சிங்களப்படை எம் பிள்ளைகளின் வாழ்வில் குறுக்கிடுவதற்கு யார் இவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளார்கள் என்பதே எமது கேள்வியாகும்.

**தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய எம்நாடு**

''எம் தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய'' இம்மண்ணில் இருந்து எம்மை அப் புறப்படுத்தியுள்ள சிங்களப்படை எம் மரபுவழிக் காணிகளின் எல்லைகளைக் கூட அடையாளம் காணமுடியாத அளவிற்கு அபகரித்து எம் வீடுகளைத் தரைமட்டமாக்கியதுடன் தமது வசதிக்காக தாம் விரும்பிய வீடுகளில் குடிகொண்டும் அங்குள்ள வயற்காணிகளையும் தோட்டக் காணிகளையும் அடாத்தாக அனுபவித்துக் கொண்டும் தமிழ் மக்கள் தாம் பிறந்த மண்ணில் மீண்டும் வாழ்வுபெற முடியாத நிலையில் தாம் சாவதற்கு முன்பு அம் மண்ணைப் பார்ப்பதற்குக் கூட உரிமை வழங்க மறுக்கின்ற சிங்கள இராணுவம் எங்கள் பிள்ளைகளின் வாழ்வில் கட்டளையிடுதற்கு என்ன தகுதியுண்டு?

எம் சைவக்கோயில்கள் மீதும் கிறிஸ்தவ கோயில்கள் மீதும் பள்ளிவாசல்கள் மீதும் குண்டுகளை வீசி உயிர்களைச் சிதறடித்துக் கட்டடங்களைத் தரைமட்டமாக்கியவர்களும் இச் சிங்களப்படைகளே.

**மாணவர்களின் எதிர்காலத்தை பாழடித்த படையினர்!**

இவை அனைத்திற்கும் மேலாக எம் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பள்ளிச் சிறார்களுடைய வாழ்வைப் பாழடிக்கின்ற முறையில் பள்ளிகள் மீதும் கல்லூரிகள் மீதும் குண்டுகள் வீசி பாழாக்கிய நிலையில் தம் வசதிக்காக சில பாடசாலைகளைத் தமது இராணுவ முகாம்களாக்கி பிள்ளைகள் அப் பள்ளிகளில் கல்வி பயில முடியாது அவர்கள் வாழ்வை ஏக்கம் நிறைந்ததாக்கியதுடன் கிருஷாந்தி போன்ற பள்ளி மாணவிகளை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி சாகடித்து ஆண்டுகள் பல உருண்டோடிய நிலையிலும் நீதிமன்றமே நீதி வழங்கத் தயங்கிய நிலையில் எம் பள்ளிச்சிறார்களையும் கல்வியாளர்களையும் பார்த்து எவரும் வெளி நிகழ்வுகளில் கலந்துகொள்ளக்கூடாது என்று கட்டளையிடுவதற்கு இவர்கள் என்ன எம் கடவுளர்களா என்று வினாத்தொடுக்க விரும்புகின்றோம்.

**அறிவுடைமைக்கு அழகு துணிவுடமை; எம்மவர் இதை அறியவேண்டும்.**

'அறிவுடைமைக்கு அழகு துணிவுடமை' என்ற வள்ளுவன் குறளை நன்கு கற்றறிந்த யாழ். கல்விப் பணிப்பாளர்கள் யாழ். படைத் தளபதிகளைச் சந்தித்த போது குடாநாட்டு மாணவர்களின் இயல்பான கற்றலுக்குப் படையினரின் நடவடிக்கை இடையூறாக இருக்கிறது என்று வாய்திறந்து எதுவும் பேசாது அமைதிகாத்து - மௌனம் பேணினர்.

இவர்களுள் சிலர் யாருடன் எதைப்பேசுவது எதைப் பேசக்கூடாது என்பதைத் அறியாத நிலையில், படைத்தளபதிகளிடம் இலவச பாடப்புத்தகங்கள் வழங்களில் உள்ள குறைபாடுகள் குறித்து முறைப்பாடு செய்திருப்பது தமிழர் மானத்தை விலைகூறும் நிகழ்ச்சியாகும்.

**யாழின் இன்றைய கல்வி நிலை விளக்கப்பட்டதா?**

படைத்தளபதியின் அழைப்பை ஏற்ற யாழ். கல்விப்பணிப் பாளர்கள் துணிவோடு யாழ்ப்பாணக் கல்வி நிலையைப் பற்றி விளக்கியிருக்கவேண்டும். பள்ளிக்கூடங்களோ, கல்லூரிகளோ இயங்க முடியாத நிலையில் மாணவர்கள் படுகின்ற அவல நிலையை எடுத்துரைத்திருக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகமே முறையாக இயங்க முடியாது மூடப்பட்ட நிலையைக் கூறியிருக்கவேண்டும். இவையொன்றையும் எடுத்துரைக்காது படைத்தளபதிகளிடம் சென்று பாடப்புத்தகங்கள் வழங்கு வதற்கு உதவவேண்டும் என வேண்டுகோள்விடுத்தது எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

மேற்குறித்த விடயங்களையொட்டி துணிவோடு பேச வேண்டியது யாழ். கல்விப் பணிப்பாளரின் கடமையாகும். இதனைத் துணிவோடு நிறைவேற்ற முடியாத நிலையில் தமிழ்ப் பேராளர்கள் (பிரதிநிதிகள்) ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் துணையோடு தான் நாம் உங்களுடன் பேசவருவோம் என்று இவர்கள் எடுத்துரைத்திருக்கவேண்டும். கொள்கையோ, கோட்பாடோ துணிவோ அற்ற கல்விப்பணிப்பாளர்கள் எப்படித்தான் எம் மாணவ சமுதாயத்தைக் கட்டிக்காக்கப் போகிறார்கள்; வளர்த்தெடுக்கப் போகிறார்கள் என்பது எம்மை எதிர்நோக்கும் மிகப் பெரும் கேள்வியாகும்.

''அஞ்சி அஞ்சிச் சாவார் இவர், இவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே'' என்ற பாரதியின் பாடலை நினைவுகொண்டு அறிவுடைமைக்கு அழகு துணிவுடமை என்பதை உணர்ந்து இக்கல்வியாளர்கள் இனி மேலாவது சிந்தித்துச் செயற்படுவார்களா?

"Intellectual assertion is an essential quality in an educationalist"

என்ற ஆங்கில வழக்காற்றை யாழ். கல்வியாளர்கள் நினைவு கொண்டு செயற்படுவது எம் வருங்காலத் தமிழ்ச் சமுதாயம் தலைமிர்ந்து வாழ்வதற்கு வழிவகுக்கும்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக - நானிலத்திற்கு நன்மை பயப்பவையாக விளங்க வேண்டும் என நயந்த வேண்டுகிறோம். எவர் மீதும் குற்றம் காண்பது எமது நோக்கமல்ல மாறாக எங்கும் நிறைவு நிலவ வேண்டும் என்பதே எமது நோக்கம். அறிவுலகத்திடம் இதனை நாம் எதிர்பார்ப்பதை எவரும் குற்றம் எனக்கொள்ளார் என நம்புகின்றோம்.

**மா.க.ஈழவேந்தன்**

---

## 3 ஆம் ஆண்டு நினைவுகளில்

தோற்றம் 02 - 09 - 1929



மறைவு 22 - 02 - 2003

**திருமதி கனகசிங்கம் இராசம்மா**

*எண்ணத்தில் நிலையாரும் எங்கள் அன்னையே!*
*மண்ணுக்குள் உரமாகிய மாயம்தான் ஏனோ!*
*கண்ணுக்குள் கருணை கொண்டு காட்சி தருவாய்*
*விண்ணுக்குள் ஒளிந்து வித்தாகும் சுடர் ஒளியே*
*எம் உயிர் உள்ளவரை நாம் மறவோம் உமை.*

அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

வாதரவத்தை,
புத்தூர்.

(47585)(26.11)

---

## தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இல:- 397/05
தன்மை :- காணி
பெறுமதி :- 15,00000/

வழக்காளி
திருமதி:- சரோஜினிதேவி, தர்மலிங்கம்.
இல:- 40, சபாவதி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

எதிர்
செல்லப்பா, சண்முகலிங்கம்,
மணியம்பதிலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி எதிராளிக்கு!

இந்த 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் வழக்காளி எதிராளியாகிய உமக்கு எதிராக இவ் வழக்கை இம் மன்றில் தாக்கல் செய்து உரியமுறையில் எதிராளியான உமக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பித்து அறியத்தந்திருந்தும் நீர் இற்றைவரை மன்றுக்கு சமுகம் கொடுக்காமையால் இப் பகிரங்க அறிவித்தலை பத்திரிகை ஊடாக பிரசுரிக்கின்றோம். இப்பிரசுரம் ஊடாக பகிரங்க அறிவித்தல் உமக்குக் கிடைக்கப் பெற்று, 21 நாள்களுக்குள் மன்றில் தோன்றி இவ்வழக்குத் தொடர்பான எதிர் நிறுவல் ஏதேனும் இருப்பின் அதனை சட்ட முறைப்படி மேற்கொள்ளுமாறும் தவறின் இம்மன்றின் ஊடாகவே வழக்காளியை ஒருமுக விளக்கம் மேற்கொள்ளப்பட்டு வழக்காளி தரப்பின் உரிமைக்கோரிக்கைகளை அவர் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இப்பகிரங்க அறிவித்தல் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

*'மன்றின் கட்டளைப்படி'*

(பதிவாளர்)
மாவட்டமன்று,
யாழ்ப்பாணம் (பளை).

வரைவு
வழ/ சட்டவாளர், (47592) (26.11)

---

## மரண அறிவித்தல்கள்



### R.V.A. மாரியப்பன்

*(பழைய மார்க்கட் - நெல்லியடி)*

நெல்லியடி பழைய மார்க்கட் அழகர் களஞ்சியம் உரிமையாளரும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகர்சாமி செட்டியார் மாரியப்பன் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகர்சாமி செட்டியார் - ஏரம்மாள் தம்பதியரின் புதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அழகேசன் (நிமலன்), கலைவாணி, சரவணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராமச்சந்திரன், சுப்பிரமணியம், பரமசிவம், பாலகிருஷ்ணன் (சுவிஸ்), மோகன், கணேசன் (விநாயகர் களஞ்சியம் - நெல்லியடி), நாகராஜ் (சுவிஸ்), பாஸ்கரன், கனகராஜ் (சுவிஸ்), இராமலட்சுமி, ஜெயராம், சுப்புலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் சகோதரனும் தெய்வானையின் மாமனாரும் தனுஷியாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகையன் கோயிலடி, நெல்லியடி.*
*அழகர் களஞ்சியம், நெல்லியடி, பழைய சந்தை.*
*நெல்லியடி, பழைய மார்க்கற் வர்த்தகர்கள்.*

(47591)(26-11)

### A.S.பஸ்ரியன் (குணம்)



நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவு வீமன்காமத்தை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து பஸ்ரியன் (குணம்) 03-03-2006 அன்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து (பொன்னையா) சவரிமுத்து-சவிராசி (மாணிக்கம்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனவல்பிள்ளை - மேரிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் றோஸ்பெனின்டா பெனடிற்ரின் (குஞ்சு) அன்புக் கணவரும் இஷாலினியின் (soft word system (PVT) Ltd. Col-03) அன்புத் தந்தையும் A.S.அன்ரனிப்பிள்ளை Dayani Industries & Anto Electricals,Jaffna) A.S.பற்றிக் செவேந்திரனின் அருமைச்சசோதரரும், தயாவதி, லிண்டா ஆகியோரின் மைத்துனரும் பிரியாவின் சிறிய தந்தையும் பிருந்தா, பிரதீனா, அனோஜாவின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 480/156, றொக்ஸி தோட்டம், வெள்ளவத்தை இல்லத்தில் வைக்கப்பட்டு, இன்று (05-03-2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்கிசை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

480/156, றொக்ஸி தோட்டம்,
வெள்ளவத்தை, கொழும்பு-6
T.P.No.: 236147-0773126912.

தகவல்:
மனைவி (குஞ்சக்கா),
A.S.அன்ரனி,A.S.பற்றிக்.

(47595)(26.11)

---

## சமய சந்நிதி

தென்மராட்சி,மார்ச்5

உசன் கந்தசாமி ஆலயத்தில் 108 கலச அபிஷேக கந்தஹோம பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

அருள்வாக்குச் சித்தர் குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள் தலைமையில் இவ் விழா நடைபெறவுள்ளது. (3-117)

***

சுழிபுரம்,மார்ச்5

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் பெரியதம்பிரான் மகோற்சவம் நேற்று கொடியேற்றத்டன் ஆரம்பமானது. ஒன்பதாவது நாள் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-29)

***

யாழ்ப்பாணம்,மார்ச்5

புங்குடுதீவு கிழக்கு சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் நித்திய நைமித்திய பூஜைகள் மற்றும் உற்சவங்கள் சிவஸ்ரீ.க.குகதாசக் குருக்கள் தலைமையில் இடம்பெறுகின்றது. (3-14)

***

நயினாதீவு தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். தினமும் இரவு 8 மணிக்கு மகாபாரதம் பற்றி நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா தொடர் இசைச் சொற்பொழிவாற்றுவார். (3)

# உலகளாவிய வர்த்தக ஆதிக்கப் போட்டி என்ற அடர்ந்த காட்டிற்குள்ளேயே தமிழீழத்திற்கான பாதை

உலகளாவிய ரீதியிலான இஸ்லாமிய எதிர்ப்பு யுத்தமும் இந்துசமுத்திர ரீதியிலான சீன எதிர்ப்பு யுத்தமும் தமிழீழப் போராட்டத்தில் பிரதிபலிக்கத் தொடங்கிவிட்டன. இந்து சமுத்திரத்தில் சீனா தீவிர வர்த்தக ஆதிக்கப் போட்டியில் ஈடுபடத் தொடங்கியதும், இலங்

கைக்கு எட்டும் தூரத்திற்கு வந்துவிட்டதென்பதைப் பறைசாற்றும் விடயமாகும். அத்துடன், இலங்கைத் தீவும் அமெரிக்க இராணுவத தளத்திற்கு இடமாகி விட்டால் இந்துசமுத்திர ஆதிக்கத்திற்கான அமெரிக்க தேவை பூர்த்தியாகி விடும் அல்லது இலங்கை சீனாவின்

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வீதிப் போக்குவரத்து அபிவிருத்திக்கென சீனா நிதியுதவி அளிப்பதை மேற்படி நாடுகள் கசப்புடன் நோக்குகின்றன. இதனை நீண்டகால இராணுவத்திட்டத்தின் ஒரு பகுதியாக அவை கருதுகின்றன. ஆதலாலேயே தமது வெளிநாட்டு நிதி

கைகொடுக்கும் நிலைக்கு வந்து விட்டால், இந்தியாவை அந்த நாட்டுக்குள்ளே உள்ளேயே சிறைப்பிடித்து விட்டு பின்பு இந்தியாவுக்குள் வர்த்தக ஊடுருவல்களை இலகுவில் மேற்கொள்ளலாமென நம்புகின்றது.

தற்போது இந்தியாவுக்குள் சீனாவின் பட்டுத்துணி வர்த்தக இந்தியாவின் கிராமிய ஆடைத்தொழில் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்க வல்லதாய் அமைந்துள்ளது. ஒரு கிராமிய இந்தியக் குடும்பத்தின் மூன்று நாள் உழைப்பின் மூலமே ஒரு சேலையை அவர்களால் உற்பத்தி செய்ய முடிகின்றது. ஆனால், சீனத்துணியின் மெருகுடனும் விலையுடனும் மேற்படி இந்தியத்துணி போட்டியிடமுடியாத நிலையில் இந்திய நெசவாளிகள் தம் தொழிலை கைவிட்டு பெரும் சீர்குலைவுகளுக்கு ஆளாகின்றனர். இப்பட்டாடை வர்த்தகம் உலகமயமாக்கலின் ஒரு கூட்டு விரிவாகும். அமெரிக்கா தலைமையிலான உலமயமாக்கல் நலன்களை சீனாவும் தனக்குச் சாதகமாக இணைத்துக் கொண்டது. மேலும் சீனாவில் தயாராகும் தெய்வ விக்கிரகங்கள் இந்தியச் சந்தையில் செல்வாக்கு மிகு பண்டமாய் உள்ளது. இதனை விட மற்றும் இயந்திர உற்பத்திப் பண்டங்கள் வேறு.

இப்படி இந்தியாவிற்கு உள்ளும் புறமும் சீனா ஒரு சவாலாக வருவதை இந்திய முதலாளிகள் வெறுப்புடன் நோக்குகின்றனர். இதில் அவர்கள் அமெரிக்க- ஜப்பானிய கூட்டுடன் இணைவதன்

## சீனாவின் பக்கம் இலங்கை சாயாமல் தடுப்பதே ஜப்பானியத் தூதுவரின் கண்டனத்தின் பின்னணி

கையின் இப்பிரச்சினையான இன்னொரு புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.

தற்போதைய உலக அரசியல் என்பது வர்த்தக சாம்பிராச்சியத்திற்கான ஆதிக்கப்போட்டி ஆகும். இப்பின்னணியில் வைத்தே தமிழீழப் போராட்டத்திற்கான அரசியல், இராணுவப் பொருளாதாரப் பரிமாணங்களை எடைபோட வேண்டும். அத்துடன் சிங்கள ஆட்சியாளரின் மனப்பாங்கு எத்தகைய சக்திகளுடன் எவ்வாறு இணைந்து செல்கின்றது என்பது நாணயத்தின் மறுபக்கமாகும்.

இன்று உலக வர்த்தக சாம்பிராயச்சியத்தின் சக்கரவர்த்தி அமெரிக்கா. அந்தச் சக்கராதிபத்தியத்தின் பெருநில மன்னர்களாய் உள்ளோர் ஐரோப்பிய ஒன்றியநாடுகளும் ஜப்பானும் ஆகும். அச் சாம்ராச்சியத்தின் குறுநில மன்னர்களாய் உள்ளோர் சீனாவும் இந்தியாவுமாகும். மேற்படி இந்நாடுகள் அனைத்தினதும் இறுதி இலட்சியம், உலக வர்த்தகத்தைத் தம்மிடையே பங்குபோடுவதுதான்.

இப்பங்குபோடும் போட்டியில் மேற்படி நாடுகளுக்கிடையே ஒற்றுமையும் வேற்றுமையும் உடன்பாடுகளும் முரண்பாடுகளும் உள்ளன. மேற்படி அரசுகளுக்கு இடையேயான போட்டிகளுக்குள்ளும் ஒற்றுமை வேற்றுமைக்குள்ளும் சிக்குண்டுள்ள ஒரு விவகாரமாகவே தமிழீழப் பிரச்சினை உள்ளது.

“பூனை வெள்ளையோ கறுப்போ அது எலி பிடித்தாற்போதும்” என்ற சீனத் தலைவர் டெங்-கியா-ஓ-பீங்கின் அரசியற் பொருளாதாரத் தத்துவத்தின் கீழான சீன பொருளாதார மாற்றத்துடன், உலகளாவிய ரீதியிலான வர்த்தக ஆதிக்கப் போட்டிக்கு சீனா தன்னைத் தயார்ப்படுத்தத் தொடங்கியது.

சோவித் யூனியனது வீழ்ச்சியைத் தொடர்ந்து, 1990களின் முற்பகுதியில் சீனா தனது வர்த்தக நலனுக்காக இந்து சமுத்திர ஆதிக்கப்போட்டியில் குதிக்கத் தொடங்கியது. இது இந்து சமுத்திரத்தில் பரந்த வர்த்தக ஆதிக்கத்தைக் கொண்டு விளங்கும் அமெரிக்காவையும் அதன் முதற்றர ஆசியக் கூட்டாளியான ஜப்பானையும் உடனடியாகப் பாதிக்கத் தொடங்கியது. அத்துடன், இந்து சமுத்திர நாடான இந்தியாவை அதன் கருவறைக்குள்ளேயே சிறைவைக்கும் நடவடிக்கையாகவும் மாறலாயிற்று.

ஆதலால் இதுவிடயடத்தில் அமெரிக்கா - ஜப்பான் - இந்தியா என்பன இந்துசமுத்திரப் பிராந்திய அணியைப் படிப்படியாக அமைக்கும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கின. இது ஒரு வியூகம்.

### தவிர்க்கப்பட முடியாத அமெரிக்க - இந்தியக் கூட்டு

இந்துசமுத்திரத்திரம் ஏற்கனவே அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ்த்தான் உள்ளது. ஈராக், ஆப்கானிஸ்தான் என்பவற்றின் மீதான படையெடுப்பின் மூலம் இந்துசமுத்திரத்தின் பெரும் பகுதியை அமெரிக்கா தனது நேரடி இராணுவ மண்டல மாக்கிவிட்டது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் இருப்பதென்பது இந்தியாவின் குடுமி அமெரிக்காவின்





கொய்சுமி




கையில் வீழ்ந்திடாது தடுக்கவேண்டும். இதற்கு இந்திய - அமெரிக்க கூட்டு தவிர்க்கப்படமுடியாததாகும்.

ஆனால், அமெரிக்காவின் இஸ்லாமி எதிர்ப்பு யுத்தம் இந்தியாவின் நலன்களோடு இணைவதாலும் அமெரிக்காவின் சீன எதிர்ப்பு இந்தியாவின் நலன்

யுதவிகளை இலங்கை அரசு முறையற்ற வகையில் பயன்படுத்துகின்றது என்ற வகையான சீற்றங்களை இவ்வாரம் கொழும்பில் வைத்து இலங்கைக்கான ஜப்பானிய தூதர் வெளியிட்டுள்ளார். உண்மையில் சீனாவிடம் இலங்கையரசு சாய்ந்துபோக

## அமெரிக்காவின் கைக்கு எட்டும் தூரத்தில் இந்திய நாட்டின் குடுமி.....!



புஷ் - மன்மோகன் சிங்

களோடும் இணைவதாலும் அமெரிக்க - ஜப்பானிய சங்கிலிக் கொழுக்கியுடன் இந்தியா தன்னையும் ஒரு கொழுக்கியாகக் கொழுவி இணைத்து வருகின்றது.

சீனா தனது பர்மியத் தளங்களுடன் இலங்கையும் இணைப்பதன் மூலம் இந்து சமுத்திரத்தை கவ்விப் பிடித்து

நினைப்பதைக் கண்டிப்பதற்கான ஓர் அறிவிப்பே இது ஆகும்.

### இந்தியாவைச் சிறை வைத்து வர்த்தக ஊடுருவல்களைச் செய்ய முனையும் சீனா

தென்னாசிய நாடுகளினால் இந்தியாவைச் சுற்றி வளைத்து அதன் எல்லைக்குள் சுருக்கிச் சிறை வைத்து விடு

## இந்து சமுத்திரப் பிராந்திய அணியை அமைக்கும் வியூகத்தில் 3 நாடுகள்

விடலாமென நம்புகின்றது. ஆதலால் இலங்கைத் தீவில் சீன செல்வாக்கு வளர்வதை மேற்படி அமெரிக்கா - ஜப்பான் - இந்தியா போன்ற கூட்டு நாடுகள் விரும்பவில்லை.

வதே சீனாவின் அரசியற் பொருளாதார இராணுவத் திட்டமாகும். இந்தியாவின் இருமருங்கிலும் பர்மா, பாகிஸ்தான் என்பன சீனாவிற்கு கைகொடுக்கும் இன்றைய நிலையில் இலங்கை யும்

மூலம் சீனாவை எதிர்கொள்ள விரும்புகின்றனர். இவ் விவகாரத்தில் இலங்கை இராணுவ அர்த்தத்தில் சீனாவிடம் வீழ்ந்துவிடக்கூடாது என்பதே இந்திய ஆளும் வர்க்கத்தின் முதற்தர அவாவாகும். இந்தியாவின் இத்தகைய நெருக்கடியைப் பயன்படுத்தி அமெரிக்க - ஜப் பானிய வர்த்தக ஆதிக்கத்தை இந்து சமுத்திரத்தில் இலகுபடுத்த மேற்படி

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

இரு அரசுகளும் முயல்கின்றன.

இப்பின்னணியில் மேற்படி அரசுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஜப்பான், இந்தியா, சீனா என்பன தம்மிடையேயான உலகளாவியதும் பிராந்திய ரீதியானதுமான வர்த்தக ஆதிக்கப் போட்டி யுத்தத்திற்கான ஒரு துருப்புச் சீட்டாக தமிழீழப் பிரச்சினையை நோக்குகின்றன. கூட்டிக் கழித்துப் பார்க்குமிடத்து, தற்போது இந்தியாவும் அமெரிக்காவும் தான் இலங்கைத்தீவில் ஆதிக்க நிலையில் மேலோங்கியுள்ளன. ஆனால், இவர்கள் தம்மை இப்போது எதிர்கொள்ளத் தொடங்கியுள்ள சீனாவிற்கு எதிரான மூலோபாயத்திலிருந்தே இலங்கைத் தீவை அணுகப்போகின்றனர்.

இப்பின்னணியிலேயே தமிழீழப் போராட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் பேச்சுவார்த்தைகளும் இன்னோரன்ன விடயங்களும் இடம்பெற்று வருகின்றன. இந்த அடர்ந்த காட்டுக்குள் தான் தமிழீழத்திற்கான பாதையை நாம் கண் டறிய வேண்டியுள்ளது. இவ்வகையில் தமிழீழப் போராட்டத்தின் பக்கமே அனைத்து புரட்சிகரத் தன்மைக்கான தளம் உள்ளது. ✱

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

லீசிங்கடன் முறையில் 180CC பல்சர் மோட்டார் சைக்கிள் (அலோவீல்), **Sharp washing Machine** 9500, ஆண்களிற்கான துவிச்சக்கர வண்டி, **Sun TV.**சிம்காட்டுடன், **(x-Sat)** றிசீவர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: **0776 365950.** (47538)

ஸ்ரூடியோப் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ள **Camara Flash** விற்பனைக்கு உண்டு. **Boby Studio 33, Grousalt Road, Jaffna. T.P. 0777 727194.** (47565)

40 அடி சோடினைப் பந்தல், மணவறை விற்பனைக்குண்டு. தொடர்பு: **S.** தயா, இணுவில் சந்தி,(கோயில் வாசல்). (47553)

புதிய கணனி டிஜிற்றல் கமரா, **Sony DVD Set 3500w** விற்பனைக்குண்டு. தொடர்பு: **No.5,** மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (47584)

## வீடும் தளபாடங்களும் விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் வீடும் பாவித்த தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- **T.P.0777079746 (021 - 222 2638 9a.m.** முதல் **5p.m.** வரை) தரகர்கள் உள்வாங்கப்படுகின்றார்கள். (47538)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

2 மாத வயதுடைய **Parvo, DHL** போடப்பட்ட **Great dane**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.52, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணம். (47579)

## தொலைத்தொடர்பு நிலைய பொருள்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய மேசையும் பூத் **(Booth)** உம் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P. 0776-729694.** (47381)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து முருகன் வீதிக்கு (வெள்ளை வாய்க்கால் வீதி) செல்லும் பாதையில் 2¾பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.0777 796553, 0776279805** (47542)

சுன்னாகம் சந்திக்கு அருகில் கந்தரோடை வீதியில் (சுப்பிரமணியம் வீதியில்) 2¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **0779673557.** (47447)

29 செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் உள்ள 1¼ பரப்புக் காணியுடன் சிறிய வீடு, எல்லா வசதிகளுடனும் விற்பனைக்குண்டு: **T.P.0776745812, 0776198191** (47535)

திருநெல்வேலிச் சந்தைக்கும், பல்கலைக் கழகத்திற்கும் சமீபமாகவுள்ள 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. சிறிய வீடு, கிணறு, மலசலகூடம் உண்டு. எதிர்பார்க்கும் விலை ரூபா 18 லட்சம். பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகொள்ள: பூபாலு **0776594618.** (சி-48133)

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டுக்கு அருகில் புதிய வீடு 3 அறை இணைந்த குளியலறை கொண்டது முற்றிலும் **(Tiles)** பதிக்கப்பட்டது. சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **0773114791, 021 222 6379** (47578)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48015)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், (சைவ போசனம்) 1975, பூரம், சிங்கராசி, 7இல் செவ்வாய் 5'5'' உயரம், கிரகபாவம் 58, **B.B.M** பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி உள்நாட்டு வெளிநாட்டு மணமகன் தேவை. சைவ போசன மணமக்கள் தேவைக்கு தொடர்புகொள்ளவும். 'சிவாலயா சர்வதேச திருமண நிலையம். இல.11,யமுனா வீதி, நல்லூர். **T.P.0776528641** (47437)

யாழ்.கத்தோலிக்க கௌரவ குடும்பம், 29 வயது, அரச பணி வகிக்கும் பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். பொருத்தமான வர்கள் சுயவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2820, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (47550)

## இறைச்சிக் கோழி விற்பனை

**Prima Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். **(Electronic** நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48132)

## வீடு வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழக பலாலி வீதிக்கு அருகில் அமைந்துள்ள 5 அறைகளுடனும் இணைந்த குளியலறையுடனும் சகல வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. **(NGO)** விரும்பத்தக்கது. தொடர்பு: **T.P. 0777291685, 0112591280** (47517)

யாழ்ப்பாணம் வேம்படி சந்திக்கு அருகில் இல.175, முதலாம், குறுக்குத்தெருவில் 9 அறைகளுடன் சகல வசதியும் கொண்ட வீடு, வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: க.கோபால், 87, ஜிம்மா லேன், யாழ்ப்பாணம். **T.P. 6366020**(47512)

யாழ்.பெரியகடைப் பகுதியில் உடனடியாகக் கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு: **021 - 222 7286.** (47575)

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் பகுதி வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு: இல.32, பிரப்பங்குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (47543)

கண்டிவீதி, கச்சேரியடியில் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பிற்கு: **0777 496595.** (47262)

சுண்டுக்குளி பழைய பூங்காவீதி, சொலமன் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: **0777471775** (47593)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974ஆம் ஆண்டு, விசாக நட்சத்திரம், 3ஆம் கால் 7இல் செவ்வாய் தோசமுடைய **MBBS** டாக்டராக தொழில் செய்யும் மணமகனிற்கு படித்த பண்புள்ள மணமகள் தேவை. குடும்ப விவரம் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பிற்கு: விளம்பர இல. 2821, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (47564)

**U.K** யில் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 சுவாதி, துலாம்ராசி, 4இல் செவ்வாய் சூரியனும் 5'6'' 17 கிரகபாவம், **G.C.E A/L Business** மணமகனுக்கும் பிரான்ஸில் வசிக்கும் 1977, அத்தம், கன்னிராசி, 12இல் சூரியன் செவ்வாய் 22 கிரகபாவம், 5'7'' உயரம், **A/L** படித்த, கம்பனியில் பணி புரியும் மணமகனுக்கும் வெளிநாடுகளில் குடியுரிமையுடைய மணமகள்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, **No.11,** யமுனாவீதி, நல்லூர். **T.P. 077-6528641.** (47564)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976 அவிட்டம் 3ஆம் பாதம், கும்பராசி, 12இல் செவ்வாய் சுயதொழில் செய்யும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. வீடு, காணி முதுசம் உடையவர். சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்படமாட்டாது. சகல விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2823, மே/பா உதயன். (47583)

## திருமண சேவை

தங்களின் மனப்பூர்வமான தேடல் உள்நாட்டு மணமகனா?... வேல் அமுதனிடம் உள்நாட்டு மணமகன்மாரின் கடிதக்கோப்புக்கள் ஏராளம்! விவரங்களை தசாப்த விழாக் கண்ட 'சுயதெரிவுமுறை முன்னோடி' திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனிடம் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மாலை 4.30 - 8.00 வரையான நேரகாலத்துக்குள் மாத்திரம் விசாரித்தறிக. நேரடித் தொலைபேசி **2360488, 4511396, 0602158067** (சி-48158)

## தவறிவிட்டது

ச.முகுந்தன் ஆகிய எனது தே.அ.அட்டை (770250943V), வி. அ. அட்டை, **Job Card** என்பவற்றுடன் மணிப்போஸ் வைமன் வீதியில் 03.03.2006 மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பிரதம தபாலகத்திலோ, யாழ். இந்துக்கல்லூரியிலோ ஒப்படைக்கவும். **or 0779673557** எனும் தொ.பே இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (47572)

பாலசுப்பிரமணியம் சசிகலா என்பவரது தே. அ .அட்டை (648553625V) 02.03.2006 அன்று நந்தாவில் அம்மன் கோயிலுக்கும் கொக்குவில் சந்தைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆ.பாலசுப்பிரமணியம், கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, (நந்தாவில் அம்மன் கோயிலடி), கொக்குவில் **0776745766.** (47572)

சிவகுலவீதி, உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த, சத்தியவான் மயூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (73138[illegible]38V) 20.02.2006 அன்று யாழ்ப்பாணத்திற்கும் உரும்பிராய்க்கும் இடையில் போர்ஸுடன் தவறிவிட்டது . கண்டெடுத்தவர்கள் **07760[illegible]761** என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (47589)

## தேவை

**சுன்னாகம் நகர எல்லைக்குள் அமைந்துள்ள வைத்திய நிலையம் ஒன்றில் பணியாற்ற வைத்தியர் ஒருவர் தேவை.**

**(D.A.M, B.S.M.S)**

**தொடர்பு: 077 6913056** (47387)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

*தொடர்பு:-* **BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி (பாம் ஸ்கூல் அருகில்)
T.P.021 4590907
32/3, ரெயில்வே அவனியூ, கொழும்பு -05.
(45514) T.P.0112 852269 (21.17.19)

## வீடு வாடகைக்கு

**இல. 64, பழைய பூங்கா வீதியில் 4 அறைகளுடன் வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: S.மரியதாஸ், 32/16, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.**

(47574) **T.P.021 222 6266** (47574)

இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

## சிதார வர்ம தைலம்

உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு, இரத்தக் கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால் வலி ஆகியவைகளுக்கு காலை மாலை பூசி வரவும்.

Reg.Number 10171 ARPR No.228

(வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்)

சந்தைப்படுத்துவோர்:

**சிவா நறுமணப்பூங்கா**
288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone 222 2567
*சகல பார்மசிகளிலும் கிடைக்கும்*

(சி-[illegible]146) (21.17.19)

## ஜப்பான் சைக்கிள்

ஆண்களுக்கான மவுண்டன் சைக்கிள், லேடீஸ் சைக்கிள்கள்

1) கியர், கப்பிறேக், ஓட்டோமற்றிக் போன்ற விசேட அம்சங்களுடன்
2) நீண்ட காலம் செலவின்றி பாவிக்கக்கூடிய சைக்கிள்
3) புத்திசாலிகள் இப்போது வாங்குவது யப்பான் சைக்கிளையே
4) சகல விதமான உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு

*குறிப்பு: யப்பான் சைக்கிள் திருத்துவதற்கான இலவச விசேட பயிற்சிநெறியும் சான்றிதழும் கருவிகளும் வழங்கப்படும்.*





**சித்திவிநாயகர் யப்பான் சைக்கிள் பஜார்**

(42.17.19) **இல.631, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.** (47590)

## பொதுக் காப்புறுதித் துறைக்கு நீங்கள் தேவை

**ISO** 9001: 2000 சர்வதேச காப்புறுதிக் தரச் சான்றிதழைப் பெற்ற காப்புறுதிக் கம்பனிக்கு பொதுக்காப்புறுதித் துறைக்கு முகவர்கள் தேவை.

தகைமைகள்:

1.G.C.E. (O/L) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
2 G.C.E. (A/L) மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்
3.சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்

**விண்ணப்பமுடிவுதிகதி: 13.03.2006**
**மேற்குறிப்பிட்ட தகைமையுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
விளம்பர இல. *2822*
(47571) *மே/பா உதயன், யாழ்ப்பாணம்.* (21.19.17)

## பிள்ளையார் இன் 'A' தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம்

**(A Grade Hotel approved by the Ceylon Tourist Board)**

மீண்டும் வழமை போல் காடின் றூவ் றெஸ்ரோறன்ட் காலை 9 மணி தொடங்கி இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும் என்று எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கிறோம். சுவையான உணவு, குடும்பங்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

குறிப்பாக ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாகவேனும் ஓடர் பண்ணிவிட்டு வரவும்.

16 குளிரூட்டப்பட்ட இணைந்த குளியலறைகளுடன், விருந்து மண்டபம், உங்கள் பிறந்தநாள் விழா மற்றும் வியாபாரக் கலந்துரையாடல்கள், திருமண விருந்துகள் (Reception) விசாலமான வாகனத் தரிப்பிடம் இவை யாவற்றுக்கும் நாடவேண்டிய இடம்.

**PILLAYAR INN,**
31, Manipay Road,
Jaffna, (47577)(21.11.19)

Tel : 021-222-5595
Tel : 021-222-2829
Fax : 021-222-5595
E-Mail : Piyainn@sltnet.lk.

## நல்வாழ்த்துக்கள்

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் 03.03.2006 வெள்ளிக்கிழமை குருப்பட்டம் பெற்ற

**பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சர்மா(சபா) - ஸ்ரீமதி காதம்பரி**

தம்பதிகளுக்கு எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**றஞ்சிதா மெடிக்கல்**
(21.17.19) சுதுமலை மத்தி, மானிப்பாய். (47582)

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு கீழ்க் காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) கணக்கு லிகிதர் Accounts Clerk பெண்கள்
கல்வித் தகைமை :- ஜி.சீ.ஈ. உயர்தரம்
ஆங்கிலம், வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2) லிகிதர் Clerk பெண்கள்
கல்வித் தகைமை :- ஜி.சீ.ஈ. சாதாரண தரம்
கணிதம், தமிழ், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திடைந்திருத்தல் வேண்டும்.

உங்கள் விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் எழுதி எதிர்வரும் 09-03-2006 வியாழக்கிழமைக்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**றூபா பன்முக வர்த்தக நிலையம்,**
104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(47580)(26.21.17.19)

# பேச்சு முடிவுகளை தடம்புரளச் செய்வதற்கு தெற்கில் பெரும் எத்தனங்கள் .....!

சின்னஞ்சிறிய தீவான ஸ்ரீலங்காவின் தேசிய பிரச்சினைகளில், முக்கிய இடம் பிடித்துள்ள தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதெல்லாம், அந்த முயற்சிகள் தடம் புரண்டு விபரீதமான நிலை தோற்றுவிக்கப்பட்டு வந்துள்ளது.

அந்தவகையில், தற்சமயம் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளும் தடம்புரளும் சூழல் கருக்கட்ட ஆரம்பித்திருக்கின்றது.

ஆகப்பிந்திய முயற்சியாக இலங்கை அரசுக் குழுவும் தமிழீழ விடுதலைப் புலிகள் குழுவும் கடந்த மாதம் 22, 23 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் கூடிப் பேசிக்காணப்பட்ட இணக்கம் தொடர்பான கூட்டறிக்கை வெளியாகி அதில் 'மை' காயும் முன்பே தெற்கில் சிங்களத் தரப்புகளுக்குள் முரண்பாடுகள் முற்றி, எட்டப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்கு வருமா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

தமிழர் தரப்பு மத்தியில் மட்டுமன்றி, சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் இந்தக் கேள்வி எழுந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்தான யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பயனாக, கடந்த நான்கு ஆண்டு காலமாக யுத்தமற்ற சூழல் நிலவி வருகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை ஸ்ரீலங்கா தரப்பு நடைமுறைப்படுத்ததால் இரு தரப்புகளுக்கும் இடையே மோதல் வெடிக்கும் நிலை அவ்வப்போது வந்து போனாலும், ஜெனீவா பேச்சுக்குப் பின்னர், தற்போது உருவாகியுள்ள நிலைமை எதிர்காலத்தில் உடன்பாடு நிமிர்ந்து நிற்குமா என்ற சந்தேகமான தோற்றத்தைக் கொண்டிருக்கிறது.

சர்வதேசத்துக்குள் இன்று சிக்கியுள்ள தமிழர் விவகாரம் பல்வேறு பரிமாண வளர்ச்சி கண்டு தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் உணர்ந்து - ஏற்றுக்கொள்ளும் சூழலை உருவாக்கியுள்ளது ஒரு புறம்.

ஆரம்பத்தில் சாத்வீக வழியில் போராடிய தமிழர் தரப்பு, பின்னர் அதனை ஆயுதப் போராட்டமாக மாற்றியதற்கான நியாயப்பாட்டை சர்வதேசத்துக்கு உணர்த்தி நிற்கின்றது.

சிங்களத் தரப்புக்கு நேசக்கரம் நீட்டி பல்வேறு ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் கண்டு அவற்றைக் கிழித்தெறிந்து,

## ஒருவாரம் கடந்த போதிலும் — உருப்படியான நகர்வைக் காணோம்

தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கத் தயாரில்லை என்ற நிலைப்பாட்டை சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு உணர்த்தியதன் விளைவுதான் ஆயுதப் போராட்டம்.

ஆயுதப் போராட்டம் வளர்ச்சி கண்டு இப்போது. ஒரு நாட்டுக்குள் இரு தேசங்கள் - இரு சமபலமிக்க தரப் ள் - என்ற நிலைமையைச் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டியும் உள்ளது.

இரு சமபலமுள்ள தரப்புக்கள் - அது இராணுவ ரீதியாக அமைந்திருக்கலாம், அல்லது அரசியல் ரீதியாக இருக்கலாம் - இந்த நாட்டில் உள்ளன என்ற செய்தி சர்வதேசத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழர் விவகாரம் சர்வதேச அரங்கிற்குள்

நோர்வே அரசு அனுசரணைப் பணிகளை முன்னெடுக்க வந்து இறங்கியது. அன்று முதல் இதன் மூலம் தமிழர் விவகாரம் சர்வதேச அரங்கிற்குள் சிக்கி மீளமுடியாத ஒரு சூழல் உருவாகியிருந்த போதும், தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை சர்வதேசம் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியது.

கடந்த மாதம் ஜெனீவாவில் நடந்து முடிந்த அரசு - விடுதலைப் புலிகள் நேரடிப் பேச்சு தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை - சமாதான முயற்சிகளில் அவர்களுக்குள்ள பற்றுறுதியை - மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டியது.

கடந்த நான்கு வருடங்களாக சமாதானச் சூழல் நிலவிய போதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் மீது இராணுவ மற்றும் பலவித நெருக்குவாரங்களும் அச்சுறுத்தல்களும் அடாவடித்தனங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதன் எதிரொலியாக மக்கள் கொந்தளித்து படையினருக்கு எதிரான செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டனர். அதன் விளைவாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டிய இக்கட்டு நிலை அரசுக்கு உருவானது.

யதார்த்த நிலையை உணர்ந்த தெற்குத் தலைமை நோர்வே அனுசரணையாளர்களுடன் தொடர்பு கொண்டு, தொடர்ந்து பேசியதன் பயனாக அரசும் - விடுதலைப் புலிகளும் ஜெனீவாவில் நேருக்கு நேர் அமர்ந்து பேசும் நிலை உருவானது.

மிகவும் நெருக்கடி நிலையில் இருந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுலாக்கம் செய்ய இரு தரப்பினரும் இணங்கி கூட்டறிக்கை ஒன்றின் மூலம் அதை உறுதிசெய்தமையையிட்டு சர்வதேச சமூகம் மகிழ்ச்சி வெளியிட்டது. எமது மக்கள் மத்தியிலும் ஓரளவு நிம்மதி நிலை தோன்றியிருந்தது.

இந்த நிலைமையைக் கெடுத்துவிடும் கருத்துக்கள் தெற்கில் இருந்து கிளம்பியுள்ளன. வழமையான பேரினவாதச்சிந்தனையின் அடிப்படையில் ஜெனீவாப் பேச்சையும் நோக்கிய ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய போன்ற கட்சிகள் பேச்சில் காணப்பட்ட இணக்கத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதைக் குழப்பும் வகையில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.



### பூதாகாரமாக்கும் முயற்சிகள்

தெற்கில் வெளிப்படுத்தப்படும் கருத்துகள் எட்டப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்கு வருவது சந்தேகம் என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அங்கு பூதாகாரமாகக் கிளப்பப்படும் கருத்துகளைச் சற்று நோக்குவோம்.

★ போர்நிறுத்த உடன்படிக்கை திருத்தப்பட்டது - அரசு நேற்று அறிவிப்பு.

★ கூட்டறிக்கையை ஏற்க ஹெலஉறுமய மறுப்பு.

★ ஒப்பந்தத்தை ஏற்கும் அரசின் முடிவை கண்டிக்கிறது ஜே.வி.பி.

★ ஆயுதங்களைக் கீழே வைக்கமாட்டோம் - கருணா அறிவிப்பு.

★ புலிகளின் காலில் வீழ்ந்தது அரசு - ஐ.தே.க.அறிவிப்பு

★ ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்தால், புலிகளின் ஆயுதங்களையும் களையுமாறு அரசுக்கு ஜே.வி.பி. அழுத்தம் கொடுக்கும்.

ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய பேரினவாதிகளின் கைப்பொம்மையாக இருக்கும், நேரடிப் பேச்சுக் குழுவில் இறுதிநேரத்தில் நுழைக்கப்பட்ட சட்டத்தரண எச்.என்.டி. சில்வாவே, யுத்த நிறுத்த உடன்படிக்கை திருத்தப்பட்டது என்ற செய்தியை தெற்கில் முதலில் தெரிவித்து அதனை உண்மையாக்கி விதைத்து வருகின்றார்.

பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய அரசுக்குழுவில் அங்கம் வகித்த ஏனையோர் இதுபற்றிக் கருத்து எதனையுமே வெளியிடவில்லை.

பேரினவாதச் சக்திகளின் கூச்சலுக்குப் பணிந்து எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரசுத் தலைமை தயாரா, இல்லையா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

ஜெனீவாப் பேச்சு முடிவடைந்து ஒரு வாரம் கடந்த நிலையிலும், எட்டப்பட்ட தீர்மானங்கள் எதுவும் நடைமுறையில் வந்தமைக்கான அடையாளங்களையே காணவில்லை. கள நிலையிலும் மாற்றங்களைக் காணமுடியவில்லை.

மக்கள் மத்தியில் ஓரளவு நிம்மதி நிலை காணப்பட்டாலும் எவ்வளவு காலத்துக்கு இந்த நிலை நீடிக்கும் என்ற ஏக்கமும் ஆதங்கமும் உண்டாகியுள்ளன.

ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்தத் தடையாக, ஒட்டுக்குழுக்களில் ஒன்றான கருணா குழு தாங்கள் ஆயுதங்களைக் கைவிடமாட்டோம் என்று பகிரங்கமாகவே அறிவித்துள்ளது.

ஜெனீவாப் பேச்சில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர்), ஜிகாத் போன்ற ஒட்டுக் குழுக்கள் கருத்து எதனையும் வெளியிடாத நிலையில், கருணா குழு மட்டுமே கருத்து வெளியிட்டுள்ளது.

ஆனால், அரச படைகளுடன் எந்த விதமான ஒட்டுக் குழுக்களும் செயற்படவில்லை என்று இராணுவப் பேச்சாளர் கூறிவருகிறார்.

### யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அம்பலப்படுத்தினார்

ஒட்டுக் குழுக்கள் தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் -

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் முக்கிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

''கிழக்கில் ஒட்டுக்குழுக்கள் செயற்படுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இராணுவம் இவ்விடயத்தில் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை விசுவாசமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அரசு நினைக்குமாயின், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கருத்தை ஏற்று, உடனடியாக ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை வடக்கு - கிழக்கில் இருந்து வெளி யேற்ற வேண்டும். அதன் மூலம் ஜெனீவாத் தீர் மானங்களை - யுத்தநிறுத்த உடன்படிக்கையை - நடைமுறைக்குக் கொண்டுவந்து நல்லெண்ண சமிக்ஞையை அரசு வெளிப்படுத்த முடியும். அடுத்த கட்டப் பேச்சுகள் ஏப்ரல் 19ஆம் திகதி இடம்பெறுவதை அதன் மூலமே உறுதி செய்ய முடியும்.

நல்லெண்ண சமிக்ஞைகளை அரசு வெளிப்படுத்துவதன் மூலமே, அடுத்த மட்டப் பேச்சு இடம் பெறுவதை உறுதி செய்வதாக அமையும்.

அதைவிடுத்து, தமது பங்காளிக் கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளின் அழுத்தத்துக்கு அடிபணிந்து செயற்பட அரசு முனையுமானால், எதிர்காலம் கேள்விக்குறியாகவே அமையும்.

இந்த யதார்த்த நிலையைப் புரியாமல், தெற்குத் தலைமை உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை நோக்கமாகவும் பங்காளிகளைத் திருப்திப்படுத்துவதாகவும் அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்குமானால், அமைதிப் பேச்சு நடைபெறாது போகும் சூழலே உருவாகும் என்பது மட்டும் உண்மை.

### முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது எதற்கு?

அடுத்த கட்டப் பேச்சுக்கு இரண்டு மாத காலம் இருக்கிறது என்று கருதி, ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை கிடப்பில் போட்டுவிட்டு, நடக்கப் போகும் உள்ளூராட்சித் தேர்தல் செயற்பாடுகளில் அரசு ஈடுபட முனையக் கூடாது. முதலில் - முன்னுரிமை அடிப்படையில் ஜெனீவாத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்ட வேண்டும்.

களத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்து, மக்கள் மனங்களில் சர்வதேசத்தின் மனதில் - நம்பிக்கையை அரசு கட்டி எழுப்ப வேண்டும். இதுதான் இன்றைய உடனடித் தேவையாகும்.

வடக்கு - கிழக்கில் சுமுக நிலையைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு அரசிடமே இருக்கிறது.

சுமுக நிலையை - சிவில் நிர்வாக நிலையைத் தோற்றுவிப்பதற்காகவே அரசும் - விடுதலைப் புலிகளும் நாடு கடந்து சென்று, சர்வதேசத்தின் பிரசன்னத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள்.

ஆனால், அதற்குப் புறம்பாக படை அதிகாரிகள் சிவில் சமூக, மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளை, கல்வியாளர்களை அழைத்துப் பேசி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முனைவது குறித்து ஆராய்கின்றனர்.

குடாநாட்டில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது றித்துப்படை அதிகாரிகள் கலந்துரையாடல்களை நடத் வருகின்றனர். பேச்சுமேசையில் அரசும் - விடுதலைப் பு ளும் பேசித் தீர்க்கவேண்டிய விடயங்களைப் படைத்தர பினர் பொதுமக்கள் பிரதிநிதிகளுடன் பேசவேண்டிய தேவை உண்டா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

### உரிய பலன் கிடைக்குமா?

படையினரால் தோற்றுவிக்கப்பட்ட இயல்பு நிலைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு தீர்வு காண வேண்டியவர்கள் அரசும் விடுதலைப் புலிகளுமே ஆவர். அதைவிட்டு படைத் தரப்பு இந்த விடயத்தில் ஈடுபடுவது உரிய பயனைத் தருமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

அரசும் - விடுதலைப் புலிகளும் ஜெனீவாவில் பேசி, இணக்கம் கண்டவாறு யுத்தநிறுத்த உடன்பாட்டை முழுமையாக அரசு நடைமுறைப்படுத்தினால், படைத்தரப்பின் முயற்சி அல்லது தலையீடு தேவையற்றது என்று மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

அரச அதிகாரிகளையும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் முகாம்களுக்கு அழைத்து கலந்துரையாடல்களை நடத்துவதைத் தவிர்த்து,

அரசும் - விடுதலைப் புலிகளும் இணங்கிய விடயங்களைப் படைத்தரப்பு நடைமுறைப்படுத்துமாயின், சுமுகமான சூழல் - இயல்வு வாழ்க்கை திரும்பும் என்று கூறுகின்றனர் மக்கள். அதுவே உரிய வழியுமாகும்.

படைத்தரப்பினர் தன்னிச்சையாக கலந்துரையாடல்களை நடத்துவது, கடந்தவருட இறுதியில் உருவான அசாதாரண நிலையை தான் மீண்டும் உருவாக்கக் கூடுமே தவிர, சுமுகநிலை தோன்றுவதற்கு ஏதுவாக இருக்காது என்று தனது ஆதங்கத்தை வெளியிட்டார் பொது அமைப்புக்களின் பிரதிநிதி ஒருவர்.

ஜெனீவாப் பேச்சு முடிவடைந்து, உருவாகியுள்ள சுமுகமான சூழலைத் தக்கவைத்து, சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தக் கூடிய சூழலே உருவாக்கப்படவேண்டும். அதன் மூலமே நாட்டில் நிரந்தர அமைதி நிலவவும், அடுத்த கட்டப்பேச்சுகள் சுமுகமாக நடக்கவும் வாய்ப்பு உண்டாகும்.

அதைவிடுத்து தெற்கில் பேரினவாதச் சக்திகளின் கூச்சல்களுக்கு, அழுத்தங்களுக்கு பணிந்து செல்வதன் மூலமும் -

படை அதிகாரிகளும் பொதுமக்கள் பிரதிநிதிகளும் கலந்துரையாடல்களை நடத்தி சுமுகநிலையை தோற்றுவிக்க முனைவதன் மூலமும் - எதையுமே சாதிக்க முடியாது என்பது நிச்சயம். ★

# நயினாதீவு பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 5

நயினாதீவுப் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு கனேடிய அரசின் சீடா நிறுவனம் நிதி உதவி வழங்கியுள்ளது.

நயினாதீவில் நன்னீர்க் கிணறுகள், மலசலகூடங்கள் அமைப்பதற்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இருபத்தைந்தாம் திகதி கொழும்பில் நடைபெற்ற நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் மாதாந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவரும் வடக்கு கிழக்கு மாகாண காணி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய ப.க.பரமலிங்கம் இத்தகவலை தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

இவ்வாண்டிற்கான சங்கத்தின் செயற்திட்டத்தில் 2 மில்லியன் ரூபா செலவில் நயினாதீவின் 5 வீதிகளுக்கு தெருவிளக்குகள் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் திருவிழாவிற்கு முன்பதாக முடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எமது நீண்டகால வேண்டுகோளுக்கிணங்க வீதிகள் திருத்தத்திற்கென அரச திணைக்களங்களால் 4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-222)


## வேலை வாய்ப்பு

நீண்டகால அனுபவமும் "AA" தர சர்வதேச அங்கீகாரமும் பெற்ற முன்னணிக் காப்புறுதி நிறுவனம் தனது காப்புறுதித் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளதால், தகுதியானவர்கள் (ஆண்/ பெண்) சகல சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் தரவும். பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருப்பவர்களும் சமூகம் தரலாம். சிங்கள அறிவு இருப்பின் சகல இடங்களிலும் சேவையாற்ற இலகுவாக இருக்கும். இலங்கை முழுவதும் சேவையாற்றலாம். வயதெல்லை இல்லை.

பதவிகள்: 1) காப்புறுதி ஆலோசகர்கள் (Insurance Advisors)
2) அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (Development Officers)

தகைமைகள்:
★ ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் (கணிதம், ஆங்கிலம் உட்பட) 6 பாடங்களில் சித்தி.
★ வேறு காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரிந்த அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

நேர்முகப்பரீட்சை: 11.03.2006 சனிக்கிழமை காலை 9 மணி 15 நிமிடம் தொடக்கம் நடைபெறும்.

இடம்: வீரசிங்கம் மண்டபம்
(கீழ் மண்டபத்தில்),
12, கே.கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0777563763, 0777030200

(47333)(51-32-11-19)


## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 09 - 1909



மறைவு 05 - 03 - 1986

அமரர் முதலியார்
**வைத்திலிங்கம் மகேசன் (J.P.)**

அன்போடும் பண்போடும்
எமை வளர்த்து ஆளாக்கிய
எம் பாசவிளக்கே!
ஆண்டுகள் இருபது சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டு அகலாது!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

முதலியார் மகேசன் வீதி,
நவாலி. (47352)(51-32-11-19)
-குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



மண் மகிழ
10.07.1936

கண் நெகிழ
15.03.2005

**அமரர் இளையவி கிருஷ்ணபிள்ளை**

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பழகுவதற்கு நல் மனிதராய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எம்மைப் பிரிந்து ஆண்டொன்றானாலும்
எம் ஆயுள் உள்ளவரை
உம் நினைவு எங்களுடன்...

(47333)(51-32-11-19)

கணேஸ்வரம், அளவெட்டி. -குடும்பத்தினர்.

## தொழில் பயிற்சி நிலையத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மார்ச்5

அறவழிப் போராட்டக்குழுவும் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனமும் இணைந்து நடத்தும் தொழில்சார் பயிற்சி நிலையத் திறப்புவிழாவும் மின் இணைப்பு பயிற்சி ஆரம்பமும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள அறவழிப் போராட்டக் குழுப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் டாக்டர். எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் கலந்து கொள்வார்.

(த 203)

## சாவகச்சேரியில் 6 வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி,மார்ச்5

ஐக்கிய அமெரிக்காவின் உதவித் திட்டத்தின் கீழ் (USAD) யாழ்.மாவட்டத்தில் புனரமைக்கப்படவுள்ள வீதிகளுள் - சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆறு வீதிகள் சுமார் 11 மில்லியன்ரூபா செலவில் செப்பனிடப்படவுள்ளன.

இந்த வீதிகள் புத்தாயிரமாண்டு சவால்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச எல்லைக்குட்பட்ட மட்டுவில் வடக்கு தோப்பு வீதி, நாவற்குழி மேற்கு - குளறுப்பிட்டி வீதி, நாவற்குழி கிழக்கு, பாடசாலை வீதி, மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில் சியாமளா மில் ஒழுங்கை, சரசாலை தெற்கு அ.த.க. பாடசாலை வீதி, கைதடி கிழக்கு, நவபுரம் மட்டுவில் வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ளன. (3-31)

## இலக்கத் தகடுகளைப் பெறலாம்

தென்மராட்சி மார்ச் 5

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இவ்வருடத்திற்குரிய மிதி வண்டி இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மிதிவண்டி உரிமையாளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இலக்கத்தகடுகளைப் பெற்று மிதி வண்டியில் பொருத்துமாறு நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்துள்ளார். (த-117)


## Study & Work in Malaysia

University of London
University of Birmingham

Very Affordable Course Fees

- Accounting & Finance
- Marketing Management
- Business Administration
- Computer Science
- Computer Engineering
- Computer Games Development
- Business Information Technology
- CAT ● ACCA ● CFA

FTMS Global — Established since 1986 — 20 Years

17/3 Jesmine Park Nawala
0714 722 722 / 0773 055 125
email - ftms.sl@gmail.com



## எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி







- நூறு வீதம் இயற்கையானது
- பக்கவிளைவு …
- பாரம்பரிய ம… …த்த பேரறிஞர்களின் ஏட்டுப் பிரதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ஆயுள் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது
- சகலவிதமான இருமலுக்கும் சிறந்த நிவாரணி

சகல மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாக பெற்றுக்கொள்ள
T.P:-0777112410, 0773144873
0212263469

தயாரிக்கும் இடம்:
எவரெஸ்ட் சித்த மருந்தகம்
வட்டு.வடக்கு சித்தங்கேணி.



## AYURVEDIC MEDICINE
## ✚ ஆயுர்வேத மருந்துகள் ✚

இந்தியாவில் பிரசித்திபெற்ற ஆயுர்வேத மருந்துகள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

### பின்வரும் நோய்களுக்கு நிவாரணி

தோல் நோய்கள், வாத நோய்கள், சுவாசத்தொகுதிகளில் ஏற்படக்கூடிய (ஆஸ்துமா, இருமல், தடிமல்) நோய்கள், சமிபாட்டுத்தொகுதி நோய்கள், கை, கால்மூட்டு வியாதிகள், நீரிழிவு நோய், ஆண்மைக் குறைபாடு, பெண்களுக்கான மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகள், மலச்சிக்கல், மூல வியாதி, அதிகப்படியான கொலஸ்ட்ரோல் மற்றும் உடற்பருமனை குறைக்கக்கூடிய மருந்து வகைகள் அத்துடன் விசேடமாக தயாரிக்கப்பட்ட சிறுபிள்ளைகளுக்கான சமிபாட்டுக் குளறுபடிகளுக்கும் மற்றும் சகல குழந்தைகளுக்குமான மருந்துகளும் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கும்.

### யாழ்ப்பாண விநியோக முகவர்:

**ஜெகன் மருந்தகம்**

462 'B' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 021 - 222 2194, 222 3191

இறக்குமதியாளர்கள்:


லங்கா ஹேபல்ஸ் (பிரை) லிமிடெட்,
14, ஸ்ரேசன் வீதி, தெகிவளை.
தொலைபேசி:- 543217, 5432100
உடன் அழைப்பு:- 0777 395194

# அடிப்படை வசதிகளின்றி அவதியுறும் தேவிபுரம் கிராமத்தின் தேவைகள் நிறைவேறுமா?

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள தேவிபுரம் கிராமத்தின் மக்கள் பெரிதும் இன்னல்களை எதிர்கொண்டு வாழ்கின்றார்கள். தேவிபுரம் கிராமமக்கள் விவசாயம் மற்றும் கடற்றொழிலை நம்பி அன்றாட வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றனர்.

மிகவும் பின்தங்கியுள்ள இந்த மக்கள் இக்கிராமத்தில் 1964ஆம் ஆண்டு குடியமர்த்தப்பட்டனர். ஆரம்ப காலத்தில் இவர்களுக்கான ஊக்குவிப்புகளாக அன்றைய அரசு பல ஏக்கர் கணக்கில் நிலங்களை வழங்கி அவர்களுக்குப் பயன்தரு மரங்களான தென்னை, மா, பலா போன்றவற்றையும் கொடுத்து வீடுகளை அமைத்துக் கொடுத்தது.

இவர்களின் செலவீனங்களுக்காக ஆறு மாதத்திற்கு ஒருதடவை உதவிக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுவந்தன.



பாழடைந்த நிலையில் தேவிபுரம் தபாலகக் கட்டடம்

இவ்வாறான சில கவர்ச்சிகரமான ஊக்குவிப்புகளால் அந்தநேரம் குடியேறிய மக்களின் செய்தித் தகவல் பரிமாற்றம் பெரும் பிரச்சினையாக இருந்தது. இவர்களுக்கு நிரந்தர அஞ்சல் அலுவலகம் ஒன்று 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதனூடாக அம்மக்கள் தமது கடிதப் பரிமாற்றங்களை இலகுவாகப் பெற்றிருந்தனர்.

இச் சேவையும் 1972ஆம் ஆண்டுவரையே நீடித்தது. ஏனெனின், இங்கு நடைபெற்றுவந்த அஞ்சல் சேவையினை - அப்போது அஞ்சல் அதிபராக இருந்த கிருஸ்ணதாசன் உடையார்கட்டுப் பிரதேசத்திற்கு மாறி இருந்தார் - அப்பகுதி மக்கள் 1972இல் இருந்து அஞ்சல் அலுவலக நிரந்தரக் கட்டடமிருந்தும் சுமார் பத்து கிலோமீற்றர் வரையான தூரம்வரை சென்றே பெற வேண்டியிருந்தது.

அது இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுதொடர்பில் தேவிபுரம் கிராம அலுவலர் சொக்கலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் :-

இன்றைய நிலையில் எமது மக்கள் தபால் சேவையைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தபால்களைப் பதிவுசெய்தல், பொதி அனுப்புதல் போன்றவற்றைச் செய்வதற்குப் புதுக்குடியிருப்பிற்கே செல்ல வேண்டியுள்ளது.

**வீதியின் அவலம்**

தேவிபுரத்தில் அ, ஆ பகுதியினரும் மற்றும் வள்ளிபுனம் வாழ மக்களும் இதே அவல நிலையையே எதிர்கொள்கின்றனர்.

அதிலும் தேவிபுரத்திலிருந்து பரந்தன் - முல்லை. வீதியைத் தொடுக்கும் வீதி மக்களின் இலகுவான போக்குவரத்திற்கு ஏற்றதல்ல. இவ்வீதியும் மிகவும் மோசமான நிலை யில் சேதமடைந்து காணப்படுகின்றது.

எனவே, எமது மக்களுக்குக் கட்டாயம் ஓர் அஞ்சல் அலுவலகம் தேவை. கூரைகளற்ற, சேதமடைந்துள்ள அஞ்சல் அலுவலகத்தை மீளமைப்புச் செய்வதோ அல்லது புதிய கட்டடமொன்றைத் நிர்மாணித்தோ தரவேண்டும். பல தடவைகள் பல அதிகாரிகளிடமும் சம்பந்தப்பட்டவர்களிடமும் மக்களும் நானும் முறைப்பாடுகள் செய்துள்ளோம். எதுவித பலனும் கிடைக்க வில்லை என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வினால் குடாநாட்டு மக்களில் கணிசமானோரும் தேவிபுரம் கிராமத்தில் குடியேறினர்.

தேவிபுரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்போரும் இடம்பெயர்ந்து அங்கு தங்கியிருப்போருமாக அதிகளவான மக்கள் அங்கு தற்போதும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வாழ்கின்றனர்.

**வன்னிமடல்**

**கல்வி நிலை**

இதேபோன்று, தேவிபுரம் (அ) பகுதி, (ஆ) பகுதி மற்றும் வள்ளிபுனம் ஆகிய இடங்களிலும்ஜி.சீ.ஈ. சாதாரணதரத்திலான பாடசாலைகள் இரண்டு இயங்கி வருகின்றன.

பின்தங்கிய இக்கிராமங்களில் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அண்மைக் காலமாக மிகவும் முன்னேற்றகரமான முறையில் அமைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மாண வர்களும் தமது கல்விசார் செயற்பாட்டிற்கான அஞ்சல் அலுவலக சேவையினைப் பெற பல மைல்கள் சென்றே பெறவேண்டியுள்ளது.

இதுதொடர்பாக தேவிபுரத்தைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது கிராமம் பொருளாதார ரீதியில் மிகவும் நலிவடைந்தது. எமது மக்களிற்காக இருந்த தபாலகத்தின் சேவைகளை இல்லாது செய்துவிட்டனர்.

செயலிழந்து காணப்படும் கட்டடத்தின் கூரைகள் கூட சேதமடைந்து போய்விட்டன. எமது தபால் சேவைகளைப் பெறுவதில் நாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு போக்குவரத்திற்கும் எதுவித வசதிகள்



அற்ற நிலையில் வீதிகளும்கூட சீரற்ற நிலையில் காணப்படுகின்றன. சகல வழிகளிலும் நாம் பின் தள்ளப்பட்டு இருக்கின்றோம்.

எமக்கு உடனடியாக இந்த அஞ்சல் அலுவலகத்தின் சேவைகளைப் பெறும்வகையில் ஆவன செய்துதர வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட தரப்புகளைக் கோருகின்றோம் - என்றார்.

**மு.கந்தசாமி**

**அஞ்சல் சேவை சீர்பெறுமா?**

இவ்வாறாகவுள்ள இம்மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதமாகப் பாழடைந்துபோயுள்ள அஞ்சல் அலுவலகம் இயக்கப்படுமா? அல்லது சேதமடைந்த வீதியூடாக 12 கிலோமீற்றர் தூரம் வரை சென்றுதான் தபால் சேவைகளைப் பெறவேண்டுமா?

'தேவிபுரம் மற்றும் வள்ளிபுனம் ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானவர்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அஞ்சல் அலுவலகம் ஒன்றை இங்கு உடன் நிர்மாணித்துத் தருமாறு அப்பகுதி வாழ் மக்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். ✱

# தவத்தோடு கூடிய பயணம் தேசத்திற்கு விடிவு தரட்டும்

**தவக்காலச் சிந்தனை 5**

அன்பார்ந்த குருக்களே, துறவியரே, இறைமக்களே!

இந்த வருடத் தவக்காலத்தில் ஒரு அத்தியாவசியமான விடயத்தின்பால் உங்கள் சிறப்பான கவனத்தை ஈர்க்கும் பொருட்டு இந்த மடலை எழுதுகிறேன்.

வருடம் தோறும் எம்மைக் கடந்து செல்லும் தவக்காலமானது மனமாற்றத்திற்கும் ஒப்புரவிற்கும் ஆன்மீகப் புதுப்பித்தலுக்கும் இறைவன் விடுக்கும் அழைப்பாகும். இறைவனின் நிபந்தனையற்ற அன்பையும் இரக்கத்தையும் உய்த்துணர்ந்து முழு இதயத்தோடும் நாம் இறைவனை நோக்கிப் பயணிக்க அறைகூவல் விடுக்கப்படும் காலமாகும்.

எனினும், இத்தவக்காலத்தில் நமது நாட்டில் வாழும் எல்லா மக்களுடைய ஏக்கமாக, எதிர்பார்ப்பாக, ஆதங்கமாக விளங்கும் சமாதானத்தைப் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்கமுடியாது. கடந்த நூற்றாண்டாக நமது தேசத்தில் இடம்பெற்ற உள்நாட்டு இன மோதலினால் ஏற்பட்ட மனித அவலங்களை நாம் இலகுவில் மறந்துவிடமுடியாது. போர் அனர்த்தத்தினால் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதை நாம் கணக்கிலெடுக்காமல் இருக்கமுடியாது. இதன் விளைவாக எமது வாழ்விடங்களில், வீதிகளில், ஆலயங்களில், கடலில் இரத்தம் சிந்தப்பட்டுக் கறைப்படுத்தப்பட்டதை நாம் மறந்துவிட முடியாது.

எமது தேசத்தில் இரத்தம் சிந்தப்பட்ட வரலாறு எமது மானுட வாழ்வில் கறைபடிந்த அத்தியாயம் என்பதை நாம் அறிவோம். இனியும் எமது தேசத்தில் போரின் பெயரால் இரத்தம் சிந்துதலை நாம் அனுமதிக்கமுடியாது. ஒவ்வொரு உயிரும் இறைவனின் முன்பாக மாண்புமிக்கது; அவருக்கே உரித்தானது என்பதை எல்லோரும் உணரவேண்டும். எத்தனையோ அப்பாவிகளான ஆபேல்களின் இரத்தம் ஆண்டவன் சந்நிதியை நோக்கி அபயக் குரல் எழுப்புகின்றன. எமது மண்ணில் சிந்தப்படும் ஒவ்வொரு துளி இரத்தமும் இயேசு சிந்துகின்ற இரத்தமாகும். ஏனெனில், துன்புறும் ஒவ்வொரு மனிதனிலும் இயேசுவே துன்புறுகிறார். இரத்தம் சிந்துகிறார். எமது நாடு தொடர் கல்வாரிக் களமாக மாறிவிட்டதை மனதில் கொண்டுவருவோம்.

மனித குலத்தின் பாவங்களுக்காக கழுவாயாகிப்போன நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து மட்டுமே எமது மண்ணின் இரத்தக் கறைகளைத் துடைத்து, சமாதானம் என்னும் கொடையை அளிக்கக் கூடியவர் என்பதை நாமறிவோம். "வரலாற்றின் கால ஓட்டத்திலே, வெறுப்பும் கசப்பும் மேலெழுந்து நிற்பதாகக் காணப்பட்ட வேளைகளிலும் கூட, இறையன்பின் உறுதிப்பாடு உயர்ந்தெழுந்து பிரகாசிக்க என்றுமே தவறியதில்லை' என்றும், 'அன்பு, மகிழ்ச்சி, அமைதிக்காக ஏங்கி நிற்கும் மக்கள் கூட்டங்களின் அழுகைக் குரலுக்கு, ஆண்டவர் இன்றும் செவிமடுக்கிறார்' என்றும் தமது இவ்வாண்டுத் தவக்காலச் செய்தியிலே, நம் திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் சுட்டிக்காட்டுகிறார்.

எமது நாட்டிலே இன மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் வன்செயலையும் போரையும் நிரந்தரமாக நிராகரித்துச் சமாதானத்தின் பாதையை மட்டும் இதய சுத்தியோடு தேர்ந்தெடுக்க வேண்டும். நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், துயரங்களைச் சிந்திக்கும் இக்காலத்தில் எம் தேசத்தில் நடந்தேறிய துயர அவல நிகழ்வுகளையும் நினைவில் கொண்டு உயிர்த்த இயேசு உலகிற்கு அளித்த மாபெரும் கொடையாகிய சமாதானத்தை நமது தேசத்தில் மலரச் செய்யச் சிறப்பாகத் தவமிருந்து செபிக்க உங்களை அன்போடு அழைத்து நிற்கின்றேன்.

எனவே, நமது தேசத்தில் இரத்தம் சிந்தும் அழிவுக் கலாசாரத்திற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்படவும், நீதியும் உண்மையும் பிறப்பிக்கும் சமாதானம் நிலைநாட்டப்படவும் இறைவார்த்தையை நற்கருணையை மையப்படுத்தி பங்குத்தந்தையர்கள் தம் இறைமக்களைத் தவமிருந்து நோன்பெடுத்துச் செபிக்கவும் பாதயாத்திரைகளை மேற்கொள்ளவும் அவர்களுக்கு இத்தவக் காலத்தில் வழிவகுத்துக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பொதுவாக இந்த நாற்பது நாள்களும் நமது தேசத்திற்குச் சமாதானம் வேண்டி நிற்கும் தவத்தோடு கூடிய பயணமாக நம் எல்லோருக்கும் அமையட்டும்.

குறிப்பாக, ஒவ்வொரு வெள்ளியும் இறைவார்த்தையை முதன்மைப்படுத்திய உபவாசத்தோடு, நற்கருணை ஆராதனை ஒப்புரவு, மனமாற்ற இரக்கச் செயல்கள் போன்றவற்றில் இறைமக்கள் எல்லோரும் தம்மைத் தாராள மனத்தோடு ஈடுபடுத்துமாறு அன்போடு வேண்டி நிற்கின்றேன். அப்போது எமது மண்ணில் இரத்த ஆறு ஓடுவது நிறுத்தப்பட்டு உண்மை நீதியில் விளைந்த சமாதானத்தை உயிர்த்த ஆண்டவர் நம் நாட்டுக்கு அருள்வார். 'நம் நம்பிக்கையின் உயிருள்ள ஊற்றாகிய எம் தாய் மரியாவிடம் இந்த எம் தவக்காலப் பயணத்தை ஒப்படைப்போம்' (திருத்தந்தையின் தவக்கால மடல்). தம் திருமகனின் பாடுகள், மரணம், உயிர்ப்பில் அவரோடு பயணித்த அவர்கள் எம்மோடு இருந்து எம்மையும் வழிநடத்துவார்.

கிறிஸ்து ஆண்டவரில் உங்கள் மேல் அன்புள்ள,

**இராயப்பு யோசேப்பு**
மன்னார் ஆயர்.

# ஜெனிவா பேச்சு வெற்றியும் தோல்வியும்





போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் ஜெனிவாவில் இடம் பெற்ற பேச்சுக்கள் குறித்து பல்வேறான கருத்துக்கள் நிலவுகின்றன. பொதுவாக இப்பேச்சுக்கள் வெற்றி அடைந்துள்ளதாக கருத்துகள் கூறப்படுகின்றன. ஆனால் இப்பேச்சுகள் வெற்றிகரமான விளைவைக் கொடுத்திருப்பதாக சொல்ல முடியாதுள்ளது. உண்மையில் உடனடியாக ஒரு போர் ஏற்படாமல் சற்று பின்போடப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் இடம் பெற்ற பேச்சுக்களுக்கும் கடந்த பெப்ரவரி 22ம், 23ம், திகதிகளில் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுக்களுக்குமிடையே பாரிய வித்தியாசம் தெளிவாக காணப்படுகிறது. இந்த வித்தியாசம், பேசப்பட்ட விடயத்தில் கவனிக்கப்பட முடியாததாகும். காரணம் இரு பேச்சுக்களிலும் பேசப்பட்ட விடயம் வித்தியாசமானதாகும். ஆனால் பேச்சுக்களில் கலந்து கொண்டவர்களின் நடத்தைகள் மற்றும் கருத்துக்களை அவதானிக்கும் போது இந்த வித்தியாசம் மிகப்பாரியதாக உள்ளது.

பேச்சுக்களின் போது காரசாரமாக விவாதிக்கப்பட்டதாக கூறப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. காரணம் மோசமான வன்முறைகளுக்கு பின்னர் இருதரப்பும் சந்திக்கும் போது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க இடமிருப்பதனாலாகும். ஆனால் பேச்சின் ஆரம்பத்திலேயே அரச தரப்பின் தலைவரான நிமால் சிறிபால டி சில்வா இந்த போர் நிறுத்த உடன்படிக்கையானது ஒரு சட்ட விரோதமான, நீதிக்கு புறம்பான உடன்படிக்கை என்ற கருத்தை வெளியிட்டமையானது பேச்சுக்கள் சுமூகமாக இடம் பெறுவதற்கான வாய்ப்புகளை குறைத்திருக்கும் என்பதை ஊகிக்கமுடியும். சட்ட விரோதமான ஆவணத்தை நடைமுறைப்படுத்துவதும் ஒரு சட்ட விரோதமான செயலே என விமர்சனங்களை கிளப்பவும் இது காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

- என். ஜீவேந்திரன்

மேலும் இந்த பேச்சுகளில் உடன்படிக்கையை மாற்றியமைக்க முடிந்தமையும் கூட இரு தரப்பிற்கும் இடையே கருத்து மோதல்களை ஏற்படுத்த காரணமாக அமைந்திருக்கும் என்பது வெளிப்படையானது.

இவ்வாறான இழுபறிக்கு மத்தியில் இடம்பெற்ற பேச்சுக்கள் கூட்டறிக்கையை வெளிப்படுத்துவதிலும் கருத்து வேற்றுமைகளை சந்தித்தமையானது இரு நாட்கள் இடம் பெற்ற பேச்சுக்களானது வெற்றியடையவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது. இதன் பலனாகவே இப்பேச்சுக்களை மீண்டும் ஏப்ரல் மாதம் ஜெனீவாவில் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது என நம்பலாம்.

அதேபோல தற்போது கூட அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மாறி மாறி அறிக்கைகளையும் குற்றச்சாட்டுக்களையும் வெளியிட்டு வருவதை காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக நிமால் சிறிபால டி சில்வா சிறுவர் போராளிகள் குறித்து பேசப்பட்டதனால் அது போர் நிறுத்த உடன்படிக்கையில் ஏற்பட்ட மாற்றம் என தெரிவித்திருப்பதும், கலாநிதி அன்டன் பாலசிங்கம் அதனை மறுத்து நகைப்பிற்குரியது என கூறியிருப்பதும் இரு தரப்பினரிடையே காணப்படும் புரிந்துணர்வற்ற மோதல் போக்கையே எடுத்துக்காட்டுகிறது.

எவ்வாறெனினும் உடனடியாக யுத்தமொன்று தவிர்க்கப்பட்டு இருதரப்பும் பேசக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தியதானது ஒப்பீட்டளவில் நிலமையை மேம்படுத்தியுள்ளது எனக்கூறலாம்.

எனவே இடம்பெற்ற ஜெனீவா பேச்சுக்களின் வெற்றி ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள ஜெனீவா பேச்சுக்களிலேயே தங்கியிருக்கிறது என்பதே நிதர்சனமாகும்.

## மனிதத்துவத்தின் குரல்

போர்நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்தும் விதிமுறைகளை ஆராயுமுகமாகவும், மீண்டும் யுத்தமொன்று ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், புத்திஜீவிகளும் ஒன்று திரண்டு தமது கருத்துகளை தெரிவித்திருந்தனர். கடந்த வருடம் டிசெம்பர் 31ம் திகதி சமூக விஞ்ஞானிகள் ஒன்றியத்தில் இடம்பெற்ற இந்த ஒன்று கூடலில் பெப்ரவரி மாதத்தினை சமாதான மாதமாக பிரகடனப்படுத்தியதுடன் மனிதத்தின் குரல் எனும் தொனிப் பொருளில்




பல்வேறு அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாடும் இடம்பெற்றது. இதன் மூலம் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் கருத்தாடலை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அது போலவே ஜெனிவா பேச்சுக்கள் தொடர்பிலான ஆதரவினையும், பங்களிப்பினையும் வழங்குகின்ற நபர்கள், அமைப்புகள் குழுக்களுடனும் இணைந்து சமாதானத்திற்கு ஆதரவை வழங்கும் தினமாக பெப்ரவரி 20ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இச்செயற்பாடுகளின் முதல்படியாக பேச்சுக்களுக்கு ஆதரவை வழங்கவும், இது தொடர்பில் இருதரப்புக்கும் முழு ஆதரவை வழங்கவும், மக்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும் செயற்படுவதென சமாதான அமைப்புகள் தீர்மானித்துள்ளன. வேறுபாடு- களை புறந்தள்ளி இரு தரப்பினதும் புரிந்துணர்வை மேம்படுத்துவதே மனிதத்துவத்தின் குரல் அமைப்பின் எதிர்பார்ப்பாகும்.

## இவ்வார விழிப்பில்...

- ஜெனிவா பேச்சும் சமாதானத்தின் எதிர்காலமும்
- போரும் பெண்களும்
- பெண்களும் போர்த்தாக்கங்களும்
- ஆறுசுற்றுப் பேச்சுக்களும் படிப்பினைகளும்
- மாற்றுச்சிந்தனைகளை நோக்கிய ஒரு பயணம்

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம். எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 20

1. எவருக்கும் சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்துக்கு உரிமையுண்டு.
2. ஒரு கழகத்தினை சேர்ந்தவராயிருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.

## கருத்தாடல் களம்

### பேச்சுவார்த்தையில் அரசதரப்பில் இருந்து அமைச்சர் பேரியலை விலக்க கோரி முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் அரசதரப்பில் முஸ்லிம் பிரதிநிதியாக பங்குபற்றும் பேரியல் அஷ்ரப்பை விலக்கக்கோரி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் பலமான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் தனித்தரப்பை ஏற்றுக்கொள்ளாத ஜனாதிபதி, பேரியல் அஷ்ரப்பை பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்தை திருப்திப்படுத்த முடியாது. இலங்கை முஸ்லிம்களின் அனைத்து அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் தனித்தரப்பை வலியுறுத்தி செயற்படுகின்ற இக்காலகட்டத்தில் அமைச்சர் பேரியல் அரசதரப்பில் பங்குபற்றுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை. வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை எதிர்பார்ப்புகளை நன்கு அறிந்திராத அமைச்சர் பேரியல் பேச்சு வார்த்தையில் முஸ்லிம்கள் சார்பாக சரியான தகவல்களை முன்வைக்க முடியாது.

இருபத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியம் தனித்தரப்பை பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அரச தரப்பில் இடம்பெறும் முஸ்லிம் பிரதிநிதியாக தகுதியான ஒருவரை தெரிவு செய்திருக்க வேண்டும்.

எம் ஆர். எம் அஷ்ரப் - ஏறாவூர் - 03


### அமைச்சர் பேரியல் அஷ்ரப் பொருத்தமான தெரிவாகும்

ஜெனிவா பேச்சுக்களில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் செயற்பட்டுள்ள விதமானது முஸ்லிம் தரப்பு பிரதிநிதியாக அவர் செயற்பட்டுள்ளமையை எடுத்து காட்டுகிறது. கடந்த ஐக்கிய தேசியக்கட்சிக்கால பேச்சுக்களில் அரச தரப்பு பிரதிநிதியாக கலந்து கொண்ட ரவூப் ஹக்கீமை விட மிகச் சிறப்பான பாத்திரத்தை பேரியல் அஷ்ரப் வகித்துள்ளார். இதன் மூலம் புலிகள் கிளிநொச்சிக்கு வந்து தம்முடன் முஸ்லிம்களை பேசுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். அத்தோடு முஸ்லிம் தனித்தீர்ப்புக் கோரிக்கையை ஏற்று எதிர்வரும் பேச்சுக்களில் பொருத்தமான தருணத்தில் அவ்வாறு சேர்த்துகொள்ளப்படுமென புலிகள் கருத்து வெளியிட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

எனவே அரச தரப்பு பிரதிநிதியாக கலந்து கொண்டு எந்த பலனையும் காணாத முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை விட அமைச்சர் பேரியல் அஷ்ரப் சிறந்த செயற்பாட்டை வெளிப்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

அஹமட் யுஸ்ரி, அக்கரைப்பற்று

## சில தெற்கு ஊடகங்களின் இனவாதப்போக்கும் பாதிப்பும்



இலங்கையின் தேசிய இனமுரண்பாட்டுக்கும் யாழ்பாண பிரதேசத்திற்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு இருக்கின்றது. அதேபோல தமிழர் பாரம்பரியத்திற்கும் யாழ்பாணத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. எனவே இந்த யாழ் பிராந்தியம் குறித்து தென்னிலங்கை மக்கள் புரிந்து கொள்வது இன்றைய கால கட்டத்தில் முக்கியமானதொன்றாகவே கருதப்பட வேண்டும். எனினும் கடந்த ஒரு சில தசாப்தங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசம் பற்றி தென்னிலங்கை மக்கள் அறிந்து கொண்டது பெரும்பாலும் ஊடகங்களின் தவறான பிரச்சாரங்களை மட்டுமே எனக்கூற முடியும்.

அந்த வகையில் புதிய ஜனாதிபதியாக மகிந்த

- ஜனித் விபுலகுண

ராஜபக்ஷ தெரிவானதன் பின்னரான வடக்கின் நிலைமைகளை கண்டறிவதற்காக தெற்கு ஊடக அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டன. இந்த நான்கு நாள் விஜயத்தின் போது இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களினதும், விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களினதும் உண்மை நிலவரத்தை ஊடகவியலாளர்களால் பார்க்க முடிந்தது.

எனினும் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஊடகவியலாளர்களின் விஜயங்களை குறிப்பிட்ட சில ஊடகங்களும், அரசியல் தரப்பினர்களும் இனவாத சிந்தனையுடன் பார்க்கின்றனர். தெற்கில் இருக்கும் மதவாதிகள் மற்றும் சிவப்புச் சட்டைக்குள் ஒழிந்து கொண்டு இனவாதம் பேசுபவர்கள் சமூக நலனுக்காக மேற்கொள்ளப்படும் இவ்வாறான இன நல்லிணக்க முயற்சிகளை தமது விசம பிரசாரங்களால் திரிவுபடுத்துகின்றனர்.

பெரும்பான்மை சமூகத்தால் பாதிப்படைந்தவர்களே விடுதலை போராட்டத்தை நடத்தினார்கள். இந்த யாதார்த்தத்தையும், மனித நேயத்தையும் அடிப்படையாகக் கொண்டு அத்தகைய போராட்டம் நடத்திய சமூகத்துடன் இந்த இன பிரச்சினையை தீர்க்க முற்படும் போது இனவாத சிந்தனையுடன் இவ்வாறு செயற்படுவது பெரும் வரலாற்றுத் தவறாகும் என்பதே விஜயத்தினை மேற்கொண்ட ஊடகவியலாளர்களின் கருத்தாக உள்ளது.




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# தமிழனின் கலைப்படைப்பை வெளிப்படுத்திய சுனாமி!




**யு**த்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலகளாவிய ரீதியில் பயத்தில் ஆழ்த்திய காலம் மெல்லமெல்ல மாறிவருகிறது எனலாம். எனினும் இயற்கையும் இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளைப் பலியெடுக்கும் நிலைமை தலைதூக்கியுள்ளது.
இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்பு பெற்று வெடிக்கின்றன; பலியெடுக்கின்றன. அவ்வேளைகளில் எல்லாம் மனிதன் மரணவலி உணர்கின்றான்.
இந்தச் சிறப்புக் கட்டுரைத் தொடரின் முதல் 13 பாகங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன. இங்கு இறுதிப் பாகம் பிரசுரமாகிறது.



**பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
விஞ்ஞான பீடாதிபதி
(யாழ். பல்கலைக்கழகம்)

**மி**கவுயர்ந்த செயற்பாட்டுத் தரமுள்ள சுனாமி உணரும் தொகுதிகளைக் கொண்ட முன்னெச்சரிக்கைத் தொகுதி (Early Warning System) ஒன்றை அமைத்தல் மட்டும் போதுமானதன்று. அபாயம் பற்றிய தக்வல் மக்களைச் சென்றடைவதை உறுதிப படுத்தக்கூடிய இறுதிக்கட்டத் தொடர்பாடல் பயிற்சியை அடிப்படையாகக்கொண்ட தயார் நிலையும் முக்கியமானவை. இந்து மகா சமுத்திரத்தில் சுனாமி கண்காணிப்புத் தொகுதியொன்று அமைக்கப்பட்ட பின்னரும் தேசிய அனர்த்த எச்சரிக்கைத் தொகுதி (National Disaster Warning System) ஒன்றும் அவ்விடத்திற்குரிய எச்சரிக்கைத் தொடர்பாடல தொகுதி (Local Warning Communications System) ஒன்றும் பொதுமக்களுக்கு பயிற்சி அளித்தலும் இல்லாதவிடத்து, அனர்த்த ஆபத்து பற்றிய தகவல் அது சென்று சேரவேண்டிய தனித்தனி குடியிருப்பாளர்களைச் சென்று சேருமென்று எதிர்பார்க்க முடியாது.

தேசிய அனர்த்த எச்சரிக்கைத் தொகுதியானது பெரியதொரு நாடளாவிய தொடர்பாடல வலைப்பின்னலுக்கு இணைக்கப பட்டிருத்தல் வேண்டும். சுனாமி முன்னெச்சரிக்கைத் தொகுதியின் மிக முக்கியமான கூறு உடனடியாக ஆபத்துக்கு இலக்காகக் கூடியவர்களுக்குத் தகவலை எவ்வாறு கிடைக்கச் செய்வது என்பதாகும். இதற்கான முதன்மைப் பொறுப்பு அரசாங்கங்களைச் சாரும். செயற்றிறன் மிக்க தகவல் கட்டமைப்பொன்றை உருவாக்கி அதனை எப்போதும் ஆயத்த நிலையில் வைத்திருப்பது எமது நாடுகளுக்கு இலகுவான தொருகாரியமல்ல.

ஏற்கனவேயுள்ள காவல்துறை, இராணுவம், வானொலி, தொலைக்காட்சி சாதனம் போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் முன்னெச்சரிக்கை மையத்திற்கு இணைக்கப்படுவதன் மூலம் தகவல்கள் உடனடியாக வேண்டியவர்களைச் சென்றடையச் செய்ய முடியும். அத்துடன் புவிநடுக்கம், சுனாமி போன்றவற்றால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இம்முன்னெச்சரிக்கைத் தொகுதிகள் பற்றி அறிவூட்டப்படவேண்டும். ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றியும் முன்னெச்சரிக்கை கிடைத்தவுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் மக்கள் அறிந்திருக்கச் செய்ய வேண்டும். இவை பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதற்காக பிரதேச மட்டத்தில் அமைப்புகள் உருவாக்கப்பட்டு தகவல்கள் உரியவர்களைத் தாமதமேதுமின்றிச் சென்றடைவதற்கான பொறுப்பு இந்த அமைப்புகளிடம் விடப்படல் வேண்டும. இந்த ஏற்பாடு மிதமிஞ்சிய பயத்தையும் திகிலையும் ஏற்படுத்தித் தவிர்க்கப்படக் கூடிய (களவு, சனநெரிசல் போன்ற) புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்காதவாறும் பார்த்துக் கொள்வது இந்த அமைப்புகளின் பணியாகவிருத்தல் வேண்டும். சுனாமி முன்னெச்சரிக்கைத் தொகுதி பற்றிய தெளிவான விளக்கத்தை மக்கள் பெற்றுக்கொள்ள வைப்பதில் பத்திரிகைத்துறையின் பங்களிப்பும் முக்கியமானது. மக்கள் பிரதேச மட்டத்தில் ஒன்று சேர்ந்து முன்னெச்சரிக்கைத் தொகுதி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்வதில் பெரும் பங்களிப்புச் செய்யமுடியும் என்பதை ஊடகங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டுள்ளன.

இந்து மகா சமுத்திரத்தை எல்லையாகவுடைய இருபத்தேழு நாடுகளில் பெரும்பாலானவை தத்தமது மக்களுக்கு சுனாமி ஆபத்து எச்சரிக்கையை விடுப்பதற்கு தனித்தனி செயற்றிட்டங்களை உருவாக்கி வருகின்றன.

### அனர்த்த முகாமைத்துவம் அமைப்பு

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவப் பேரவை (Disaster Management Council)இ இயற்கை அனர்த்தங்களைச் சாந்தப்படுத்துவதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு (Parliamentary Select Committee for Mitigating Natural Disasters) போன்ற அரச அமைப்புகளும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வோதயம் போன்ற அரசசார்பற்ற அமைப்புகளும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசியமட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்றிட்டம் (National Level Management Action Plan) ஒன்றை வகுத்து உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படக்கூடிய அழிவுகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் கொரிய நாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதி உதவியுடன் 45 கோடி ரூபா செலவில் தேசிய அனர்த்த முகாமைத்துவ மையம் (National Disaster Management Centre) ஒன்றைக் கட்டுநாயக்காவில் அமைத்து வருகிறது. இவ்வேலைகள் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்த மையத்தின் நோக்கங்களாவன :-

1. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனர்த்த ஆயத்தநிலை வல்லமையை (Capacity) அதிகரித்தல்.
2 வருங்காலத்தில் இடம்பெறக்கூடிய அனர்த்தங்களுக்குத் தக்கவாறு உடனடியாக இயங்கக்கூடிய உத்தியோகத்தர்களையும் தொண்டர்களையும் பயிற்றுவித்தல.
3 அனர்த்தங்களை எதிர்கொள்ளலும் முகாமைத்துவமும் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்
4 அனர்த்தங்களின் போது நிவாரணப் பொருள்களைச் சேகரித்து வைக்கவும் விநியோகிக்கவும் நவீன பண்டகசாலை வசதிகள்

அனர்த்த அபாய அறிவிப்புத் தொகுதியொன்றை இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரக் கிராமங்களில் நிறுவ சர்வோதயமும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதில் அனர்த்தங்களால் ஏற்படும் துன்பங்களைக் குறைத்தலுக்கான பயிற்சியும் (Disaster Mitigation Training) இறுதிக்கட்ட இணைப்பும் (Last mile Connectivity) வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகளை சர்வோதயம் ஆரம்பித்துள்ளது. இந்த ஆராய்ச்சி வேலைத்திட்டம் சுனாமியால் பாதிக்கப் பட்ட 226 சர்வோதய கிராமங்களையும் (Sarvodaya Villages) அனர்த்தத் தாக்கங்களிலிருந்து முற்றாக மீட்பதற்கான பயிற்சியினதும் ஐந்து வெவ்வேறு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களினதும் பயன்தரு தன்மைகளையும் (Effectiveness) மதிப்பீடு செய்யும். இவ்வேலைத்திட்டத்திற்கு கனடாவின் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி மையம் (International Development Research Centre of Canada) நிதியுதவி அளிக்கிறது. இதன் பங்காளிகளாக வன்காட் பவுண்டேசன் (Vanguard Foundation), லண்டன் பொருளாதார கல்லூரி (London School of Economics) யின் அனர்த்த தொடர்பாடல் வல்லுநர் கலாநிதி கோடன் கவ் (Dr. Gordon Gow), TVE Asia Pacific (Sri Lanka), பரலியா (Paraliya) வில் அமைந்துள்ள சமூக சுனாமி முன்னெச்சரிக்கை மையம் (Community Tsunami Early Warning Centre – CTEC) ஆகியன செயற்படுகின்றன.

பொதுநல நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் சர்வோதயத்தின் இச்செயற்றிட்டம் உயிர்களைக் காப்பாற்றுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு பற்றிய நம்பிக்கையையும் ஊட்டும் வலுவுடையது.

இந்தத் திட்டம் கிராமத்தவர்களை அனர்த்தங்கள் பற்றி ஒன்றுமறியா நிலையிலிருந்து அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் முதல் அவற்றிலிருந்து முற்றாக மீளும் நிலை வரையும் ஆயத்தம் செய்கிறது. உத்தியோகபூர்வ அனர்த்த எச்சரிக்கை வந்ததும், கிராமத்தவர்களை அதை உடனடியாக அறிந்துகொள்ள வைப்பதிலும் அந்த எச்சரிக்கைக்குத்தூக உடனடி நடவடிக்கையில் இறங்க ஆயத்தமாக வைத்திருப்பதையும் இம்முயற்சி உறுதி செய்கிறது.

தாய்லாந்து பூகெட் மாகாணத்தின் (Phuket Province) ஒரு பகுதிக் கடலோரத்தில் எழுபத்தாறு அபாய அறிவிப்பு கோபுரங்களைக் (Siren Towers) கொண்ட வலைப்பின்னலொன்றை நிறுவி வருகின்றது. பூகெட் மாகாணத்தில் படோல் கடற்கரையில் நிறுவப்பட்ட அவ்வாறான கோபுரமொன்றை 84ஆவது படம் காட்டுகிறது.

சுனாமி பாதுகாப்பு நடவடிக்கைகள் உயர் தொழில்நுட்பம் முதல் வெகு எளிமையான நடவடிக்கைகள்வரை பரந்து விரிவுபடுத்தப்படுகின்றன. இதற்கு உதாரணமாக தாய்லாந்தில் ஒட்டப்பட்ட சுனாமி தகவல் சுவரொட்டியை 85 ஆவது படத்தில் காணலாம்.


சுனாமி பற்றிய விழிப்புணர்வை பாடசாலைகளில் கற்பித்தல், தீர்மானம் மேற்கொள்வோர் மற்றும் ஊடகவியலாளர் போன்றோருக்கு பயிற்சி வழங்கல், அனர்த்தங்கள் பற்றிய தகவல்கள் எல்லா மொழிகளிலும் கிடைக்கச் செய்தல் போன்ற நீண்ட கால எற்பாடுகளுக்கு ஐ.நா. ஸ்தாபனம் உதவிகள் வழங்கி வருகிறது.

இலங்கையில் பாடசாலைகளின் பாடவிதானத்தில் சுனாமி பற்றிய விடயங்களைச் சேர்த்துக்கொள்வது பற்றி கொழும்பு காலநிலை அவதானிப்புத் திணைக்களம் (Department of Meteorology) தேசிய கல்வி நிறுவனத்துடன் (National Institute of Education (NIE)) ஆராய்ந்து வருகிறது. இது வருங்கால சந்ததியினர் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வுடையவர்களாக இருக்க உதவும்.

படம் 84




படம் 85




### சுனாமியும் சுற்றுச்சூழலும்

2004 டிசெம்பர் சுனாமி பெருமளவு உயிர், பொருட் சேதத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி, சுற்றுச்சூழலில் அளவிட முடியாதவளவு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கண்டற்த் தாவரங்கள் (Mangrove vegetation), முருகைக்கற் பாறைகள் (Coral Reefs), காடுகள், கரையோர ஈர நிலங்கள் (Coastal Wetlands), தாவரங்கள் வளரும் முறை (Vegetation), மணல் மேடுகள் (Sand dunes), பாறைகள் உருவாதல் (Rock formations), விலங்குகளதும் தாவரங்களதும் பல்வகைமை (Animal and Plant Biodiversity), நிலத்தடி நீர் போன்ற சுழல் தொகுதிகள் (Ecosystems) மீது சுனாமி பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் திண்ம, திரவக் கழிவுகளும் கைத்தொழில் இரசாயனக் கழிவுகளும் பரவி நீரை மாசுபடுத்தியுள்ளதுடன் கழிவுநீர் சேகரிப்பான்களும் (Sewage collectors) அவற்றை பக்குவப்படுத்தும் இயந்திர சாதனங்களும் அழிக்கப்பட்டுவிட்டதாலும் சூழல் மேலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக நன்னீர் விநியோக முதல்கள் (sources) நஞ்சூட்டப்பட்டதுடன் ஏராளமாகப் பயிர்ச்செய்கை நிலங்களில் உப்புப் படிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது: மாலைதீவில் பதினேழு வட்டவடிவமான முருகைக்கற் பாறைகளிடையேயமைந்த நீர்த் தேக்கங்களை (Coral reef atolls) மேவி சமுத்திர நீர் பாய்ந்ததால் அவை முற்றாக நன்னீர் அற்ற இடங்களாக மாறிவிட்டன. இதனால் இவ்விடங்கள் இன்னும் பல தசாப்தங்களுக்கு குடியிருப்புக்கு அருகதையற்ற இடங்களாக மாறிவிட்டன.

பல கிராமங்களின் நன்னீர் விநியோக மையங்களாகத் திகழ்ந்த எண்ணிக்கையற்ற கிணறுகள் கடலாலும், மணலாலும், மண்ணாலும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. பாறைகளிலுள்ள துவாரங்களினூடாக (Aquisers) நீர் வி ஜந்துக்கள் உட்புகுந்துள்ளன.

உப்புச் செறிந்த தரை மேற்பகுதி விளைச்சலுக்கு உதவாததாகிவிட்டது. அவற்றை விவசாய பூமியாக மாற்றுவது சிரமமும் செலவும் மிக்க காரியம். மேலும் இது பல தாவரங்களும் நுண்ணங்கிகளும் (Micro organisms) அழிவதற்கும் காரணமாகி விட்டது. பலவாயிரம் ஏக்கர் நெல் வயல்கள், மாந்தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள் அழிந்துவிட்டன.

சுனாமியால் ஏற்பட்ட நன்மை எனக் கூறுவதற்கு ஒரேயொரு விடயம் மட்டும் உண்டு. அது கல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழனின் கலைத்திறனைப் பறை சாற்றி நிற்கின்ற மகாபலிபுரத்தில் இதுவரை சிதைந்து பாழடைந்து பல நூற்றாண்டுகளாக மணலால் மூடிக்கிடந்த பல சிற்பக் கோவில்கள் - தம்மை மூடிக்கிடந்த மணலை சுனாமி வாரிக்கொண்டு சென்றுவிட்டதால் - தமிழனின் மேலும் பல கலைப்படைப்புகளை இன்று நாம் காணக்கூடியதாகவுள்ளது.

### முடிவுரை

உலகம் தோன்றிய காலம் முதல் இயற்கை அனர்த்தங்களும் அதனால் அழிவுகளும் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. அது இயற்கையின் நியதி. அவை நிகழ்வதை மனிதனால் தடுக்க முடியாது. ஆனால், அவற்றினால் ஏற்படும் பேரழிவுகளைக் குறைக்க முடியும். அதற்கான கூட்டு நடவடிக்கைகளை எடுப்பது அரசினதும் மக்களதும் கடமையாகும். இக்கட்டுரைத் தொடர் சாதாரண மக்களிடையே இயற்கை அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டது. இக்கட்டுரைத் தொடரில் புவிநடுக்கங்கள், எரிமலைக் குமுறல்கள், சமுத்திர நீரால் ஏற்படும் சுனாமி போன்ற அனர்த்தங்கள் பற்றிய தகவல்கள் விரிவாகத் தரப்பட்டன. வரட்சி, வெள்ளம், சூறாவளி, நிலச்சரிவு போன்ற அனர்த்தங்கள் பற்றிய விரிவான விஞ்ஞான விளக்கங்கள் தரப்படவில்லை. இவை அடிக்கடி நிகழும் அனர்த்தங்களாகையால் அவை பற்றி மக்களிடையே ஓரளவு விளக்கம் இருக்கும் என நம்புகிறோம்.

மனித செயற்பாடுகளால் 'புவி வெப்பநிலை உயர்வதால் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடியும் பெரிய அளவிலும் ஏற்படுவதை இக்கட்டுரைத் தொடரில் கோடிட்டுக் காட்டப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் அளவுக்கதிகமான காபன் வாயுக்களை வளிமண்டலத்திற்கு வெளிவிடுவதாலும் காடுகளை அழிப்பதாலும் ஏற்படும் பாரிய தட்பவெப்பநிலை மாற்றங்கள் சுட்டிக்காட்டப்பட்டது. இயற்கையுடன் சீண்டும் எந்தச் செயற்பாடும் பலபரிமாண எதிர்த்தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது வலியுறுத்தப்பட்டது. காடுகளை வளர்த்தல், முருகைக் கற் பாறைகளைச் சூறையாடாதிருத்தல், கண்டல் தாவரங்களை அழிக்காதிருத்தல், நிலத்தடி எரிபொருள்களுக்கு மாற்றீடாக இதர தூய சக்தி முதல்களை உபயோகிக்கும் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல் என்பன இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளன.

(முற்றும்)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

06.03.2006- 10.03.2006

முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!

★சக்திக்குறைவு ★ஞாபகமறதி ★பயம் ★நடுக்கம்
★நித்திரைக்குறைவு ★ஆண்மைக்குறைவு ★நீரிழிவுநோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள். ஆண்மைச்சக்திக் குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

**குறிப்பு:- இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்**

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

Dr.P.**ஆறுமுகம்** S.M.P

A.S.N. சுற்றுலாவிடுதி,

392/A மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)

Govt.Regd. No.9492

Hot Line: 0777 569205 T.P.: 3181.5399

(C/48130) (முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)


## வேலணைப் பிரதேச-வீதிகளை புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்5

வேலணைப் பிரதேச சபையின் முக்கியமான நான்கு வீதிகளுக்கு நிக்கொட் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்றுத் தருமாறு வேலணைப் பிரதேசசபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை கடிதம் மூலம் கேட்டுள் ளார்.

நான்கு வீதிகளுக்குமான திட்ட எண்ணக் கருப்படிவங்களையும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

வேலணை இராசையா வீதி, வேலணை முடிப்பிள்ளையார் வீதி, நயினாதீவு ஈச்சங்காடு வீதி, புங்குடுதீவு அம்பலவாணர் வீதி. ஆகியவற்றை திருத்துவதற்கு இந்த வருடம் நிதி ஒதுக்கித் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-105)


## YMCA சேவைகள்

சுவாத்தியமான தங்குமிடம், சுத்தமான உணவகம், நோயாளர் வாகனசேவை, திருமண மண்டபம், வசதிகளுடனும்கூடிய கேட்போர் கூடம் அனைத்தையும் நியாயமான கட்டணத்தில் பெற்றுக்கொள்ள

யாழ் YMCA,

109, கண்டி வீதி.தொ.பே 2222499


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07.05.1955 | 26.02.2004 |



### அமரர் சின்னத்துரை வியாகேசன்
### (பிள்ளையார்)

**திதி:05.03.2006**

உருக்குலைந்த கோட்டைகள்
சரித்திரம் மறப்பதில்லை
கற்றோர் அவையில் முன்னின்று
மற்றோர் குற்றம் கூறாத வகையில்
வாழ்ந்த எங்கள் தந்தையே!
நீங்கள் இல்லாத வாழ்வு இன்று கானல்தான்.

கட்டுடை,
மானிப்பாய். (47400) மனைவி, பிள்ளைகள்.


# 4 வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்

| யாழ்ப்பாணம் கோயில் வீதி | யாழ்ப்பாணம் கண்டி வீதி | மந்திகை, புலோலி. | மானிப்பாய் ஆலடிச்சந்தி |
|---|---|---|---|

எதிர் வரும் மாசி மகம் அன்று ஏடு தொடக்கி இம்மாதமும் சித்திரை மாதமும் பாலர் பாடசாலை அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**Year 1-5 English Medium**

*Week End Classes* நடாத்தப்படும்.

ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடை பெறுகின்றன.

மற்றும்

அலுவலக உத்தியோகத்தர்களுக்கு விசேட

**Diploma in Business English**

*Includes Report Writing & Letter Writing*

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

| | |
|---|---|
| வயது 2+ முதல் வயது 3 வரை | Play Group |
| வயது 3+ முதல் வயது 4 வரை | Montessori |
| வயது 4+ முதல் வயது 5+ வரை | Pre-School |

விசேட அம்சங்கள்

- ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
- தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
- பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
- முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்

- Diploma in English
- Certificate in English
- IELTS

5+ to 14+ சிறார்களுக்கு

- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

**BRITISH BUSINESS SCHOOL**

| இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய். |
|---|---|---|---|

HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@gmail.com






# பாவனையாளர்களே ...!




- ஹினோடே போஸலானா எனப் பெயரிட்டு வெளிவந்த சிமெந்தானது தற்போது சுப்பர் போஸலானா சிமெந்தாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ஹினோடே போஸலானா கொண்டுள்ள SLS 1247 தரத்தினையே சுப்பர் போஸலானா சிமெந்தும் கொண்டுள்ளது.
- சுப்பர் போஸலானா சிமெந்தும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) தரச் சான்றிதழைப் பெற்றதாகும்.

## உறை புது ரகம்
## தரம் என்றும் நிரந்தரம்!

மிட்சுய் சிமெந்து உற்பத்தியின்
ஹினோடே போஸலானா சிமெந்து
இப்போது
டோக்கியோ சுபர் உறையில்

**MITSUI CEMENT**

உற்பத்தியாளர்களிடமிருந்து

# அதிபர் புஷ்ஷின் இந்திய விஜயம் அளித்துள்ள வெற்றி

எதிர்பார்க்கப்பட்டதுபோல் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தமது பாரியார் மற்றும் பரிவாரங்களுடன் இந்தியாவுக்கு வெற்றிகரமாகத் தமது விஜயத்தை நிறைவேற்றிக் கொண்டு அடுத்தகட்டமாக தனது (அமெரிக்காவின்) மிகநேச நாடான பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுச்சென்றார்.

அதிபர் புஷ்ஷிற்கு இது பாரதத்துக்கான கன்னி விஜயம். எனவே, இந்த விஜயத்தின் போது ஏதாகிலும் காத்திரமான காரியத்தைச் செய்திடவேண்டும் என்று அவர் விரும்பியிருக்கக்கூடும். அந்த அடிப்படை யில்தான் இரு நாடுகளுக்குமிடையில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது என்று கொள்ளலாம்.

இந்தியாவின் அணுசக்திக் கொள்கையில் அமெரிக்காவுக்கு எப்போதும் சந்தேகம் இருந்து வந்துள்ளது. இந்தியாவின் அயலில் அதுவும் இந்தியாவுக்கு எதிர்நாடுகளிடம் அணு ஆயுதங்கள் இருக்கும்போது அதுமட்



இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த அதிபர் புஷ்ஷின் மனைவி லாரா புஷ் புதுடில்லி சிறுவர் இல்லம் ஒன்றில் சிறுவர்களைக் கட்டித்தழுவியபோது.

டும் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற அதன் நிலைப்பாட்டை இப்பொழுது அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகின்றது. ஆஸியாவில் ஒரு வல்லரசு நாடாக வளர்ந்துவரும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்ள அமெரிக்கா இனிமேலும் காலம் தாழ்த்தக்கூடாது என்ற நிலைக்கு புஷ் வந்திருக்கிறார் என்று கூறுவது பொருத்தமாகும்.

பனிப்போர் யுகத்தில் இந்தியாவின் இராஜதந்திர உறவுகள் பெரும்பாலும் சோவியத் யூனியனையே சார்ந்து இருக்கக்காணப்பட்டது. சோவியத் யூனியன் சிதைவடைந்ததன் பின்னர் இந்தியாவின் அமெரிக்க உறவுகள் முன்பைவிடச் சீரடைந்துள்ளன.

இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்திய பின்னர் அதிபர் புஷ் வைபவமொன்றில் பேசுகையில் இதையே வலியுறுத்தினார்.

இரு நாடுகளும் தமது பொது விழுமியங்களின் அடிப்படையில் இஸ்திரமான பங்காளித்துவ கூட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ளன என்றார் புஷ்.

உலகத்தை மேலும் பத்திரமானதாக்குவதற்கு நாங்கள் பங்காளிகளாகப் பணியாற்றுகின்றோம். இராணுவ நிலைகளிலும் நாங்கள் ஒத்துழைக்கின்றோம். ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போதும் நாம் ஒத்துழைத்தோம். நாங்கள் பல்வேறு சர்வதேசப் பிரச்சினைகளையும் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டோம். சமாதானத்திலும் நாங்கள் பங்காளிகளாக இருக்கின்றோம் என்று கூறினார் அதிபர் புஷ்.

சிவிலியன் அணு சக்தி பயன்பாடு குறித்த ஒப்பந்தம் தொடர்பாக அதிபர் புஷ் கருத்து வெளியிட்டபோது எமது பங்காளித்துவம் சிறப்பானமுறையில் மாறிவருகின்றது - என்றார்.

இந்தியாவின் எல்லைகளிலும் தீவிரவாதிகளின் முகாம்கள் அமைவதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று இந்திய விஜயத்துக்கு முன்பே பாகிஸ்தானை வலியுறுத்தியிருந்த அதிபர் புஷ், இந்தியாவில் பாகிஸ்தான் பற்றிய தமது கருத்து எந்த அளவில் வரவேற்கப்பட்டிருந்தது என்பதை அறிந்துகொண்டு பாகிஸ்தான் புறப்பட்டார். பாகிஸ்தான் தலைவர்களை நேரில் சந்திக்கும்போது அதே கருத்தை அவர் வலியுறுத்துவார் என்றே இந்தியத் தலைவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

இந்தியத் தலைவர்களுடன் அமெரிக்க அதிபர் மியான்மார் இராணுவ ஆட்சி பற்றியும் நேபாளத்தில் மன்னர் ஆட்சி, மாவோ கிளர்ச்சி பற்றியெல்லாம் ஆலோசித்துள்ளார் என்று இரு தரப்பிலும் அறிக்கை கூறியது. ஜெனீவா நிச்சயமாக இலங்கை நிலைமை பற்றியும் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெற்று முடிந்த பேச்சுவார்த்தைகள் பற்றியும் ஆலோசித்திருப்பார்கள் என்று சொல்லத் தேவையில்லை.

## பலஸ்தீன ஹமாஸ் அரசுக்கு சர்வதேசம் கொடுக்கும் அழுத்தம்

### பலஸ்தீனத்துக்கு அழுத்தம்

பலஸ்தீன அதிகார சபையின் அரசாங்கத்தை 'ஹமாஸ்' தீவிரவாத அமைப்பு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து அந்நாட்டுக்கான பல்வேறு பொருளாதார மற்றும் நிதி ஆதாரங்களை அவசரப்பட்டு அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் நிறுத்திக்கொண்டுவிட்டநிலையில் அந்நாட்டின் அடிப்படைத் தேவைகளுக்கான நிதியைக் கொடுத்துதவ ஐரோப்பிய யூனியன் முடிவு செய்திருப்பது வரவேற்கவேண்டிய ஒரு திருப்பம்.

பல ஆண்டுகாலமாகத் தமது இருப்பு நிலையை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காகப் போராடிக்கொண்டும் வறுமை நிலையில் அகதி முகாம்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பலஸ்தீன மக்கள் தமது எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு 'ஹமாஸ்' அமைப்பால் மட்டுமே சாத்தியம் என்று கருதுகிறார்கள் என்றால் ஜனநாயகம் பேசுகின்ற உலக நாடுகள் அந்த மக்களின் தீர்ப்பை மதித்துத் தானே ஆகவேண்டும்?

'ஹமாஸ்' தனது அடிப்படைக் கொள்கைகளைச் சற்று தளர்த்தாத விதத்தில் முன்னெடுக்க முயலுமானால் அதன் விளைவுகளை அது சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

ஆயுதப் போராட்டத்தின் மூலமே பலஸ்தீனர்களின் வாழ்வாதாரத்தை - பலஸ்தீன நாட்டை நிலைநாட்டவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து - ஹமாஸ் தேர்தலில் போட்டியிட முடிவுசெய்தவேளையிலேயே ஓரளவுக்குத் தளர்வு நிலையைக் காட்டியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இப்பொழுது அரசாங்கம் அமைக்கவும் ஆட்சி நடத்தவும் அது முன்வந்திருப்பது அந்நிலையை மேலும் முன்நகர்த்தியுள்ளது. எனவே, காலப்போக்கில் அதன் நிலைப்பாட்டில் - பலஸ்தீனத்தின் வறுமை நிலையைச் சீர்செய்யும் வகையிலாகுதல் மாற்றங்கள் ஏற்படமுடியும் என்று பார்க்கலாம். மேலும் சகலவிதத்திலும் வலுவான நிலையில் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் ஆதரவு பின்னணியுடன் வளர்ச்சிபெற்றுள்ள இஸ்ரேல் நாட்டைப் பலஸ்தீனம் தனியாகவும் நேரடியாகவும் எதிர்த்து அழித்தொழிப்பதென்பது தற்போதைக்குச் சாத்தியமான விடயமா? யதார்த்தமாகுமா? என்ற கேள்வி பெரிதாக எழுந்து நிற்கும் நிலையில் 'ஹமாஸ்' தன் நிலையில் இன்றைய யதார்த்த நிலைக்கு ஏற்றவகையில் சுதாகரித்துக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிப்பது அவசியமாகின்றது.

அந்த வகையில்தான் 'ஹமாஸ்' தலைவர்களுடன் ரஷ்ய அதிபர் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதையும் ஐரோப்பிய யூனியன் மட்டுப்படுத்திய வகையில் நிதி ஆதாரங்களை வழங்க முன்வந்திருப்பதையும் நோக்கவேண்டும்.

இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான 'ஹமாஸின்' தலைவர் ஒருவர் பலஸ்தீனத்தின் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் நிலையிலும் அந்த நாடு உடனடியாக நிதியாதார வீழ்ச்சியிலிருந்து நிமிர்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் குறுகிய கால நிதி உதவிகளை வழங்க முடிவு செய்துள்ளது.

இந்த உதவிகள் பலஸ்தீன அதிகார சபையினூடாக அல்லாமல் 120 மில்லியன் யூரோ - (142 மில்லியன் டொலர்) வேறு சர்வதேச நிதி நிறுவனங்கள் மூலமே வழங்கப்பட இருப்பதாகத் தெரிகின்றது. 'ஹமாஸ்' பலஸ்தீன நிர்வாகத்தை முறையாகக் கையேற்கும் முன்னர் தனது அதிதீவிரப் போக்கை மிதவாதத் தன்மைக்குமாற்றிக் கொள்ளும்படி அழுத்தம் கொடுப்பதற்காகவே அதிகார சபைக்கு ஐரோப்பிய யூனியன் நேரடியாக நிதியை வழங்கவில்லை என்பது தெளிவு.

இஸ்ரேல் நாட்டின் உயிர் வாழும் உரிமையை அங்கீகரிக்க மறுப்பதும் ஆயுதப் போராட்டத்தைக் கொள்கையாகக் கொண்டதுமான ஹமாஸ் அமைப்பு பலஸ்தீனத்தின் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் போது அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய ஐரோப்பிய ஒன்றிய வெளி உறவு அமைச்சர்கள் மகாநாடு அண்மையில் பிரஸ்ஸஸில்நடைபெற்றது. அதையடுத்து ஐரோப்பிய ஒன்றிய வெளிஉறவு ஆணையர் பெனிட்டா பெரேரோ - வால்ட்னர் அம்மையார் கருத்து வெளியிடுகையில், பலஸ்தீனத்தின் அவசிய அத்தியாவசிய தேவைகளை சமாளிப்பதற்கென கணிசமான அளவு நிதி அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்காக மின்சாரக் கட்டணங்களை நாம் செலுத்துவோம். அதன் நேரடி சேவைகளுக்கு நிதி வழங்குவோம் என்றார்.

40 மில்லியன் யூரோ எரிசக்திகளுக்கும் மற்றும் பலஸ்தீன அகதிகள் நலனுக்கென ஐ.நா. நிவாரண மற்றும் சேவைகள் முகவர்கள் அமைப்பின்மூலம் 64 யூரோவும் வழப்படவிருக்கின்றது. சம்பள நிலுவைகளை நிவர்த்தி செய்ய 17.5 மில்லியன் யூரோ மட்டுமே பலஸ்தீன அதிகார சபைக்கு வழங்கப்படவிருக்கின்றது.

ஹமாஸ் அரசாங்கம் அமைத்த பிறகு நிவாரண உதவிகள் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும் என்று அமெரிக்க முடிவு செய்துள்ளது. 'ஹமாஸ்' வன்முறையைக் கைவிடக் மறுக்குமானால், போராளிகளின் ஆயுதங்களைக் களைய மறுக்கமானால், இஸ்ரேலுக்கும் பலஸ்தீன அதிகாரசபைக்கும் இடையிலான முந்தைய உடன்பாட்டின்படி செயற்படமறுக்குமானல் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மற்றும் ஐ.நா. சபை ஆகிய சர்வதேச மத்தியஸ்தர்கள் கூடி உதவி வழங்கும் நிலைமைபற்றி ஆலோசிப்பார்கள் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடனடியாக அவசர நிதி உதவிகள் கிடைக்காது போனால் பலஸ்தீன அதிகாரசபை பார்தூரமான நிதி நெருக்கடியை எதிர்கொள்ளக் கூடும் என்று ராய்டர் ஸ்தாபனம் தனக்குக் கிடைத்துள்ள இரகசிய ஆதாரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே இஸ்ரேல் வரி வருமானங்களை மாற்றிக்கொடுப்பதை நிறுத்திவிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய ஆதாரங்களிலேயே பலஸ்தீன நிர்வாகம் பெரிதும் தங்கியுள்ளது. ஆனால் 'ஹமாஸ்' ஸ்தாபனத்தை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்பு என ஏற்கனவே தடை செய்துள்ளமை நிதி உதவிகள் தொடர்வது சந்தேகத்துக்கு இடமாகியுள்ளது.

***

## உலக வலம்

மேனா

## பிரஸ்ஸில் பெண்கள் விழா

பெண்மையை உயர்த்துவதும், அவர்களின் உரிமைய நிலை நாட்டுவதும் பெண்கள் அமைப்புக்களின் பெரும் போராட்டமாக முன்னெடுக்கப்படும் இன்றைய கால கட்டத்தில் பெண்மைக்கே உரிய அழகை, உயர்த்தி பாராட்டுவதற்கென்றே பெண்கள் அமைப்புக்களால் நடத்தப்படும் களியாட்டம் ஒன்று பிரஸ்ஸஸ் நாட்டின் தலைநகரான றியோடி ஜெனிரோவில் நடந்து முடிந்துள்ளது.

பெண்களின் அழகையும் பெருமையையும் எடுத்துக்காட்டுவதற்காக இரண்டு நாள்கள் நடைபெற்ற கலைவிழாவின் அழகிய பவனியில் அந்த நாட்டின் அழகிகளும் நடிகைகள் பலரும்கூட கலந்துகொண்டனர். உடல்களைப் பலவிதமான கோணங்களில் ஆட்டி அசைத்துக்கொண்டும், சிற்றின்பப் பாடல்களைப் பாடிக்கொண்டும் அப்பெண்கள் பவனி வந்தனர்.

சம்பா பள்ளிகள் என்றழைக்கப்படும் பாரம்பரிய நடன அமைப்பைச் சேர்ந்த பெண்கள் நடமாடியபடி பவனி வந்தனர்.

கர்ப்பிணியான ஒரு பெண் பிறந்த மேனியாக பெண்மையின் அழகை வர்ணித்தபடி ஆடிக்கொண்டு சென்றார். ஆயிரக்கணக்கானவர்கள் பார்வையாளர்களாக இருந்து ரசித்தனர்.

தடைகளை உடைத்துத் தள்ளி சம அந்தஸ்தைப் பெண்கள் நிலை நாட்டியுள்ளார்கள் என்று ஒருவர் பாடினார்.

பலவிதமான உருவங்களும் பெண்களின் படங்களும் பவனியில் எடுத்துக் செல்லப்பட்டன. பிரஸ்ஸஸில் இது ஒரு பிரம்மாண்டமான வருடாந்த விழா.

***

### ஹிட்லரை ஆதரித்த பிரிட்டிஷ் எழுத்தாளர்

ஐரோப்பாவிலிருந்த யூதர்கள் அனைவரையும் கொலை செய்து அழித்தொழித்த சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லர் முயன்றிருப்பார் என்பதில் சந்தேகம் எழுப்பிய பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியர் ஒருவர் ஆஸ்திரியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

2ஆம் உலக மகாயுத்தத்தின்போது யூதர்கள் ஆயிரக்கணக்கில் நாஸிகளால் நச்சு வாயு மண்டபங்களில் அடைத்துக் கொல்லப்பட்டார்கள் என்பதை 67 வயதான டேவிட் இர்வின் என்ற அந்த எழுத்தாளர் மறுத்திருந்தார். அப்படியான படுகொலை எதுவும் நடக்கவில்லையென்று 1989ஆம் ஆண்டு தாம் மறுத்திருந்ததாகவும் இப்பொழுது அதை ஏற்றுக்கொள்வதாகவும் விசாரணையின் போது அவர் தெரிவித்தார்.

அவருக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து தண்டனையைக் குறைக்கும்படி அவர் மேன்முறையீடு செய்துள்ளார். தண்டனை போதாது 10 வருடங்களுக்குமேல் சிறைத்தண்டனை விதிக்கப்படவேண்டும் என அரசு தரப்பில நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது.

சிறைக் கூண்டில் இருந்தபடி பத்திரிகையாளர்களிடம் பேசியுள்ள இர்வின் ஐரோப்பாவிலுள்ள யூதர்களைப் படுகொலை செய் யும் நிகழ்வுக்கு ஹிட்லர் பொறுப்பாக விருந்திருப்பார் என்று தாம் நம்பவில்லை என்றார்.

ஐரோப்பாவிலுள்ள யூதர்கள் அனைவரையும் படுகொலை செய்வது என்றவாறு ஒரு கொள்கை நாஸிகளிடம் இருந்ததாகத் தெரியவில்லை - அப்படி இருந்திருந்தால் எவ்வாறு இவ்வளவு பேர் உயிர் தப்பியிருந்துள்ளார்கள்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



பிரஸஸ் நாட்டில் பெண்கள் விழாவில் கவர்ச்சிகர உடையில் அந்நாட்டு நடிகை ஜீலியானா பாயிஸ் நடனமாடி பவனி வரும் காட்சி.

## ஸ்கிறீன் / துணிகளில் பிரிண்டிங் பயிற்சி
## SCREEN & TEXTILE PRINTING TRAINING

சாறி, கேர்டன், சுடிதார், பெட் சீட், தலையணை உறை, T- சேர்ட், தைத்த ஆடைகள் மற்றும் துணிகளில் கோல்ட், கிலிட்டர், எம்போஸ், நோமல், பேர்ல், 4 கலர் போட்டோ, மற்றும் விசிட்டிங்காட், அழைப்பிதழ்கள், கலண்டர் பலவற்றை இலகு முறையில் இந்திய நவீன தொழில் நுட்பத்திற்கமைய 2 நாட்கள் மட்டுமே ....



காலம் : 2006 மார்ச் 22, 23 (புதன், வியாழன்)
**தென்னிந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் உடன் வழங்கப்படும். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்**
விரிவுரையாளர்: Hon.Dr. அன்ரோ டினேஸ், B.A, D.S.Tech., (India)
**Archanah Academy**
பிரவீணண் என்ரபிரைசஸ்
35 / 1, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
வவுனியா
**T.P. No. 024 4589707, 0777 767827**


## நீங்காத நினைவுகளில் 4ஆம் ஆண்டு

| அவனிக்கு வரவு | | அவனிடம் விரைவு |
|---|---|---|
| 08 - 05 - 1940 |  | 15 - 02 - 2002 |

### அமரர் சுப்பர் அப்புத்துரை (விதானை)

*திதி: 05-03-2006*

*அன்பின் உறைவிடமே - எம்*
*குடும்பத்தின் ஒளிவிளக்கே*
*காலனவன் பாசக்கயிற்றுக்குள் சிக்குண்டு*
*நான்கு ஆண்டுகள் ஆகியும் ஆறவில்லை*
*எமது துயரம்.*

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**கற்பகப்பிள்ளையார் வீதி,**
**உரும்பிராய் வடக்கு.** (47554)26.19.15)

நினைவுகளுடன்...
**குடும்பத்தினர்.**

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 05

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ம.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார். (3-14)

* * *

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் கலந்துகொள்ளவுள்ளார். (3-14)

## பாஷையூரில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பிரதேச லயன்ஸ் கழகத்தினால் பாஷையூர் புனித அந்தோனியார் கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலவச மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதில் வைத்திய நிபுணர்களான டாக்டர் பவானி, டாக்டர் சிவச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு மகப்பேறு, நீரிழிவு, இரத்த அழுத்தம், குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கான இலவசப் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

அத்துடன் இந்நிகழ்வில் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ்.லயன்ஸ்கழகத் தலைவர் எஸ்.றஞ்சன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (3-203)

## வட்டுக்கோட்டையில் கண் பரிசோதனை முகாம்

சுழிபுரம், மார்ச் 5

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பண்ணாகம் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

லயன் ச.கனகரசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூறு பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே, கண்பரிசோதனை செய்தவர்களுக்கும் கண்ணாடிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-28-203)

## மின்னிணைப்புப் பயிற்சி

தென்மராட்சி, மார்ச் 5

சாவகச்சேரி அறவழி நிலையமும் கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனமும் இணைந்து மின்னிணைப்பு பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கவிருக்கின்றன.

கைதடி, நுணாவிலில் உள்ள அறவழி பயிற்சி நிலையத்தில் நாளை முற்பகல் 10.30 மணிக்கு பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

நிலையத்தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஸ் கலந்துகொள்வார். (3-117)

## துயர் பகிர்கின்றோம்

*எமது பாடசாலையின் பகுதித் தலைவர்*
திரு.ச.நித்தியானந்தன் *அவர்களின் அன்புத் தாய்*

### திருமதி சதாசிவம் நல்லபிள்ளை

*அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.
(47573)(26.19.15)

**அதிபர்,**
**ஆசிரியர்கள்.**

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) சுன்னாகம்
### வெற்றுப்பைகள், சாக்குகள் விற்பனை

மேற்படி சங்கத்தில் வெற்றுப்பைகள், சாக்குகள் என்பன கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான கேள்விப்பத்திரத்தை ரூபா 100 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். வெற்றுப்பைகளையும், சாக்குகளையும் சங்கவேலை நாள்களில் பார்வையிடலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 15-03-2006 நண்பகல் 12மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்,
03-03-2006 (சி/48161)(26.15.19)

**-பொதுமுகாமையாளர்.**


## UNIVAC
### Software Engineering Park

NEW MICROSOFT CERTIFY AND DIPLOMA COURSES

| | |
|---|---|
| MCSD - Microsoft Certify Solution Developer | Duration: 6 Months |
| Software Development using Visual Basic & Oracle | Duration: 2 Months |
| Software Development using Visual Basic.Net & Ado.net | Duration: 2 Months |
| Web Development using XML, DHTML, CSS, Java script | Duration: 2 Months |

Software Projects Duration: Each project two months

1. School Managememrt Software
2. Hotel Management Software
3. Hospital Management Software
4. Library Software
5. Banking Software
6. Accounting Software

STARTS ON 08.03.2006 AND 11.03.2006

(First International Software Engineering Park in Jaffna)

213, Kasthuriyar Road, Jaffna T.P:077 6176476


## மரண அறிவித்தல்கள்

### *சிவகுருநாதன் இலட்சுமி*



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிவகுருநாதன் இலட்சுமி அவர்கள் 28.02.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - நல்லமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவகுருநாதனின் அன்பு மனைவியும் தயாறஞ்சினி (சுகாதார முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), சிவகுமாரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவரூபன் (ரூபன் ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்), பத்மறஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயும் பூபதியம்மா, கந்தசாமி, தவராசா, விஜயரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயலட்சுமி, சுந்தரலிங்கம், பூபதி, சிவபாக்கியம் (கனடா), செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*
T.P.No.: *0776139618.* (47544)(26.15.19)

தகவல்:
**சி.சிவகுருநாதன்**
**(கணவர்).**

### தம்பையா இராசமணி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் அரியாலை நொத்தாரிஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா இராசமணி (04.03.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை பரிசாரகர் வ.தம்பையாவின் (ராசு) அன்பு மனைவியும் மதனகாந்தி (ஆசிரியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), கிருதரன் (பிரான்ஸ்), சகிரதன் ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினம், தவஞானம் காலஞ்சென்றவர்களான கண்மணி, அழகம்மா, அரியம், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்களான முருகேசு, ஆறுமுகம் (புத்தூர்), ஓய்வுபெற்ற இ.போ.ச.நடத்துநர் தம்பிரத்தினம், காலஞ்சென்றவர்களான ஏரம்பு, வேலுப்பிள்ளை மாணிக்கம், சின்னம்மா மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்னலட்சுமி, பராசக்தி, சந்தனவடிவு, மல்லிகா, காலஞ்சென்றவர்களான சதாசிவம், கோபாலன், அப்பையா, சிவதர்மம், சிந்தாமணி மற்றும் கிருஷ்ணர் ஆகியோரின் ஒன்றைவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை.* (47576)(32-26-19-15)

தகவல்:
**ஏ.வீரசிங்கம்**
**(பேறாமகன்).**

## பண்ணிசை வகுப்பு

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தால் இலவச யோகாசனம், பண்ணிசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த இலவச வகுப்புகள் நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெற்றுவருகின்றன. வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புவோர் நாவலர் மணிமண்டப ப் பொறுப்பதிகாரியிடம் தொடர்புகொள்ளலாம் என ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தார். (3-14)




## G.C.E. O/L G.C.E. A/L படித்த மாணவர்களுக்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

3C, 3S or 3B, 3C தகமையுடன் வெளிநாட்டில் உயர்கல்வி.

UK, USA, Canada, Singapore, Cyprus, Malasia, Australia, New Zealand, Rusia போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு University, College அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுத்தருகிறது.

அதுமட்டுமல்லாது Rusian University களில் நீங்கள் M.B.B.S முடிப்பதற்கான முழுவருட அனுமதிக்கட்டணம் 2500$ (1 year)

மலேசியாவின் Tafe College மிகப்பெரிய Technical கல்லூரி ஆகும். Automotive Enginerring, Multimedia Computing, Computer & Network Technology, Software Engineering Technology, Business Accounting, Finance, Business Management போன்ற பெரிய அளவிலான படிப்பை குறைந்த செலவில் படிப்பதற்கு சலுகைகளைப் பெற்றுத்தருகிறது.

Courses Available
- Computing
- Business Management
- Engineering & Mathematical Sciences
- Art
- Business Studies
- Law
- Urban Planning
- Social Sciences
- Architecture & Construction
- Education & Training
- Humanities
- Sciences
- Commercial Management
- Tourism Management
- Research Degree MA/MPHIL/PHD
- MBA
- MSC & MA
- Bachelor of Business Administration
- BSc. (Hons.)
- BA
- E-Business
- Biotechnology
- Microbiology
- Software Engineering
- Information Technology
- Computer Administration
- Medichine
- Economics
- Hotel Management
- Accounting
- Marketing Management
- Travel & Tourism

2006 February, April ற்கான பதிவுகள் நடைபெறுகின்றன



**SKY LINE** TRAVELS & SERVICES
*PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSLTANTS*
*No. 7-1/2, W.A.Silva Mawatha, Wellawatte, Sri Lanka.* **Tel: 0773 175767**
*E-mail: Mohamedhaniffa_riyas@yahoo.co.uk*

## ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

### இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குறுகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free **இதோ இலவச அழகிய குடை**



எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கு
- அழகிய குடை ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாச [illegible] பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523
சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்

# தமிழர் தலைநகரில் அதிகாரத்தை நிலைநாட்ட வேற்றுமைகளை மறந்து இணைகிறது சிங்களம்!

## பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தேர்தல் காய்ச்சல் மும்முரம்

### திருமலை மடல்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஜெனீவாவில் இடம்பெற்றுள்ள அதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள விவகாரம் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த மாதம் 25ஆம் திகதி மூதூர் பிரதேசத்தின் அரியமான்கேணி பகுதியிலிருந்து இறால்குழி கிராமத்திற்குச் சென்ற தனிநேசன், இசை அரசன், வேல்மாறன், பக்வுதன், அரவிந்தன் ஆகியோரே இவ்வாறு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கணகாணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆனால், படைத்தரப்பினரோ தாங்கள் இவ்வாறான எவரையும் கைது செய்யவில்லை - குறிப்பாக ஜெனீவா பேச்சுவார்த்தையின் பின்னர் இவ்வாறு எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மறுப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த விடயமே படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. இது இவ்வாறிருக்க, தங்கள் உறுப்பினர்களை படையினரே கைது செய்துள்ளனர் என்று மீண்டும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ள விடுலைப் புலிகள் 'இது தொடர்பான கண்கண்ட சாட்சியங்கள் தங்களிடம் உள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக கண்காணிபபுக்குழுவினர் உரிய நடவடிக் கையினை மேறகொண்டு தங்கள் உறுப்பினரை விடுவித்துத் தரவேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

**தேர்தல் திருவிழா**

இதற்கிடையே திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் திருவிழா ஆரம்பமாகி உள்ளது பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்த மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை தங்கள் வசம் தக்க வைத்துக் கொள்ள தீவிர பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. கடந்த காலங்களைப் போலன்றி ஆரவாரம் காட்டாது மிகவும் பவ்வியமாகவே இங்கு தேர்தல் பரப்புரைகள் வீடு வீடாக இடம்பெற்று வருகின்றன.

இதேவேள்ள், இலங்கைத் தமிழரசுக் கட்சி வரலாற்றில் என்றுமில்லாத வகையில் மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை 10 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வகையில் தனது வேட்பு மனுவினை சமர்ப்பித்துள்ளது.

இவற்றில் வெருகல் பிரதேச சபையில் இவர்கள் போட்டியின்றி வெற்றிபெற்றுள்ளனர். இந்த மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி, சுதந்திர மக்கள் ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பனவும் தங்கள் வேட்பு மனுக்கள்ள சமர்ப்பித்துள்ளன. இவ்வாறு இந்த மாவட்டத்தில் உள்ள 118 உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றும் வகையில் 763 வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கோமரசன்கடவை, பதவி சிறிபுர போன்ற உள்ளூராட்சி மன்றங்கள் தவிர்த்து கிண்ணியா உள்ளிட்டதான உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்றது. இதில் குறிப்பிடத்தக அம்சம் என்னவென்றால் திருகோணமலை நகராட்சி மன்றத்தின் அதிகாரத்தினைக் கைப்பற்றும் வகையில் பெரும்பான்ச் சமூகக் கட்சிகள் தங்கள் வேற்றுமைகளை தற்காலிகமாகக் கைவிட்டு தேர்தல் களத்தில் இறங்கியுள்ளன.

திருகோணமலை நகராட்சி மன்றத்தினை எந்த வகையிலாவது கைப்பற்றவேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோளாகும்.

**மீனவர் பிரச்சினை**

இதற்கிடையே திருகோணமலை துறைமுகத்தை உள்ளடக்கிய கடற்பிரதேசப் பகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடிப்பதில் கடந்த இரண்டு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் தடைகளின் விளைவாகத் தாங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள் என்று மீன்பிடி அமைச்சர், ஜனாதிபதி மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகஜர்களை அனுப்பி வருகின்றனர் பரம்பரை பரம்பரையாகவே மீன்பிடித்தொழிலை மேற கொண்டுவரும் இத்தகைய குடும்பங்கள் வறுமையில் சிக்கி வாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் உடன மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இந்த மீனவர்கள் கோரி வருகின்றனர் பரிதாபத்திற்குரிய இந்த மீனவ குடும்பங்கள் தொடர்பாக அரசு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும் எனவும் இவர்கள் கோரி வருகின்றனர். இவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சங்கீத்

# இருப்பிட வசதியின்றி இன்னல் அடையும் அம்பாறை மக்களுக்கு உதவுவாரில்லை!

## வாக்கு வேட்டைக்கு வருகின்ற அரசியல்வாதிகள் பாராமுகம்!

### அம்பாறை மடல்

கடந்தவாரம் மட்டு. - அம்பாறை மாவட்டத்தில் எதிரொலித்த முக்கிய விடயமாக சுனாமி அகதிகளின் போராட்டத்தைக் குறிப்பிடலாம். சுனாமி தாக்கி 14 மாதங்கள் கடந்த போதிலும் இன்னும் நிரந்தர வீடு தரப்படவில்லை.

தொடர்ந்து முகாம்களில் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கிறோம். எனவே, நிரந்தர வீடு அமைத்துத்தரப்படவேண் டுமென ஒரு வாரம் மறியல் போராட்டம் செய்தனர்.

இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்மதி தொலைக்காட்சியூடாக பிரஸ்தாப மக்களுடன் பேசி நிரந்தர வீட்டுக்கான உறுதிமொழி அளிக்கப்பட்டதன் பயனாக போராட்டம் முடிவுக்கு வந்தது.

**வீடில்லை; மக்கள் கவலை**

இந்நிலை மட்டு. - அம்பாறை மாவட்ட அனைத்து மக்களுக்கும் பொருந்தும். இம்மக்கள் ஒருவித கவலையால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் நிரந்தர வீடின்மை என்பதே. 'நிரந்தர வீடு' என்பது இன்று பாரிய பிரச்சினையாகவுள்ளது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவனவற்றில் சுனாமியின் பின்பு தலைவிரித்தாடுகின்ற பிரச்சினை உறையுள் பிரச்சினையாகும்.

தரவுகளின்படி பார்த்தால் சுனாமியால் வடக்கு - கிழக்கில் 80 ஆயிரத்து 532 வீடுகள் சேதமாகியுள்ளன. அவற்றில் 62 ஆயிரத்து 949 வீடுகள் முழுமையாகவும், 17 ஆயிரத்து 583 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. அம்பாறையிலேயே அதிகூடிய 29 ஆயிரத்து 77 வீடுகள் சேதமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் கடற்பரப்பிலிருந்து 200 மீற்றருக்குள் அழிக்கப்பட்ட வீடுகள் 62 ஆயிரத்து 949 வீடுகளாகும். இவை மீள புனரமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களே இன்று பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

கடலோரப் பாதுகாப்பு வலயம் காலத்துக்கு காலம் மாற்றப்படுவதும் நிரந்தர வீடுகளை ஏற்படுத்துவதில் தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. சுனாமி வந்து 14 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், இவ் வலயத்துள் வருவோருக்கு வீடுகள் வழங்கப்படவில்லை.

கடலோரப் பாதுகாப்பு வலயத்தில் வருவோருக்கு வேறிடத்தில் 500 சதுர அடிப்பரப்பில் நிரந்தர வீடுகளை அரசாங்கம் இலவசமாக அமைத்துக்கொண்டுக்குமெனக் கூறப்பட்டது.

பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே வருவோரில் வீடு முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால் இரண்டரை லட்சம் ரூபா வீடமைப்பு சன்மானமும், பகுதியாகப் பாதிக்கப்பட்டிருந்தால் ஒரு லட்சம் ரூபா வீடமைப்பு சன்மானமும் வழங்கப்படுமென்று அரசாங்கம் கூறியிருந்தது.

இதன்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்கள் வங்கி ஊடாக தவணை அடிப்படையில் வீடமைப்பு சன்மானம் வழங்கப்பட்டுவருகின்றது.

இதில் சில பிரதேசங்களில் கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள் கண்மூடித்தனமாக நடந்ததுடன் முற்றாகப் பாதிக்கப்படாத பலருக்கும் இவ்வீடமைப்பு சன்மானம் கிடைக்க வழிசெய்துள்ளார்கள்.

**வெறும் காணிகளுக்கும் வீடமைப்பு நன்கொடை**

அம்பாறை மாவட்டதில் இன்று வீடமைப்புப் பிரச்சினை பூதாகரமாகத் தலைவிரித்தாடுவதற்கு ஒருவகையில் இவ்வகையான அநீதியான போக்குகளும் காரணமெனலாம்.

வீடு இல்லாத வெறும் காணி வைத்திருந்தவர்களுக்கும் வீடமைப்பு மானிய நன்கொடைக்கு சிபார்சு செய்யப்பட்டு ''கையூட்டு அல்லது - சொந்தம்'' கருதிப் பணம் பெறுகிறார்கள்.

அரசாங்கத்தின் சுற்றிநிருபப்படி ஒரு காணியில் வீடு இருந்து பாதிக்கப்பட்டிருப்பின் வீடமைப்பு நன்கொடை வழங்கபடலாமென்று கூறுகிறது.

ஆனால், வீடே இல்லாத வெறும் காணி உரிமையாளர்களுக்கும் வீடமைப்பு மானியம் வழங்கப்பட்டிருப்பதை என்னவென்று சொல்வது? இது அநீதியில்லையா?

சுனாமிக்கான சட்ட உதவி ஆணைக்குழு இது விடயத்தில் கவனம் செலுத்தி உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைப்பு மானியம் கிடைக்க வகைசெய்யவேண்டும்.

காணியே இல்லாதவர்களுக்கும் இவ்வீடமைப்பு மானியம் வழங்கப்பட்ட சம்பவங்களும் இக்கலியுக காலத்தில் இடம்பெற்றுள்ளதாயுள்ளது.

சுனாமியின் பின்பு அங்குள்ள காணியைப் பிரித்து உறுதி எழுதி வீடமைப்பு மானியம் பெற்றுவருகின்றார்கள். இதற்குப் பிரதேச செயலாளர்கள் சிலரும் உடந்தையாக இருந்து வருகின்றனர்.

இவற்றை விசாரணைக் குழுவினர் முனைப்பாக நின்று விசாரித்து நன்கொடையை மீளப்பெற வேண்டுமென்று பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக வீடமைப்பு மானியப் பணத்தை நிரந்தர வீடுகளை அமைப்பதற்குப் பயன்படுத்தியிருக்கலாமெனக் கூறப்படுகிறது.

**சுற்று நிருபங்களை பின்பற்றுவதில் சிக்கல்!**

வீடமைப்பிலும் சில சிக்கல்கள் உள்ளன. அரசசுற்று நிருபம் சொல்வதைச் சிலர் பின்பற்றுவதில்லை. பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே பாதிக்கப்பட்டவர்கள் அவ்வட்டாரத்துள் எங்காவது சொந்தக்காணி இருப்பின் வீடு அமைக்கலாம் அல்லது அந்த மாவட்டத்தின் எங்காவது ஒரு பகுதியில் காணியிருப்பின் வீடமைக்க வீடமைப்பு மானியம் கட்டம் கட்டமாக வழங்கப்படும்.

ஆனால், சில பிரிவுகளில் இப்படி விரும்பிய இடத்தில் அமைக்க அனுமதி வழங்கப்படவில்லை. பிரதேசசெயலாளர் விரும்பிய இடத்தில் அதுவும் ஓர் இடத்தில் அமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம்.

அம்பாறையில் பரவலாக ஆர்ப்பாட்டம், போராட்டம் நடைபெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். நிந்தவூர் பிரதேச செயலகம் தாக்கப்பட்டது. சாய்ந்த மருதிலும் ஒரு போராட்டம் நடைபெற்றது. திருக்கோவில் பிரதேசத்திலும் சிறு எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

**திரும்பியும் பாராத அமைச்சர்கள்**

இப்போது கல்முனை (முஸ்லிம்) பிரதேச செயலகம் முன் மக்கள் வீட்டுக்காக போராட்டம் நடத்துகிறார்கள். ஒருவாரகாலமாக இப்போராட்டம் தொடர்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் 3 அமைச்சர், பிரதியமைச்சர் உள்ளிட்ட 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் ஒருவராவது தம்மை வந்து பார்க்கவில்லையே என அந்த மக்கள் வேதனைப்படுகின்றார்கள்.

வாக்கு வேட்டைக்காக மட்டும் ஊர் ஊராய் அலைந்து திரிவார்கள். வாக்கைப் பெற்று நாடாளுமன்றம் சென்றதும் அளித்த வாக்குறுதிகளை மறந்து மக்களது பிரச்சினைகளை ஏறெடுத்துப் பார்க்காமல் உள்ளார்கள்.

அதற்குச் சாமரம் வீச ஏஜண்டுகள் சிலர், இவர்களால் என்ன பிரயோசனம் என்று மக்கள் அலுத்துக்கொள்கிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர்களை பட்டியலில் இடுவதற்கும், வேட்புமனுவைக் கையளிப்பதற்கும் தலைகாட்டிய இவர்களால் எமது பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது அறிந்து செல்ல முடியவில்லை.

**கடல் பாதுகாப்பு வலயம்**

கடலோரப் பாதுகாப்பு வலயம் கல்முனை, காரைதீவை பொறுத்தவரை 65 மீற்றர் என வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்குள் வரும் சுமார் 2 ஆயிரத்து 200 வீட்டுச் சொந்தக் காரருக்கு இன்னும் ஒரு வீடுதானும் கிடைக்கவில்லையென்பது கசப்பான உண்மையாகும்.

இதற்கு அரச நிர்வாகத் தரப்பு கூறும் தலையாய காரணம் அரச காணி இல்லையென்பதாகும். அதிலும் நியாயங்களுள்ளன. இருப்பினும் உரிய தனியார் காணிகளை இனங்கண்டு சுவீகரிப்பதனூடாக காணியைப் பெற்று வீடமைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளது.

பல பிரதேச செயலகப் பகுதிகளிலும் காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. ஆனால், இன்னமும் கொள்வனவு செய்யப்படவில்லை அல்லது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனலாம். சில காணிகள் சதுப்பு நிலம். அவற்றை நிரப்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

மொத்தத்தில் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள மக்கள் தொடர்ந்து அகதி முகாம்களிலும் உற்றார், உறவினர் வீடுகளிலும் காலத்தைக் கடத்திவருகின்றனர்.

நிரந்தர வீடில்லாத அவர்களால் நிம்மதியாக சுதந்திரமாக வாழமுடியவில்லை. தினமும் சண்டைசச்சரவு, வீண் மனஸ்தாபம், வாழ்வில் ஒருவித விரக்தி, நிலையாகக் குடிகொண்டுள்ளது.

இந்நிலையில் அவர்களால் சமாதானத்திற்கோ, இன உறவுக்கோ உரிய பங்களிப்பைச் செய்யமுடியவில்லை. வீடில்லாத எமக்கு சமாதானம் ஒரு கேடா? எனக் கேட்கின்றனர்.

**நிவாரணமும் கிடையாது!**

14 மாதங்கள் கழிந்த நிலையில் பிரதான மக்கள் வீடின்றி அலையும் அதேவேளை அரச நிவாரணமுன்றி அலைகின்றனர்.

அரசினால் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த உணவு, பணம் போன்ற சகல நிவாரணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

ராஜபுத்திரன்

## தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது ஒருநாள் ஆட்டம்:

# மக்காயா நிற்னியின் வேகத்தில் ஆஸி.93 ஓட்டங்களுக்குள் சுருண்டது

கேப்டவுண், மார்ச் 5

வேகப்பந்து வீச்சாளர் மக்காயா நிற்னியின் வேகத்தில் தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 93 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 196 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் கேப்டவுணில் இடம்பெற்றது.

இந்த ஒருநாள் ஆட்டத்தில் நிற்னி தனது சிறந்த பந்துவீச்சுப் பெறுதியான 6-22 என்பதைப் பெற்றார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஆஸ்திரேலிய அணி பெற்ற மிகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவேயாகும். ஆஸி. அணி ஏழு ஓட்டங்களுக்கு முதல் நான்கு விக்கெட்டுகளையும் இழந்தது. இந்த நான்கு விக்கெட்டுகளையும் நிற்னியே வீழ்த்தினார். முன்னதாக முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி ஹேசல் கிப்ஸ் பெற்ற 66 ஓட்டங்களுடனும் ஜஸ்ரின் கெம்ப் பெற்ற 51 ஓட்டங்களுடனும் 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆடிய ஆஸி அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளையும் இழந்தது. கில்கிறிஸ்ட் - 1, பில் ஜக்கிஸ் - 0, மார்ட்டின் - 4 எனக் குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். மார்டினின் விக்கெட்டை வீழ்த்தியதுடன், நிற்னி ஒருநாள் ஆட்டங்களில் 200ஆவது விக்கெட்டைப் பெற்றார்.

தென்னாபிரிக்க அணி சார்பாக சிறந்த் பந்துவீச்சுப் பெறுதியைப் பெற்ற வீரர் என்ற சாதனையையும் நிற்னி தன்வசமாக்கினார். இதற்கு முன்னர் 1996-97 காலப்பகுதியில் கென்ய அணிக்கு எதிராக அலன் டொனால்ட் 6-23 என்ற சிறந்த பெறுதியை அடைந்திருந்தார்.

அதேவேளை, தென்னாபிரிக்க அணிக்கு எதிராக் இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய அணி பெற்ற குறைந்த ஓட்டங்கள் 125. இது 1997இல் மெல்போர்னில் நடைபெற்ற ஆட்டமொன்றில் பெறப்பட்டிருந்தது.

ஆஸ்திரேலிய அணித் தலைவராக தற்காலிகமாகக் கடமையாற்றும் அடம்கில்கிறிஸ்ட் இந்த ஆட்டத்தில் பெற்ற ஓர் ஓட்டத்துடன் ஒருநாள் ஆட்டங்களில் 8000 ஓட்டங்களைப் பெற்றார். ஆஸி. அணிசார்பாக ஷேன் வட்ஸன் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். இவரே பந்துவீச்சிலும் சிறப்பாக செயற்பட்டு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தென்னாபிரிக்க அணியில் சிறப்பாகப் பந்து வீசிய மக்காயா நிற்னிக்கு நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்த அன்ட்ரு நெல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதேவேளை துடுப்பாட்டத்தில் ஜஸ்ரின் கெம்ப் 4 சிக்ஸர்களை விளாசியிருந்தார் என்பதும் குறிப்பிடக்கூடியது.



இந்த ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராக மக்காயா நிற்னி தெரிவுசெய்யப்பட்டார். இவ்விரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் இன்று போர்ட் எலிசாபத்தில் நடைபெறவுள்ளது.

## டோனியின் முடியலங்காரத்துக்கு வந்த மவுசு



இந்திய அணியில் இணைந்து சிலநாள்களிலேயே பிரபலமாகிவிட்ட விக்கெட் காப்பாளர் மகேந்திரா டோனியின் முடியலங்காரத்தை பாராட்டாதவர்கள் எவருமில்லையென்றே கூறலாம்.

இதற்குமேல் இப்பொழுது பல இளைஞர்கள் டோனியைப் போன்று முடியலங்காரம் செய்துவருகின்றார்கள். டோனி போன்று கழுத்து வரை முடி வைத்திருப்பவர்களிற்கு அவரை மாதிரியே முடியலங்காரம் செய்ய இந்திய ரூபாவில் 300 ரூபா வசூலிக்கப்படுகின்றது. டோனியின் சொந்த ஊரான ராஞ்சியிலேயே இப்படி வசூல் நடக்கின்றது.


தங்கநிற சாயம் பூசி தகதகவென ஜொலிக்கும் டோனியின் முடியலங்காரத்தை சினிமா நடிகர்கள் முதல் ரசிகர்கள் வரை அனைவருமே ஓர் பஷனாக கருதுகிறார்கள். முடியலங்கார கடைக்கு வரும் இளைஞர்கள் எல்லோரும் டோனி மாதிரி முடி வெட்டிவிடுவம் என்று கடைக்காரர்களிடம் கேட்கிறார்களாம்.

டோனி வழக்கமாக முடியலங்காரம் செய்து கொள்ளும் மேன்ஸி எனும் கடைக்காரரைக் கேட்டபோது டோனி எங்களிற்கு அறிமுகமில்லாத காலத்திலிருந்தே எங்கள் கடைக்கு வந்திருக்கிறார். இப்போது இந்திய அணியில் சிறப்பாக ஆடியதும் அவரது முடியலங்காரம் ரொப்வே பிரசித்திபெற்றுவிட்டது. கடைக்கு வரும் இளைஞர்கள் டோனி மாதிரி ஆகவேண்டும் என கூறுகிறார்கள்'' என்று கூறினார்.

பாகிஸ்தான் தொடரின்போது அதிபர் பர்வேஸ் முஷாரப் டோனியின் முடியலங்கார அழகை வெகுவாக வர்ணித்திருந்தார். டோனியின் நண்பர்களில் ஒருவரான கவுதம் உப தயாய் கூறும் போது ''டோனியின் முடியலங்காரத்தைப் பார்த்து நண்பர்கள் எல்லோரும் கிண்டலடித்துக் கொண்டிருப்பார்கள். அப்போது அவர்களைப் பார்த்து டோனி - ''ஒருநாள் என்னுடைய முடியலங்காரத்தை இந்த உலகமே புகழும்'' - என்று கூறுவார். அது உண்மையாகிவிட்டது'' என்று கூறினார்.

முடியலங்காரத்திலும் துடுப்பாட்டத்திலும் பிரகாசித்து வரும் டோனி மேன்மேலும் உயர வேண்டும் என்பதே ரசிகர்களின் விருப்பமாகும்.

## டேவிற் பெக்காமிற்கு கணக்குத் தெரியாது



நம்மில் பலரிற்குக் கணக்கு என்றாலே வெறுப்பு. யாராவது கணக்குப் பாடத்தில் கேள்விகள் கேட்டால் எனக்கு வேறு வேலைகள் இருக்கிறது என்று கூறி நழுவிவிடுவோம். இது மாதிரியான ஒரு சிக்கலிற்கு இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவர் டேவிட் பெக்காம் மாட்டிக் கொண்டுள்ளார்.

பெக்காமின் மகனான ப்ருக்ஸின் கணக்குப் பாடம் சொல்லித்தருமாறு பெக்காமை கேட்டிருக்கிறான். அப்புத்தகத்தை பார்த்த பெக்காமிற்கு தலையே சுற்றிவிட்டது. வேறு வழியின்றி வா நீயும், நானும் உட்கார்ந்து படிக்கலாம் என சொல்லியிருக்கிறார். இதற்கு செல்ல மகனும் போங்கப்பா நீங்க




சொல்லித் தருவீங்க என்று பார்த்தால் உட்கார்ந்து படிக்கிறீர்களே. கால்பந்து கோல் எல்லாம் கலக்கலா போடுறீங்க கணக்குக் கேள்வி கேட்டால் தெரியவில்லை என்று சொல்கிறீர்களே என கூறியிருக்கிறான்.

இதிலிருந்து எப்படியாவது தப்பித்தால் போதும் என நினைத்த பெக்காம் தனது முன்னாள் மனைவி விக்கோலியாவிடம் சந்தேகங்களைத் தீர்க்குமாறு சொல்லி 'எஸ்கேப்' ஆகிவிட்டார். விடயம் வெளியில் தெரிய அவரது மானம் கப்பலேறிவிட்டது. நான் கணக்கில் கொஞ்சம் 'வீக்' என பெக்காம் பகிரங்கமான ஒப்புக்கொண்டுள்ளார்.

இதெல்லாமிருக்க அவர் திணறிய கணக்குகள் என்ன தெரியுமா 1. பீற்றர் 11.45 மணிக்கு கடைக்குச் சென்று பின்னர் அரை மணிநேரம் கழித்து வீடு திரும்பினார் என்றால் அப்பொழுது நேரமென்ன? 2. பன்னிரண்டை மூன்றால் வகுத்தால் என்ன? இவை தான் அவர் திணறிய கணக்குகள்.

## உடுவில் மில் வீதி பலத்த சேதம்

ஆலடி, உடுவில் மில் வீதி பல வருடங்களாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களுடனேயே பயணிக்கின்றனர்.

இந்த வீதியில் கற்கள் வெளிக்கிளம்பிக் கிடக்கின்றன. இதனால் பயணம் செய்வோர் பெரும் சிரமப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (3-202)

## இருப்பிட வசதியின்றி...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதவருமானமின்றி இடைத்தங்கல் முகாம்களில் வாழும் இவர்களுக்கு நிவாரணமும் நிறுத்தப்பட்டுள்ளது. மொத்தத்தில் விரக்தி நிலையே அவர்களை ஆட்கொண்டுள்ளது.

இதனால், அவர்கள் ஆர்ப்பாட்டத்திற்கும் ஹர்த்தால், கடையடைப்புப் போராட்டத்திற்கும் தம்மை ஈடுபடுத்தத் தயங்குவதில்லை. வேறு மார்க்கமின்றி அவர்கள் இம்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

அரச நிருவாகிகள், அரசியலாளர்கள் யாரும் கவனிக்காத நிலையில் அவர்கள் நாடவேண்டிய இடம் தெரியாமல் அலைகிறார்கள். இது சமூகத்தில் பாரிய பிரச்சினையைத் தோற்றுவிக்கப்போகின்றது.

அரசு உடனடியாக இது விடயத்தில் தலையிட்டு நிரந்தரவீடமைப்பிற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

முடியாவிடின் கடலோரப் பாதுகாப்பு வலய எல்லையை நீக்கிவிட்டு அம் மக்களுக்கு தலா 10 லட்சம் ரூபாவை வழங்கினால் அவர்கள் வீட்டுப்பிரச்சினையைப் பார்த்துக் கொள்வார்கள்.

அவர்கள் அவர்களுக்கேற்றவாறு விரும்பிய இடத்தில் விரும்பிய ரகத்தில் வீட்டைக் கட்டி வாழ்வார்கள். பாரிய பிரச்சினையும் தீர்ந்த நிலைப்பாடு தோன்றும். பிரதேச செயலர் முதல் அரசியல்வாதிகளுக்கும் தலையிடி அகன்றுவிடும்.

அதேபோன்று பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 5லட்சம் ரூபாவை வழங்கிவிட்டால் பிரச்சினை தீரும். அதேவேளை பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்பு நன்கொடை மீள வசூலிக்கப்படவேண்டும்.

இப்பணம் நிரந்தர வீடின்றி ஆர்ப்பாட்டத்திலீடுபடும் மக்களுக்கு வழங்கப் போதுமாக இருக்குமெனக் கூறப்படுகின்றது.


### வாடகைக்கும் விற்பனைக்கும்

*நெல்லியடியில் கடை ஒன்று கண்ணாடி பிற்றிங்குடன் வாடகைக்கு உண்டு. விரும்பினால் A.C. பிற்றிங்குடன் சேர்த்தும் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு கணனிகள், ரெலிபோன் பூத், போட்டோக் கொப்பி மெசின் என்பனவும் விற்பனைக்கு உண்டு.*

*தொடர்புகளுக்கு: 0777251281*
*0779582288*

(சி-47594)
(32-17-19)

### தொழில்வாய்ப்பு நேர்முகப்பரீட்சை

**இளமையும் துடிப்பும் மிக்க**
**இளைஞர்களே! யுவதிகளே!**
**உங்கள் திறன்களின் வெளிப்பாட்டிற்கு ஒரு திறவுகோல்!!**

**ஆயுள் மற்றும் பொதுக்காப்புறுதித் துறையில் ISO தராதரம் பெற்ற இலங்கையின் ஒரே காப்புறுதி நிறுவனமான பிரபல காப்புறுதிக் கம்பனி யாழ். மண்ணில் தனது வாடிக்கையாளர் சேவையினை மேலும் விஸ்தரிக்கும் நோக்கோடு ''பிரதேச பிரதிநிதிகளை'' இணைத்துக் கொள்ள இருக்கின்றது.**

அனுகூலங்கள்:

- வரையறையற்ற வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்கள் 5,000/- முதல் 50,000/- வரை
- தொழில் முன்னேற்ற வாய்ப்புகள்
- இலவச காப்புறுதி
- வாகன கடன் வசதி
- சுற்றுலா வசதிகள்
- மாதாந்த /வருடாந்தப் போட்டி வாய்ப்புகள்

நேர்முகப் பரீட்சை:
**12.03.2006 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9 மணி - பிற்பகல் 2 மணி**
இடம்:
**இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்**
*(வணிகர் கழக மேல்மாடி).*

(47701) (24-32-17-19)

### கட்டடம் வாடகைக்கு

*சகல வசதிகளுடனும் கூடிய (வாகனத் தரிப்பிடம்) மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு. பகுதியாகவும் வழங்கப்படும்.*
*தொடர்புகளிற்கு:-*

**திருமதி க.பாலயோகன்,**
**140, நாவலர் வீதி.**
**021 222 7085, 0777 162428**

(47599)

### POST OF ACCOUNTANT & ASST. ACCOUNTANT

**Should be a Graduate /qualified in HNDA / ICA /CIMA /AAT with 3-5 years work experience in the Field of accountancy in a reputed firm. Computer literacy, ability to work with accounting packages and Microsoft office will be an added advantage.**

**Please apply within 10 days of this Advertisement enclosing Your CV along with Particulars of 2 Non related Referees.**

**The Advertiser,**
**12 D,Rohini Road, Colombo - 06**

### கண்ணீர் அஞ்சலி



எனது நண்பனும்
பழைய மார்க்கெட் -
நெல்லியடி
பிரபல வர்த்தகருமாகிய
**R.V.A.மாரியப்பன்**
அவர்கள்
காலமானதையிட்டு
ஆழ்ந்த
துயரடைகின்றேன்.
அவரின் பிரிவால்
துயருறும்
குடும்பத்தினருக்கு
எனது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*உரிமையாளர்-*
**இந்திரா கபே.**

*நெல்லியடி.* (47598)(32-17-19)

# மேம்பட்ட மனித மாண்புகளைக் கொண்டிலங்கும் உலகின் சகல பகுதி மக்களினதும் பாரம்பரியங்கள்

**(பகுதி II)**

**இன்றைய உலகில் மனித மாண்புகள் பேணப்படுவது அருகிவிட்டது; பல சந்தர்ப்பங்களில் மதிக்கப்படுவதுமில்லை. அதனாலேயே உலக மக்கள் மத்தியில், சகல மட்டங்களிலும் போட்டியும் பூசலும் மலிந்துள்ளன. அவை இறுதியில் அழிவிலும் முடிகின்றன. இந்த நிலையில் மனிதனின் வாழ்க்கை முறைகளை மாற்றுவதன்மூலமே குறைக்கலாம். அடிப்படையான மனித மாண்புகளை அடிநாதமாகக் கொண்டு வாழ்க்கை முறைகளை மாற்றவேண்டிய தேவை உலகத்தில் அவசியமாகிவிட்டது. அதற்குச் சமயங்கள் வழிகாட்டவேண்டும் -**

**மனித மாண்புகளுடன் கூடிய கல்விமுறை வேண்டும். அதாவது கல்விமுறைகள் மாற்றப்படுவது அவசியம். உலக மக்கள் ஒரே குடும்பம் என்ற கோட்பாட்டுடன் செயலாற்றும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் சேவை இந்த வழியில் நல்ல பங்களிப்பை நல்கி வருகிறது. அவ்வழி செல்வதனால் உலக அமைதியை எட்ட முயற்சிக்க வேண்டும் -**


இவ்வாறு சொன்னவர் மைக்கல் ஸ்ரீபன் என்ற பிரிட்டிஷ்காரர். அவர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அங்கம்வகித்த காலத்தில் சர்வதேச சட்டவியல் துறைக்கான நாடாளுமன்றச் செயலராக இருந்தவர். ஆக முதலில் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணிபுரிந்தவர்.

**உலக மக்கள் ஒரே குடும்பமாக**

அவர்களுடன் இந்தியாவின் நான்கு திசைகளிலும் உள்ள மாநிலங்கள், தலைநகரங்களில் இருந்து வந்தவர்கள் மற்றும் வாழும் கலைப்பயிற்சி நிலையங்களில் இருந்து வந்த பல்லாயிரம் தொண்டர்களால் அந்தத் தியான மண்டபம் நாளாந்தம் நிரம்பி வழிந்தது. உலகின் பல நாடுகளையும் கலாசாரங்களையும் சமயங்களையும் சேர்ந்தோர் திரண்டு மனித மாண்புகள் குறித்த சர்வதேச மாநாட்டு உரைகளை உன்னிப்பாகச் செவிமடுத்தனர். அமைதியாக இருந்து, நிசப்தம் நிலவும் அருமையான சூழலில் கருத்துக்களை உள்வாங்கினர். அமர்வுகள் பூர்த்தியாகும்வேளை நெறிப்படுத்தப்பட்ட தியானத்திலும் அமர்ந்தனர்.

ஒவ்வொரு மனிதனும் அவன் அடையாளப்படுத்தப்படுவதைவிட அதிக பெறுமதி உள்ளவன். நாங்கள் மனிதப் பிறவி பூண்டவர்கள் என்ற அடிப்படையான அடையாளத்தை மறந்துவிடுகிறோம். பால், மதம், இனம், மொழி, தேசம் என்ற மட்டுப்படுத்தப்பட்ட இயல்புகளால் எங்களை அடையாளப்படுத்தப் பழகிவிட்டோம்.

உலக மக்களை ஒரே குடும்பமாக்க வேண்டும் என்ற கருத்தியலை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஞானிகள் முன்வைத்தனர். ''வசுதைவ குடும்பகம்'' என்ற



**ஜனாதிபதி அப்துல் கலாமை வரவேற்கும் ஞானி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி**

**மனதில் அமைதி**

குருஜி அங்கு, அப்போது பிரசன்னமாக

குக் காலாக இருந்தவர் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய முன்னாள் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா.

வாழும் கலைப் பயிற்சி நிலையம், மனித மாண்புகளுக்கான சர்வதேச நிலையம் ஆகியவற்றவற்றைத் தோற்றுவித்து உலகம் முழுவதும் உள்ள மக்களில் லட்சக்கணக் கானோரின் ஆன்மீகக் குருவாக ஐம்பது வயதான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி விளங்குகிறார். வருடாந்தம் பல நாடுகளுக்கும் சென்று எல்லாச் சமயங்களும் ஆன்மீகத் தத்துவங்களும் பொதுவான இலக்குகளையும் மாண்புகளையுமே பகிர்ந்து [illegible]றன; நோக்காகக் கொண்டுள்ளன [illegible] கருத்தைப் பரப்பி வருகிறார்.

அத்தோடு, இயற்கை அனர்த்தங்கள் மற்

**வல்லிக்கர்ணன்**

றும் போர்களினால் பாதிக்கப்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மனநெருக்கீடுகளுக்கு தியானம், யோகம், பஜனை ஆகியவற்றின் மூலம் மன அமைதியை அளிக்கிறார்.

இந்த வகையிலும் அமைதி முயற்சிகளை மேற்கொண்டு குருஜி ஆப்கானிஸ்தான், கொசோவோ, ஈராக், பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்குச் சென்று தமது ஆன்மீகப் பணிகளைச் செய்திருக்கிறார். அத்தோடு வாழும் கலைப்பயிற்சி நிலையத்தின் தொண்டர்களுடன் பல நாடுகளுக்குச் சென்று இயற்கை அழிவுகளால்

# இதனை அடியொற்றிய தொனிப் பொருள்கள் பெங்களூர் மாநாட்டில் அறிஞர்களால் ஆய்வு

மனித மாண்புகள் குறித்த இரண்டாம் நாள் காலை அமர்வின்போது பேசியவர்களில் அவரும் ஒருவர். உலக அமைதி உருவாகுமா - அதாவது அது உண்மைநிலையை எய்துமா! - என்ற தலைப்பில் நடைபெற்றது அந்த அமர்வு.

கல்வி என்பது யாது? ஞானம் என்பது எது? உலகம் முழுவதிலும் உள்ள மக்களுடன் ஒருமைப்பாட்டை வளர்க்கக்கூடிய உணர்வுடன் இன்றைய இளம் சந்ததியினருக்கான கல்வித்திட்டம் மாற்றம் செய்யப்படவேண்டுமா? கல்விமுறைகளை எவ்வாறு மாற்றியமைக்கவேண்டும்? அவ்வாறு செய்யாவிடின் உண்டாகப்போகும் விளைவுதான் என்ன?

இவை எல்லாவற்றையும் தொட்டுப் பேசினார் முன்னாள் பிரிட்டிஷ் எம்.பி..

இவரைப்போன்ற அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், அறிஞர்கள் என்று உலகத்தில் பலபல நாடுகளில் இருந்தும் வந்தவர்கள் கலந்துகொண்ட அமர்வுகள் வெவ்வேறு தலைப்புகள், வெவ்வேறு விடயங்கள் தொடர்பாக மாநாட்டின் மூன்று நாள்



**வானுயர நிமிர்ந்து நிற்கும் வாழும் கலைப்பயிற்சி நிலையத்தின் விசாலாட்சி தியான மண்டபம்**

காலை நிகழ்வுகளிலும் பேசப்பட்டன; ஆராயப்பட்டன.

ஜேர்மனி, மொங்கோலியா, ரஷ்யா, தென்அமெரிக்கா, கென்யா, மொறிசியஸ், அமெரிக்கா, கமரொன், கானா, நெதர்லாந்து, இந்தோனேசியா, பெல்ஜியம், இலங்கை, சுவிற்ஸர்லாந்து, சுவீடன், ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்த அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் என்று பலதரப்பினரும் இந்த அமர்வுகளில் பங்குபற்றி அரிய கருத்துக்களை வெளியிட்டனர்.

மாநாட்டுக்கு உலகநாடுகள் பலவற்றிலும் இருந்துவந்த பிரதிநிதிகள், வாழும் கலைப்பயிற்சியில் ஈடுபாடு கொண்ட மக்கள் என்று மூன்று நாள்களும் பெங்களூரில் உள்ள விசாலாட்சி தியான மண்டபத்தில் திரண்டனர்.

சிறப்புப் பெயர் கொண்ட அந்தக் கருத்தியல் இன்றைய காலத்திற்கு அவசியமானது: உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்களின் பாரம்பரியங்களும் அன்பு, இரக்கம், நம்பிக்கை, மன்னித்தல், நட்பு, சுயநலமற்ற சேவை ஆகிய மனித மாண்புகளையும் தம்மகத்தே கொண்டுள்ளன. இத்தகைய நல்ல பண்புகளை புதுக்கிப் பயன்படுத்துவதே இன்றைய அவசர அவசிய தேவை. காலத்திற்கு அப்பாற்பட்ட இந்த மாண்புகளே, சமூக ஒழுங்கு - ஒருமைப்பாடு, அமைதி, நீதி, முன்னேற்றம் ஆகியவற்றின் அடித்தளங்கள். வெவ்வேறு கலாசாரங்கள், சமயங்கள், பண்பாடுகள் அவற்றை நாம் மதிக்கவும், கொண்டாடவும் எமக்கு நல்வாய்ப்பைத் தருகின்றன என்று கொண்டால் பேதங்கள் நீங்கிவிடும்.

இதனை அடிப்படையாகக் கொண்டெழுந்த தொனிப்பொருள்கள் குறித்தே மூன்று நாள் காலை அமர்வுகளிலும் வெவ்வேறு நாடுகளிலும் இருந்து வந்த அறிஞர்கள் உரை நிகழ்த்தினர்.

உலக அறிஞர்கள் நாளாந்தம் உரை

இருக்கவில்லையே என்று நாம் கேட்க -

அவர் சொன்னார்: மண்டபத்தில் நடைபெறும் தியானப் பயிற்சிகள் மற்றும் வாழும் கலைப் பயிற்சிகள், பிரார்த்தனைகளின்போது குருஜி எங்களில் ஒருவராக அமர்ந்திருப்பார். அப்போது சலனமற்ற ஒரு மனநிலை அல்லது மன ஒடுக்கம் வந்துவிடும். அவர் நேரில் சமுகமளிக்காத வேளைகளிலும் அதே வகையான ஒருவகை அமைதியை நாம் உணர்வதுண்டு - என்றார்.

பல ஏக்கர் விஸ்தீரணமான மலைப்பாங்குடைய உயர்ந்த பிரதேசத்தில் அந்தத் தியான மண்டபம் அமைந்திருக்கிறது. பழனி மலையிலே குமரன் கோயில் அமைந்திருப்பது போன்று. நிழல் தரு மரங்கள், பூங்காவனங்களுக்குக் குறைவில்லை.

தியான மண்டபத்தின் பின்பகுதியில் உயர்ந்து நிற்கும் தொடர் மாடிக் கட்டடங்கள் நீண்டு நிற்கின்றன. வாழும் கலைப் பயிற்சியில் அக்கறையுடன் கலந்துகொள்ளும் வெளிநாட்டவர்கள், பிரமுகர்களால் அந்த தொடர் மாடி விடுதிகள் எந்நாளும்

# 2020 இல் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக மாறிவிட வேண்டும் என்கிறார் அப்துல்கலாம்

நிகழ்த்திய வாழும் கலைப்பயிற்சி சர்வதேச நியத்துக்கு - தியான மண்டபத்திற்குச் செல்வது ஓர் ஆலயத்திற்குள் செல்வது போன்ற உணர்வையே தந்தது. வட்ட வடிவில் அமைந்த அந்த விசாலமான, இரட்டை மாடிக் கட்டடத்தில், தியான மண்டபத்தில் அமர்ந்ததுமே மனதில் புதிய உணர்வு நிலை உண்டானது. எங்களை அறியாமல் ஒரு மௌன நிலைக்கு - அமைதி நிலைக்கு ஆட்பட்டதைத் தெரிந்துகொண்டோம்.

அமர்வுகள் முடிவடைந்து வெளியே வந்த போது, அத்தகைய நிலையை எய்துவதற்கான காரணம் எதுவோ என்று எங்களை நாங்களே கேட்டுக்கொண்டோம். ஆவல் மேலெழ அந்த மண்டபத்தில் அடிக்கடி கூடி அதனைத் தரிசித்த எமது வழிகாட்டிகளிடம் கேட்டோம்.

அவர்களில் ஒருவர் அசோக்.கல்கத்தாவைச்சேர்நத இளம் மருத்துவர். தமது தொழிலை ஒரு வாரத்துக்கு ஒதுக்கிவைத்துவிட்டு இந்த மாநாட்டில் தொண்டராகப் பணிபுரிய வந்தவர். தியான மண்டபத்தின் மகிமையும் மாட்சியும் வேறு ஒன்றும் அல்ல. அருளாளர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜிஜியின் தெய்வீகப் பேரொளியில் நீங்கள் மூழ்கியதே உங்களது புது அனுபவத்துக்குக் காரணம்- என்றார் அவர்.

நிறைந்திருக்கும் என்பது எமக்குத் தெரிவிக்கப்பட்ட தகவல்களில் ஒன்று.

நேருக்குநேர் தரிசிக்காமலே அருட்பேரொளி பரப்பும் அந்த ஆன்மீக ஞானியை ஸ்ரீ ரவிசங்கர் குருஜிஜியை கணபதி ஹோமத்தின் போது குறுகிய தூரத்தில் இருந்து தரிசிக்க வாய்ப்புக் கிடைத்தது - ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில்.

முகத்திலிருந்து தெய்வீக ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அந்த முகத்தில் இடையறாது தவழும் புன்சிரிப்பு அவரைப் போன்று எங்களையும் செய்யத் தூண்டும் சக்தி கொண்டது. ஆனால், எப்போதும் ஒரு சாதாரண மனிதனாகவே தோற்றமளிக்கிறார். பஜனை செய்யும் போது இசை வல்லாளராக மாறுகிறார். கண்களிலிருந்து அசாதாரண சக்தி வாய்ந்த ஒளி. அவ்வளவு தான். வேறு எதனையும் குறிப்பிட்டோ சிறப்பித்தோ கூற இயலவில்லை.

எனினும், அவரிடம் இருந்து வீசும் ஆன்மீக ஞான ஒளி வெள்ளம் அவருக்கு அருகில் சென்று ஆசி பெறவேண்டும் என்று மனதைத் தூண்டியவாறே இருந்தது. தியான மண்டபத்தில் நடைபெற்ற காலை நிகழ்வுகளின் பின்னர் அவருக்கு அருகிருந்து உரையாடவும் ஆசிபெறவும் முடிந்தமை மனதிற்கு மகிழ்வைத் தந்தது. இதற்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் செய்திருக்கிறார்.

கல்வி நலன், சிறுவர் நலன், மகளிர் நலன் ஆகியவற்றுக்கும் வெவ்வேறு நிறுவனங்களை உண்டாக்கி பெரும் சேவைசெய்யப்படுகிறது.

ஆயுள்வேத வைத்திய முறையைப் பேணி வளர்ப்பதற்கு இலாப நோக்கம் இல்லாத நிறுவனம், கிராம விவசாய அபிவிருத்தி நிறுவனம், நடமாடும் விவசாய ஆராய்ச்சி நிறுவனம் என்று பல்வேறு மக்கள் நலன் மற்றும் சேவைகளுக்கான ஸ்தாபனங்களையும் குருஜி நிறுவியுள்ளார். வாழும் கலைப் பயிற்சிகள் தொடர்பான கருத்தரங்குகளும் வருடாந்தம் உலகலாவிய ரீதியில் நடத்தப்படுகின்றன.

**ஐ.நாவுடன் இணைந்து பணி**

வாழும் கலைப் பயிற்சிச் சங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமூக கவுன்ஸிலுடன் இணைக்கப்பட்டு அத்துறைகளில் பணி செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

அருளாளர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தியானம், யோகம், பிரார்த்தனை ஆகியவற்றை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி அவர்களை மனஞ்சஞ்சலம் நீக்கி உடல் நலத்துடன் வாழ்வதற்கு அரும்பணி ஆற்றிவருவதாகப்

(19ஆம் பக்கம் பார்க்க)




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் நேற்று இடம்பெற்ற பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். நகர வீதிகள் ஊடாக பேரணி செல்வதையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்வில் பெண்கள் திரண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு விழிவெண்படல சத்திரசிகிச்சை

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஏற்பாடு

தென்மராட்சி, மார்ச் 5

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் விழி வெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்ட தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு தமது செலவில் கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் க.குகதாஸன் மூலம் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்காக பிரதேசத்தில் இலவச கண் பரிசோதனை நடத்தி கற்றாக் பாதிப்பு ஏற்பட்டவர்களை இனங்காணும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வாரம் கைதடியில் நடத்திய கண் பரிசோதனையில் எட்டுப் பேருக்கு விழிவெண்படலதில் பூப்படர்வு ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் 12ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் இலவச மருத்துவ பரிசோதனை முகாங்களை நடத்தவுள்ளனர்.

கண், சலரோகம், இரத்த அழுத்தம், வாய்ப்புற்று, தொழுநோய், பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகளை நடத்தவுள்ளதாகக் கழகத்தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (த-117)

## காணி விற்பனைக்கு

நெல்லியடியில் [யாழ்.பருத்தித்துறை வீதி]
V.K.S.பற்றிக் கடைக்குமுன்பாகவும்
சுப்பையா அன்ட் சன்ஸ் மாடி வீட்டுக்கும் அருகிலுள்ள
4 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **திரு.ம.மன்மதநாயகம் [மன்னன்]**
(சி/48175)(26.
நெல்லியடி, கரவெட்டி,
தொலைபேசி இல.021 2263243

## நவநாள் ஆராதனைகள்

குருநகர், மார்ச்5

அல்வாய், சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலய வருடாந்த திருவிழாவிற்கான நவநாள் ஆராதனைகள் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் பிற்பகலில் நடைபெறும். எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நற்கருணை நாதர் வழிபாடும் தொடர்ந்து மறுநாள் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை புனிதரின் திருநாள் திருப்பலி மற்றும் திருச்சொரூப பவனி, ஆசீர் ஆகியவையும் நடைபெறும். (த-51)

## VACANCY

We require few candidates with master minded knowledge in the following relevant skilled subjects for our software development firm as immediate requirement fill-ups. Who have with those can apply or

**Walk-in Interview on 08th March 2006 (Wednesday) from 10 A.M.**

**Required Skill:**

Excellent Design & coding (Programme) skill in Visual Basic 6.0(VB6) with experienced skill in Com, Dcom, Multimedia & Database Development area as front-End and

Oracle (Network) based server as back-End and experienced skill in Remote DBMS, DBA works and restore & Backup capability.

**The Followings are considered for priority Testing**


- *Testing Tools handling knowledge*
- *Module Designing & interaction*
- *Testing & Delivery experience*

Under - mentioned items will be provided

- *Attractive Salary will be given (Rs. 10,000/- as minimum)*
- *Module based job hours*
- *Additional Remuneration will be provided for extended works*

Opportunities are endless, we prescribed those,
You can acquire through your talent

**UNIT**
Software
347, KKS Road, Jaffna.




## மரண அறிவித்தல்கள்

### தம்பிஐயா பத்மசுந்தரம்



திருநெல்வேலி, வளாக வீதியைச் சேர்ந்த தம்பிஐயா பத்மசுந்தரம் அவர்கள் 02.03.2006 வியாழக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும் நந்தகுமார் (பாபு-ஜேர்மனி), மேகலா, சசிகலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலறஞ்சனி, நிர்மலன் ஆகியோரின் அன்பு மாமனும் தர்ஷிகா, சாருகா, சர்மிகா, ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் இராஜேஸ்வரி, தனலட்சுமி, நல்லநாதன், தில்லைநாதன் ஆகியோரின் சகோதரனும் பரமேஸ்வரி, பரிமளகாந்தி, கந்தசாமி (லண்டன்), அமரர் சிவசுப்பிரமணியம், சபாரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விக்கினேஸ்வரனின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செல்வராணி** (மனைவி),
**நந்தகுமார்** (பாபு-ஜேர்மனி).

**வளாக வீதி,**
**திருநெல்வேலி.**
(47703)
(24.21.11.)

### திருமதி கணேசநாதன் ஆனந்தநாயகி



புளியங்குளம், வவுனியாவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசநாதன் ஆனந்தநாயகி 24.02.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை கணேசநாதனின் அன்பு மனைவியும் குலேந்திரன் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபை- நல்லம்மா தம்பதியரின் மருமகளும், பிறேம்நாத், பிறேமதிரிஜா, பிறேமநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கணேஸ்வரி கணேஸ்வரன் (ஜேர்மனி), கணேசகுமாரன் (மீசாலை), கணேசகுமாரி (திருநகர்), கணேசவதனி (சுவிஸ்), கணேசரூபி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2006) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.கணேசகுமாரன்,**
உபஅஞ்சல் அதிபர், விசுவமடு.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*
(சி-48174)

### திருமதி வள்ளியம்மை



அமரர் V.N. செல்லையா (பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவி வள்ளியம்மை அவர்கள் 02.03.2006 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் புனிதமலர் (கனடா - முன்னாள் அலுவலர், வீரகேசரி), யோகானந்தராஜா (சுப்பிரின்டென்ற் கைதடி - வயோதிபர் இல்லம்), இராமச்சந்திரன் (திருகோணமலை லிலா ஹோட்டல் உரிமையாளர், **Director Nippon Lanka & Co.**) மனோரஞ்சிதமலர், கனகாசிவபாதசுந்தரம் (மாவட்ட நீதிபதி, பொலன்னறுவை), லஷ்மிகாந்தன் (கனடா), கிருபானந்தன் (பிரான்ஸ்) சிவஞானசௌந்தரவல்லி, கருணாகரன் (ஜேர்மனி), அனுஷியா (**U.K.**) ஆகியோரின் அன்புத் தாயும் பழனிசாமி (முன்னாள் **Aitken Spence Ltd. Accountant**) பஞ்சாட்சரராணி, புஷ்பராணி, சிவபாதசுந்தரம் (முன்னாள் பொறியியலாளர், சிமெந்து தொழிற்சாலை, புத்தளம்), காலஞ்சென்ற செல்வநாயகம் (முன்னாள் தபாலதிபர், கொழும்பு), பவளராணி (கனடா), உதயகலா (பிரான்ஸ்), தேவகுணாளன் (**K.K.S. Lanka Cement Ltd.**), ரவீந்திரநாதன் (**U.K.**) ஆகியோரின் அன்பு மாமியும், பிரியதர்சினி (**U.K.**), துஷ்யந்தன் (பொறியியலாளர் **U.K.**) புருசோத்மன் (யாழ்.பல்கலைக்கழகம்), ஷேன் (லிலா ஹோட்டல், திருகோணமலை), கெவின், டிலக்ஷினி, **B.**பிரக்மதா, பிரம்மதா, பிரீத்தி (கனடா), கீர்த்தனா (கனடா), கிருஷன், டமாலினி, கிருஷாலினி (பிரான்ஸ்), கஜநாதன், துர்க்கா (**U.K.**) ஆகியோரின் அன்பு பாட்டியும் மெலீஷா (**U.K.**) வின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகளின் பின் பிற்பகல் 4.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


174/4/13 மெசென்ஜர் வீதி.
கொழும்பு - 12 தொ.பே. 0112449235

தகவல்:
**செ.இராமச்சந்திரன்**











ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திற்கு ஒன்பது உழவு இயந்திரங்கள் கையளிக்கப்கும் வைபவம் நேற்றுப் பிற்பகல் யாழ். மாநகரசபையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உழவு இயந்திரத்திற்குரிய ஆவணத்தைக் கையளிப்பதை முதல்படத்திலும் வைபவத்தில் கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (சுனாமிப் பகுதி) கே.இராசையா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டப்பொறியியலாளர் சர்மா, மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோரையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் - அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

கையளிக்கப்பட்ட உழவு இயந்திரங்களையும் படங்களில் காணலாம். (படங்கள் - பிரபா)

# அ.தி.மு.க. அணியில் இணைந்தார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழர் பிரச்சினைக்காகக் குரல் கொடுப்பது என்பது எமது கட்சியின் தலையாயக் கொள்கை. ஈழத்தில் விடுதலைக் குப் போராடுகிற ஒரே இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் அவர்களை ஆதரிப்பதிலோ ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பிலான எமது நிலைப்பாட்டிலேயோ எப்போதும் எதுவித சமரசத்துக்கும் இடமே இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார் வைகோ.

மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சி தலைமையிலான கூட்டணியில் இதுவரை வைகோவின் ம.தி.மு.க. இருந்து வந்தது. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சி அமைப்பானது 35 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. ஆகையால் 35 மாவட்டத்துக்கும் ஒரு பிரதிநிதியாக தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான தொகுதிப் பகிர்வில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 35 தொகுதிகள் கேட்கப்பட்டது. ஆனால், 16 தொகுதிகளில் தொடங்கி மிக அதிகபட்சமாக 22 தொகுதிகள் வரை தான் தர முடியும் என்று தி.மு.க. தரப்பு திட்டவட்டமாகத் தெரிவித்தது.

தி.மு.க. தரப்பு அளிக்க முன்வந்த 22 தொகுதிகளிலும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறக் கூடிய தொகுதிகள் ஆக 6 மட்டுமே இருந்தமையால் அக் கட்சியினர் வருத்தமடைந்தனர்.

இருப்பினும் வைகோவும் விட்டுக் கொடுத்து 25 தொகுதிகளை முதலில் கேட்டார். அதன் பின்னர் 23 தொகுதிகளுக்கும் ஒப்புக்கொண்டார்.

திடீரென திருச்சியில் வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி 22 தொகுதிகளைத்தான் தருவோம் என்று கூறிவிட்டார்.

அதே நேரத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் கோருகின்ற 35 தொகுதிகளையும் அளிக்க ஜெயலலிதா தலைமையிலான அண்ணா தி.மு.க. ஏற்கனவே முன் வந்தது.

இதையடுத்து கடந்த சில நாள்களாக தமிழக அரசியலில் ஏற்பட்டுவந்த பரபரப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நேற்றுக்காலை ஜெயலலிதாவின் போயஸ் தோட்டத்துக்குச் சென்ற வைகோ, தொகுதிப் பகிர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

வைகோவின் ம.தி.மு.கவுக்கு 35 தொகுதிகளைப் பகிர்ந்தளிக்கும் ஒப்பந்தத்தில் ஜெயலலிதாவும் வைகோவும் கைச்சாத்திட்டனர். இதை இருவரும் கூட்டாக ஊடகவியலாளர்களிடம் அறிவித்தனர்.

வைகோவின் இந்த திடீர் முடிவு குறித்து உடனடியாகக் கருத்துத் தெரிவிக்க கருணாநிதி மறுத்துவிட்டார். எனினும் தி.மு.க வட்டாரங்களில் வைகோவின் இந்த முடிவு கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க.வின் பிரசார ஊடகங்கள் வைகோவுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டிருக்கின்றன.

இதேவேளை -

ஈழத்தமிழர் விடயத்தில் அண்மைக்காலமாக தமது கடும் போக்கை ஜெயலலிதா தளர்த்தி வருகின்றமையைச் சுட்டிக்காட்டும் அவதானிகள், இப்போது ஈழத்தமிழர் ஆதரவு சக்திகள் அவரோடு தேர்தல் கூட்டணியாக இணைந்திருப்பது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான களநிலைமை தமிழகத்தில் வலுப்படுவதற்கு வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பொ.ஐ.முன்னணி பிரசாரக் கூட்டம் மீது சூடு! நால்வர் காயம்!

கொழும்பு,மார்ச் 5

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்திய பிரசாரக் கூட்டம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹிக்கடுவவின் கலுபேவில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் மனோஜ் மெண்டிஸ் உரையாற்றிக் கொண்டிருந்த போது வாகனம் ஒன்றிலிருந்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் அவர் காயமடையவில்லை. அவரது ஆதரவாளர்கள் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் கரப்பிட்டிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தானியங்கித் துப்பாக்கி மூலம் தாக்குதலை நடத்தியதாக ஹிக்கடுவ பொலீஸார் தெரிவித்தனர்.

மீடியகொட காவல் நிலைய பிரதேசத்துக்குட்பட்ட கே. பிரேமானந்தா (வயது 23), டபிள்யூ. எஸ்.மகிந்தரட்ண (வயது 60), சுபசிங்க சுகத்குமார (வயது 21), எஸ்.புத்திக (வயது 21) ஆகியோரே காயமடைந்தவர்கள் என்று பொலீஸார் கூறினர். (ஐ)

# அந்தண மாணவருக்கு பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 5

2005 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்த அந்தண மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்களின் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிமை முற்பகல் 10 மணி முதல் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-14)

# மேம்பட்ட மனித.....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல உலகப் பிரமுகர்கள் கருத்துத் தெரிவித் திருக்கிறார்கள்.

**2020 இல் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக வேண்டும்**

ஜக்கூர் விமான வளாகத்திடலில் மூன்று நாள்களும் நடைபெற்ற மாலை நிகழ்வுகளின் போது தாமே மூச்சுக் கலை நிகழ்வுகளின் போது தாமே மூச்சுக் கலை - தியானம் பயிற் சியை நடத்தி அங்கு திரண்ட மக்களை அவற் றின் ஈடுபாடு கொள்ளச் செய்தார்.

இறுதிநாள் மாலை நிகழ்வில் பல வெளி நாடுகளின் அரசியல் தலைவர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குகொண்டனர். அந்தப் பட்டியல் மிக நீளமானது. அநேகமாக உலகின் ஐந்து கண்டங்களிலும் உள்ள நாடுகள் மிகப் பலவற்றினதும் பெருந்தலைவர்கள் வந்திருந்தனர்.

அன்றைய நிகழ்வில் இந்தியாவின் ஜனாதிபதி ஏ.பி.கே. அப்துல்கலாம், உபசார உரையினை ஆற்றினார்.

2020 ஆம் ஆண்டில் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாகிவிடவேண்டும். அதற்காக நாட்டு மக்கள் எல்லோரும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட ஜனாதிபதி -

மனித மாண்புகளை உள்ளடக்கிய கல்வித்திட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவேண்டும் என்றும் -

சமயத்தை ஆன்மீகத்துவத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் - தெரிவித்தார்.

இந்தியாவிலேயே ஒரு நிகழ்வுக்கு இத்தனை லட்சக்கணக்கில் மக்கள் கூட்டம் எங்குமே திரண்டிருக்காது என்று கருதுமளவுக்கு மூன்றுநாள் மாநாடு முடிவுற்றது.

தியானம் உனக்குள்ளேயே நீ கடவுளைக் காண்பது என்பதாகும். அடுத்தவர்களில் கடவுளைக் காண்பதுதான் அன்பு. ஒன்றை மற்றது வலுப்படுத்தவல்லது. உனது சேவை அதிகரிக்க அதிகரிக்க நீ உனக்குள் ஆழச் செல்லலாம் - என்று தியானத்தை விளக்கும் ஸ்ரீஸ்ரீசங்க குருஜியின் ஆன்மீக ஞானம் உலகுக்கு சாந்தியும் சமாதானமும் நல்கும் என்று அவரது தொண்டர்கள் பெரிதும் நம்பிக்கையுடன் தெரிவித்தனர். (முற்றும்)

சான்றிதழ் வழங்கும் சிறப்பு நிகழ்வு

இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும் வேத சிவாகம குருகுல கலாசாலை ஆசிரியரிடம் கல்வி பயின்ற சகல மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் சிறப்பு நிகழ்வு இன்று (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை செயலக மண்டபத்தில் பி.ப. 2. மணிக்கு நடைபெறவுள்ளது.

சகலமாணவர்களையும் பெற்றோர்களுடன் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்.

(47710)(45-15) சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்.

நாகம்ஸ் சுன்னாகம்

அஜித், லைலா நடித்த

பரமசிவன்

பு.நே. 11.00, 3.00, 7.00

08ஆம் திகதி முதல்

சிவகாசி

ராஜா யாழ்ப்பாணம்

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா நடித்த

கோவை பிரதர்ஸ்

பு.நே. 10.30, 1.30,4.30 , 7.30

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

அக்ஷன் கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக் நடித்த

மதராஸி

பு.நே.: 10.00, 1.00, 4.00

வேலையாள் தேவை

எமது தொலைத்தொடர்பு நிலையத்திற்கு போட்டோக் கொப்பி, பக்ஸ், கொம்பியூட்டர் தெரிந்த பெண் பிள்ளை வேண்டும். முன் அனுபவம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வேணுகா தொலைத்தொடர்பகம்

இல. 961, K.K.S. வீதி,

நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(47712)(45-15)

வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு

எளிதில் வீடியோ மிக்சிங் செய்திட புத்தம் புதிய

capture card விற்பனைகு உண்டு




Canopus DVStorm 2 Pro

Pinnacle Pro one

Pinnacle DV 500 Plus

For Sale New DVD Backgroupd, New Effects, New Title Software

சதீஸ் ஒலிப்பதிவு கலையகம்

பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணம்

222 9466

0777 917745

எமது வாடிக்கையாளர்களுக்கு ! 01.01.2006 ற்கு முன்பாக எமது கலையகத்தில் திருத்துவதற்காக கொடுக்கப்பட்ட உங்கள் இலத்திரனியல் பொருட்களை 15.03.2006 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும் தவறின் இவற்றிற்கு நாம் பொறுப்பல்ல.

# உலக வங்கியின் பிரதிநிதிகள் இந்த வாரம் கிளிநொச்சி வருவர்

கிளிநொச்சி,மார்ச் 5

உலக வங்கியின் பிரதிநிதிகள் இந்த வாரம் கிளிநொச்சிக்கு வருகை தந்து தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் தாயகத்தில் ஆழிப் பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் யுத்தத்தினால் வீடுகளையும் தொழில்களையும் இழந்தவர்களுக்கும் உலக வங்கியின் அனுசரணையுடன் சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் முழு அளவிலான அபிவிருத்திப் பணிகள் எதுவும்இங்கு இடம் பெறவில்லை.

இது குறித்து விரிவாக ஆராய்வதற்காக கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ள உலக வங்கியின் பிரதிநிதிகள் இங்கு பணிபுரியும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளும் வருகைதரவுள்ளனர்.

ஆழிப்பேரலைத் தாக்க நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கபடாத நிலையில் தமிழர் தாயகத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி உதவிகளை நேரடியாக வழங்குமாறு உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் தமிழ்ச்செல்வன் நேரடியாகக் கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலை: விசாரணைக்கு பொலீஸார் வரவில்லை

கொழும்பு, மார்ச் 5

இணுவில் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டு அடித்துக் கொலைசெய்யப்பட்ட யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் வழக்கு விசாரணையை பொலீஸார் கைவிட்டுவிட்டனரா?

இவ்வாறு சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு கொழும்பு நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

வழக்கின் முன்னேற்றம் குறித்த அறிக்கையைத் தாக்கல் செய்ய குற்றத் தடுப்பு காவல் துறையினர் எவருமே நீதிமன்றில் ஆஜராகவில்லை. இதையடுத்து இந்த வழக்கின் விசாரணை அறிக்கையை குற்றத் தடுப்புப் பிரிவினர் உடனே தாக்கல்செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று சந்தேகதின் பேரில் கைதுசெய்யப்பட்ட கோபி என்ற நபரை அடையாளம் காட்ட சார்ள்ஸ் விஜயவர்த்தனவுடன் பணியில் ஈடுபட்டிருந்த 10 பொலீஸாரும் தவறியமை தொடர்பில் முன்னர் நீதிபதி ஆச்சரியம் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் கோபியை நீதிமன்றம் விடுவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இக்கொலை வழக்கு விசாரணை ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## வடமராட்சி மீனவரும் பகிஷ்கரிப்பர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச மீனவர்களின் கோரிக்கைகளை ஏற்று உடனடித் தீர்வு வழங்க படையினர் முன்வர வேண்டும். இல்லையேல் நாளை திங்கட்கிழமை முதல் தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

கடற் படையினரால் அண்மையில் அமுல்படுத்தப்பட்ட உயர் பாதுகப்பு வலய தடைச் சட்டத்தினால் 584 மீனவர் குடும்பங்கள் முற்றாகத் தொழிலை இழந்துள்ளனர். அது மட்டுமன்றி அண்மையில் மாதகல் மீனவர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இவற்றுக்குத் தீர்வுகோரி அப்பகுதி மீனவர்கள் தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். - என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களின் சமாசம் தெரிவித்துள்ளது. (ஐ-14)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேச்சுகளில் பொதுமக்கள் மீளக்குடியமர வசதியாக இராணுவ நெருக்கடிகளைக் கைவிடவேண்டும் என்பது உட்பட பல விடயங்கள் முக்கியமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும் தமிழ் மக்களின் இயல்வு வாழ்வினையும் மீள்குடியமர்வினையும் சாத்தியமானதாக்கும் நடவடிக்கைகளினை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அரசாங்கம் தனது படைக்கட்டுமானங்களின் பாதுகாப்பை மட்டுமே கவனத்தில் கொண்டு தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினை நாளாந்தம் சிக்கலாக்கி வருகிறது.

அரசின் இத்தகைய போக்கைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்தால் தாம் எதிர்கொள்ளும் மீள்குடியமர்வு மற்றும் இயல்வு வாழ்க்கைப் பிரச்சனைகளை சர்வதேச அரங்குக்கு தெரியப்படுத்தும் வகையில் இப்போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக வலிகாமம் வடக்கு மக்கள் தெரிவித்துள்ளனர் - என்று இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ)

# வவுணதீவில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தப்பட்டவேளை புலிகளின் நிலையில் குறைந்தது 10 போராளிகள் தங்கியிருந்தனர் என்றும் அவர்களில் இருவர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துவிட்டனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

### புலிகளின் அறிக்கை

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

04.03.2006 ஆம் நாளன்று அதிகாலை 12.30 மணியளவில் 300 மீற்றர் தூரத்திலுள்ள வவுணதீவு ஸ்ரீலங்கா சோதனைச் சாவடியில் இருந்தும் அதை அண்மித்திருக்கும் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும் அவர்களுடன் இணைந்து வந்த ஆயுததாரிகள் எமது வவுணதீவு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலரண் முன்னரணைத் தாக்கியுள்ளனர்.

இதில் தவலோகன் என்னும் போராளியும் மற்றொரு போராளியும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

எதிர்த் தாக்குதலை எமது போராளிகள் மேற்கொண்ட போது இத் தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து வந்த ஆயுத தாரிகளும் வவுண தீவில் உள்ள தங்களது முகாமை நோக்கித் தப்பி ஓடியுள்ளனர்.

சற்று நேரத்தின் பின் அவர்களது முகாமிலிருந்து அம்புலன்ஸ் வாகனமும் இன்னும் ஒரு சில வாகனங்களும் மட்டக்களப்பை நோக்கிப் புறப்பட்டன என்றும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

சிறிலங்கா இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோத ஆயுத தாரிகளும் திட்டமிட்டு இத்தாக்குதல்களில் ஈடுபட்ட பின் அவர்களின் முகாமில் இருந்து தப்பிச் செல்வதற்காகவும் காயப்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்காகவும் அம்புலன்ஸ் மற்றும் அவர்களது வாகனங்களைப் பாவிப்பதாக எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் உறுதிப்படுத்துகின்றோம்.

பெப்ரவரி 22, 23ஆம் நாள்களில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்தி பூரணமாக கடைப்பிடிப்பதற்கு இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்து நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இத் தருணத்தில், சமாதானத்தை விரும்பாத சிறிலங்கா அரசின் பேரினவாதிகளும் சிறிலங்கா இராணுவம், படைப் புலனாய்வுத் துறையினரும் அவர்களுடன் இயங்கிக்கெண்டிருக்கும் தேச விரோத ஆயுததாரிகள் ஆகிய துணை இராணுவக் குழுக்களும் இத்தகைய மோசமான நடவடிக்கையில் ஈடுபட்டு மீண்டும் எமது தாயகத்தில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழித்து சிதறடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதையே இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் எடுத்துக்காட்டுகின்றது.

இந்தத் தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் இது ஒரு முற்றுமுழுதான யுத்தநிறுத்த மீறலாகும் என்று தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14-190)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் ஏற்கனவே சிறிலங்காப் படைத்தரப்பாலும் துணை ஒட்டுப்படைக் குழுவினராலும் தோற்றுவிக்கப்பட்டுள்ள பதற்ற நிலையை மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதற்காக வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கான வாக்கெடுப்பாக கருதியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்குள்ள ஜனநாயக உரிமையைக் காலில் போட்டு மிதிக்க ஜனநாயக விரோத சக்திகள் தயாராகின்றன என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஆனால், இந்த வகையிலான மிரட்டல்களுக்கு அது எந்தத் திசையிலிருந்து வந்தாலும் தகுந்த வகையிலான பதிலடியைக் கொடுக்க தமிழ் பேசும் மக்கள் தயாராகவே இஉள்ளனர் என்பதை இவ்வகை சிறுமதியினர் புரிந்துகொள்ளவேண்டும்.

ஏதேனும் ஒரு வகையில் உள்ளூராட்சி தேர்தலைக் குழப்பவேண்டும். அதன்மூம் தாம் காணப்போகும் படுதோல்வியைத் தவிர்த்து விடவேண்டும் என்ற கபடத்தனமாக போக்கு தமிழ் பேசும் மக்களால் புரிந்துகொள்ளக் கூடியதே.

வேட்பாளர் எஸ்.எம்.ஸுகைப் அவர்களது குடும்பத்தினர் மீதான கேவலமான தாக்குதலைக் நாம் கண்டிப்பதுடன் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் தக்க படிப்பினையைப் புகட்டுவர் என உறுதிப்படக் கூறுகின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கை கூறுகின்றது. (ஐ)

## புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணசிங்கவுக்கு அப்பகுதி மக்கள் அறிவித்தனர். தொடர்ந்து அவர் குறித்த பகுதிக்குச் சென்று மயங்கி வீழ்ந்த காகங்களை பன்னல விலங்கியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்புவைத்துள்ளார்.

மயங்கி வீழ்ந்த காகங்களின் சொண்டிலிருந்து ஒருவித மஞ்சள் நிறத்திலான திரவம் வடிந்ததாக பொது மக்கள் கூறினர்.(ஐ)

## குழந்தைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்ட தாயாரை பொலீஸார் மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கின்றனர்.

30 வயதுடைய இந்த இளம் தாய் குழந்தைகள் இரண்டையும் நீரினுள் அமிழ்த்தி கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. சம்பவம் இடம்பெற்றவேளை இவரது கணவர் வீட்டில் இருக்கவில்லை. (ஐ)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது சிக்கினார் என்றும் -

இவரது லொறியின் உள்ளே 50 பரல்களில் டீசல் காணப்பட்டது என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பரல்களில் 'பியர்' மதுபானத்தை எடுத்துச்செல்வதாகக் கூறியே இவர் டீஸல் கடத்த முயன்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


இரசாயனவியல் கருத்தரங்கு
நிறுவனத்தில் கற்காத மாணவர்களிற்கானது
இரு கருத்தரங்குக் கட்டணம் 100/=
ஆரம்பம்: 07.03.2006
செவ்வாய் 10.30 a.m.
'சேதன அசேதன இரசாயனங்களில் ஒட்சியேற்றம் தாழ்த்தலின் பிரயோகம்'
09.03.2006 Thurs10.30 a.m.
By: அன்பழகன் B.Sc.
NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்.




விஷேட சலுகை
9000/=
எப்பிரதேசத்திலும் எந்த சூழ்நிலையிலும் வீட்டில் இருந்தவாறு உரையாடக்கூடிய முறையில் டயலொக், மொபிரெல் மேசைத்தொலைபேசிகள் பைக்கேச் இணைப்புக்களுடன் குறைந்த செலவில் பொருத்தித் தரப்படும்.
மொபிரெல் 300/= டயலொக் 500/= பைக்கேச்சுகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
உத்தரவாதம் உண்டு.
அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகளையும் அதற்கான உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: நியூ பவர் செலுலர் டிரேடிங் கம்பனி
205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773-518330
077-6660289
(46996)
(54-12-45)



கொழும்பு செல்லும் பயணிகளுக்கான அறிவித்தல்
எதிர்வரும் 06-03-2006 தொடக்கம் பெரிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வுள்ளது. ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளும் பயணிகள் கீழ்க்காணும் முகவரியில் பதிவுகளை மேற்கொண்டு உங்கள் பயணங்களைத் தொடரலாம்.

தொடர்பு:
திரீ ஸ்ரார் ஹோட்டல்
இல.162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P NO: 222 7125, 222 3817, 077 3611282



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
05.03.2006

# இந்தியாவை நெருங்கி வருகிறது அமெரிக்கா!

**மாலன்**

ஒரு வகையில் அமெரிக்க அதிபரின் இந்திய வருகை முக்கியத்துவம் வாய்ந்ததுதான். 1947 இலிருந்து கணக்கு வைத்துக் கொண்டு பார்த்தால் இந்த 59 ஆண்டுகளில் 33 ஆண்டுகள் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவை



ஆண்டிருக்கிறார்கள். ஆனால், ஐஸ்னோவரைத் தவிர எந்தக் குடியரசுக் கட்சியின் அதிபருக்கும் இந்தியாவிற்கு வரத் தோன்றியதில்லை.

ஏன் இப்போது திடீரென்று அமெரிக்காவிற்கு இந்தியா மீது ஒரு கரிசனை? இன்று அமெரிக்காவில் இருபது லட்சம் இந்திய வம்சாளியினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அமெரிக்க அரசியலில் செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்கள் என்று அமெரிக்க அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். ஒவ்வோர் அதிபர் தேர்தலின் போதும் அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியினரைக் கவர இரண்டு அரசியல் கட்சிகளுமே விருந்துகளையும் சில நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றன.

அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் கடந்த ஆண்டு அதாவது 2005ஆம் ஆண்டு டிசெம்பர் 12ஆம் திகதி 'வாஷிங்டன் போஸ்ட்' இதழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.இனி வரும் நாள்களில் உலகின் ஐந்து பெரும் வல்லரசுகளில் ஒன்றாக இந்தியா திகழும் என்று குறிப்பிட்டிருந்தார். ரைஸின் கணிப்பை புஷ் நிர்வாகத்தின் - ஏன் வாஷிங்டன் அரசியல் வாதிகளின் - கணிப்பு என்றே கொள்ளலாம். எனவே, வளர்ந்து வரும் ஒரு சக்தியுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளும் அக்கறை அமெரிக்காவிற்கு இருக்கலாம்.

புஷ் முதல்முறையாகப் பதவியேற்ற நாள்களிலிருந்தே தெற்காசிய விஷயங்களில் மூக்கை நுழைப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். தெற்காசியாவில் எடுக்கப்படும் முடிவுகள் அமெரிக்க 'வழிகாட்டுதலின்' பேரில் எடுக்கப்பட வேண்டும் என்பது அவரது ஆசைகளில் ஒன்று. அதிகாரத் தராசில் சீனாவைச் சமன் செய்வதற்கு மட்டுமல்லாமல், தெற்காசியாவில் அமெரிக்காவின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் நண்பனாக இந்தியாவை உருவாக்க அவர் விரும்பலாம். பரப்பளவு, மக்கள் தொகை, பொருளாதார பலம், ராணுவ பலம் என்ற எல்லா விதத்திலும் தெற்காசியாவில் உள்ள பெரிய தேசம் இந்தியா. இந்தப் பகுதியின் அரசியலைத் தீர்மானிக்கும் ஆற்றல் அதன் வசம் உள்ளது.

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான உறவு பூசலும் நேசமும் நிறைந்த, காதலும் மோதலும் நிறைந்த உறவாகவே இருந்து வந்திருக்கிறது. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே நிழல் யுத்தம் நடந்து கொண்டிருந்த அந்த ஆரம்ப நாள்களில் இந்தியா இரு நாடுகளிடமிருந்தும் விலகித் தனித்து நின்றது.


அணிசாரா நாடுகளின் அமைப்பைத் தோற்றுவிப்பதில் முனைப்புக் காட்டிய நாள்கள் அவை. சோவியத் யூனியன் சிதைவிற்குப் பின் கடந்த 15 ஆண்டுகளாக இந்திய - அமெரிக்க உறவில் ஒருவித இளக்கம் இருந்து வருகிறது.

**நெருடும் விவகாரம்**

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான உறவில் நெருடலாக இருந்து வரும் ஒரு விஷயம் அணுசக்தி. 1974இல் இந்தியா அணு வெடிச்சோதனை நடத்தியதை அடுத்து அமெரிக்கா இந்தியாவிற்குப் பலவிதமான முட்டுக் கட்டைகளைப் போட்டு வந்தது. அந்த முட்டுக் கட்டைகளையும் மீறி தன்னுடைய விஞ்ஞானிகளின் ஆற்றல் ஒன்றையே துணையாகக் கொண்டு இந்தியா தொடர்ந்து தன் அணு ஆற்றலை வளர்த்துக் கொண்டிருந்தது. மின்சக்திக்காக உருவாக்கப்பட்ட உலைகளைக் கேடயமாகக் கொண்டு அணு ஆயுதங்களையும் அது தயாரித்தது. இன்று ஈரான் போன்ற நாடுகள் அமெரிக்க எதிர்ப்பை ஒரு பொருட்டாகக் கருதாமல், தங்களது அணுமின் நிலையங்களைப் பயன்படுத்தி அணு ஆயுதங்கள் செய்வதற்கான துணிவைப் பெறுவதற்கு இந்தியா ஒரு முன்னோடி, (அந்த நாட்டைத் தனிமைப்படுத்த முற்படும் அமெரிக்க முயற்சிகளுக்கு இந்தியா துணை நிற்பது வரலாற்றின் விசித்திரம். ஒரு துரதிர்ஷ்டம்). முட்டுக் கட்டைகள் பலன் தராது போனதையடுத்து அமெரிக்கா இந்தியாவை அணு ஆயுதப் பரவில் தடை ஒப்பந்தத்தை (Non - Proliferation Treaty - NPT) ஏற்குமாறு நிர்பந்தித்து வந்தது. அந்த ஒப்பந்தம் ஒரு தலைப் பட்சமானது என்பதைச் சுட்டிக் காட்டி இந்தியா அதில் கையெழுத்திடப் பிடிவாதமாக மறுத்து வந்தது. இந்தியாவின் இந்த வாதம் நியாயமானது. இந்தியா அணு ஆயுதம் தயாரிப்பதை ஏற்காத இந்தியர்கள் கூட இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரிக்க மட்டுமல்ல அது குறித்துப் பெருமிதம் கொள்வர்.

**அணுவிவகாரம்**

இந்த வரலாற்றிலிருந்து விலகி இன்று அமெரிக்கா வேறு ஒரு வித ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறது. கடந்த ஆண்டு ஜூலை 18ஆம் திகதி வெளியிடப்பட்ட அமெரிக்க அரசின் குறிப்பின்படி பார்த்தால் இந்தியா, பொதுமக்கள் தேவைக்கான அணுமின் நிலையங்களையும், ராணுவத் தேவைக்கான அணு ஆயுத உற்பத்தி ஆலைகளையும் தனித்தனியே இனம் காண வேண்டும் என அது வற்புறுத்துகிறது. எத்தகைய அணு ஆயுதம் வைத்துக்கொள்ளப் போகிறோம். எவ்வளவு வைத்துக் கொள்ளப்போகிறோம் என்று முடிவு செய்து கொள்ளாமல், இப்படி அணு உலைகளை இனம் பிரிப்பது இயலாது. ஆனால், எவ்வளவு ஆயுதம், எத்தகைய ஆயுதம் என்பதற்கான விடைகள் நம் மனோபாவம் சார்ந்தவை. அதற்குத் திட்டவட்டமான விடைகள் இருக்க முடியாது. அதுவும் எந்தச் சூழ்நிலையிலும் இந்தியா முதலில் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்காது என்ற கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்த பின்னர் இதுபோன்ற கேள்விகளுக்கு விடை காண்பது எளிதல்ல.



எனவே, புஷ்ஷின் இந்திய விஜயத்தின்போது இந்த விவகாரம் ஒரு முடிவுக்கு வந்து விடும் என கருத முடியாது. ஆனால், வேளாண்மையில் இந்திய அமெரிக்க ஒத்துழைப்பு, பயங்கரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்த முயற்சிகள், தொழில்நுட்பப் பரிமாற்றம், வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்த அறிவிப்புகள் வெளியாகலாம். அவற்றிற்கும் அப்பால் கொண்டலீஸா ரைஸ் 'வாஷிங்டன் போஸ்டில்' வெளிப்படுத்திய ஐந்து வல்லரசகளில் ஒன்று என்ற நம்பிக்கையை ஏற்பது மட்டுமல்ல. உறுதி செய்வதாகவும் இந்தப் பயணம் அமையுமானால் அது அர்த்தமுள்ளது. இல்லையென்றால் இது வெறும் சுற்றுலாதான்

---

## சுவடுகள்

இரவின் மடியில் ஊரே உறங்கிவிட்டது
எங்கும் மயான அமைதி
கண்ணிமைகளோ அயர மறுக்கின்றன
ஜன்னலோரமாகச் சென்று வெளியே
பார்வையை வீசுகிறேன்...
பெருவிருட்சங்களின் நிழல்கள்
பால்நிலவொளியில் அசைவது
ஏதோதோ பயங்கர நினைவுகளை
வரவழைக்கிறது...
வானத்தை அண்ணாந்து
நோக்குகிறேன்...
ஆயிரம் மின்மினிகள் மேகத்திரையில்
மின்னிமின்னிப் பிரகாசிக்கின்றன
ஊருறங்கினாலும் நாம் உறங்கவில்லை
என்பதுபோல அவற்றின் பரிகசிப்பு
இறைவனின் படைப்புகள் தான்
எத்துணை மகத்தானது.
வடக்கு வானில் மிகப் பிரகாசமாய்
ஜொலிக்கிறது துருவ நட்சத்திரம்
யாருமற்ற தீவில் தனித்து நிற்பவனுக்கு
இத்துருவ நட்சத்திரம்தானே
வழி (திசை) காட்டி
ஆம், காலமும் கிரகங்களும்
தத்தம் வேலையை ஒழுங்காய்த்தான்
செய்கின்றன.
ஆனால், ஆறறிவு மனிதன் மட்டும்
பாதாளத்தை நோக்கித் தன் சுவடுகளைப்
பதித்துச் செல்கின்றான்.

எஸ்.திருஜா,

# மீண்டும் நேரம் மாற்றம்! ஓர் ஆய்வு

இலங்கை ஒரு சிறிய நாடு. இருப்பினும் இங்கு பலதரப்பட்ட நேரங்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. புதிய நேரம், பழைய நேரம், இலங்கை நேரம், தமிழீழ நேரம் என இப்படிப் பல. ஆனால், எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டிலிருந்து நாம் தற்போது கூறும் பழைய நேரத்தை நாட்டின் பொதுநேரமாக்குவது என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகிறது. இது குறித்து ஆராய்கிறார் சி.ஜே.அமரதுங்க. 'லங்காதீப' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.



இலங்கை பொதுநேரத்தை மீண்டும் 1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த விதத்திற்கு மாற்றுவது என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டின் பல்வேறு வல்லுநர்களின் கருத்துக்களுக்கு அமைய இந்த நேரமாற்றம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நேரமாற்றத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

1996 ஆம் ஆண்டில் நாட்டில் மின் உற்பத்தியில் தட்டுப்பாடு நிலவியது. அவ்வாண்டில் தினமும் சுமார் 8 மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினைக்கான தீர்வை அரசு தேடிக்கொண்டிருந்தது.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு நாள் அரசு விசேட அறிவிப்பொன்றை விடுத்தது. அதாவது, 1996 ஜூலை முதலாம் திகதியிலிருந்து நாட்டின் பொது நேரம் ஒரு மணித்தியாலத்தால் மாற்றப்படுகிறது என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, ஒவ்வொருவரும் தங்கள் மணிக்கூட்டின் நேரத்தை ஒரு மணித்தியாலம் முன் நகர்த்த வேண்டும் என அரசு தெரிவித்தது.

மக்களுக்கு இது புதுமையான அனுபவமாகும். பலர் நேரம் என்பது மாற்றப்படக் கூடிய ஒன்றல்ல என்றே நினைத்திருந்தனர். இருப்பினும் அவர்களது அவ்வாறான எண்ணம் அரசு மேற்கொண்ட தீர்மானத்தால் அடிபட்டுப் போயிற்று.

இருப்பினும், அரசின் இந்தத் தீர்மானத்திற்கு எதிரான கருத்துக்கள் உருவாகின. குறிப்பாக நேரத்தை ஒரு மணித்தியாலம் முன் கூட்டி வைத்தால் பாடசாலைப் பிள்ளைகள் அதிகாலையில் எழுந்து இருளில் (விடியுமுன்) பாடசாலைக்குச் செல்ல நேர்ந்தது.

மலை நாட்டில் காலை நேரத்தில் அதிக குளிரில் மாணவர்கள் நித்திரை விட்டெழுந்து பாடசாலைக்குச் செல்வதும் அவர்களைப் பாடசாலைகளுக்குப் பெற்றோர் அனுப்புவதும் கஷ்டமாக இருந்தது.

அதேபோல, காரியாலயங்களுக்குச் செல்லும் ஊழியர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது.

இவ்வாறான எதிர்ப்புகளை அடுத்து அரசு பாடசாலைகள் மற்றும் பணிமனைகள் தொடங்கும் நேரத்தை அரை மணித்தியாலத்தால் பின்தள்ளியது. அதாவது முன்கூட்டிய ஒரு மணித்தியாலத்தை அரை மணித்தியாலமாக்கியது.

1997 மார்ச் மாதத்தில் மணிக்கூட்டின் நேரத்தை மீண்டும் அரை மணித்தியாலத்தால் மாற்றியது. இவ்வாறு அடிக்கடி மணிக்கூட்டு நேரத்தை மாற்றுவதன் அர்த்தத்தை இந்நாட்டின் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் காலப்போக்கில் புதிய நேரத்திற்கு மக்கள் பரீட்சயப்பட்டனர்.

1996 இல் மணிக்கூட்டு நேரம் ஒரு மணித்தியாலம் முன்கூட்டி வைக்கப்பட்ட போதிலும், உண்மையில் அரை மணித்தியாலத்தை மட்டுமே முன்கூட்டுவது என ஆலோசிக்கப்பட்டது. இது மின்சாரத்துறையினர் முன்வைத்த ஆலோசனை மட்டுமல்ல, சர்வதேச தொலைத்தொடர்புகள், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய துறைகளில் ஈடுபட்ட அமைப்புகளும் தனிநபர்களும் விடுத்த கோரிக்கையுமாகும்.

மின்சாரத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் ஒரே விதத்திலான பிரச்சினையை முன்வைத்தனர். அவர்கள் முன்வைத்த பிரச்சினை என்னவெனில், இரவு 8 மணியளவில் மின்பாவனையாளர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் மின்சாரப் பாவனையை மேற்கொள்வதால் 'லோட்' அதிகமாகிறது. பகல் நேரத்தில் 700 - 800 கிலோவாட் அளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இரவு 8 மணியளவில் இது 1500 கிலோ வாட்டாக அதிகரிக்கிறது. பின்னர் அதிகாலை 2 மணியளவில் அது 500 கிலோவாட்டாகக் குறைகிறது. எனவே, இரவு 8 மணிக்கு 1500 கிலோவாட் மின்சாரத்தை வழங்க வேண்டுமாயின் நாட்டிலுள்ள அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும் செயற்படவேண்டும். இதனால், மின் உற்பத்தி நிலையங்களுக்கு அதிக செலவினம் ஏற்படுகிறது.

உலகில் பல நாடுகள் தேவைக்கேற்ப தமது நாடுகளின் பொது நேரத்தை முன்கூட்டி அல்லது பின் நகர்த்தியுள்ளன. இதற்குக் காரணம் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் தொலைத் தொடர்புகள் தொடர்பான வசதிகளாகும்.

**தமிழில்: கஜனி**

எவ்வாறாயினும், மின்சாரத் துறையைப் பொறுத்தவரை இந்த நேர மாற்றங்களால் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதே அத்துறைசார் வல்லுநர்களின் கருத்தாகும். இந்த நேர மாற்றங்களை மேற்கொண்டபோது மேற்கொள்ளப்பட்ட தவறான முடிவுகளே நேரமாற்றத்தால் மின்சாரத்துறைக்கு எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காததற்கு முக்கிய காரணம் எனப் பேராசிரியர் திலக் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

"அரை மணித்தியாலத்திற்கு மட்டுமே நேர மாற்றத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதற்குப் பதிலாக ஒரு மணித்தியாலமாக அதிகரித்தனர். இருப்பினும், மக்களுக்கு வசதியீனங்கள் ஏற்பட்டபோது பாடசாலைகள் மற்றும் பணிமனைகள் ஆரம்பிக்கும் நேரத்தை அரை மணித்தியாலத்தால் பிற்போட்டனர். ஒரு வருடத்தின் பின்னர் ஒரு மணித்தியால வித்தியாசத்தை அரை மணித்தியாலமாக்கினர். இதனால் மின்சாரத் துறையினருக்குக் கிடைத்திருக்கக் கூடிய சாதகமான நிலையைப் பெற முடியவில்லை" எனத் தெரிவிக்கிறார் பேராசிரியர் திலக் சியம்பலப்பிட்டிய.

இவ்வாறான நிலைமை ஏற்படுத்துவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, பொது நேரத்தை மாற்றுவதால் என்ன நடைபெறும் என்பதை அது குறித்து முடிவு எடுப்பவர்களும் நடைமுறைப்படுத்துபவர்களுமான அரசியல்வாதிகள் அறிந்திருக்கவில்லை.

பொது நேரத்தை மாற்றும் போது பொதுமக்களின் செயற்பாடுகளும் அதற்கேற்ப மாறும் என எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, பொதுமக்கள் மிக நேரத்துடன் நித்திரைவிட்டு எழுவார்கள் எனவும் மிகவும் நேரம் சென்ற பின்னர் இரவில் நித்திரைக்குச் செல்வார்கள் எனவும் கருதப்பட்டது.

ஆனால், ஆரம்பத்தில் ஒரு மணித்தியாலத்திற்குப் பதிலாக அரை மணித்தியாலமாக நேரத்தை மாற்றியிருந்தால் மக்களின் எதிர்ப்பின்றி நடைமுறைப்படுத்த வசதியாக இருந்திருக்கும். ஆனால், திடீரென ஒரு மணித்தியாலத்தால் நேரத்தை மாற்றும்போது மக்கள் அதை எதிர்ப்பது இயற்கையே.

மக்களின் எதிர்ப்புக் காரணமாகப் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்தை அரை மணித்தியாலத்தால் பின் தள்ளினர்.

இந்த நாட்டில் முன்னர் சரியான நேரம் நடைமுறையில் இருந்தது எனவும் இந்த நேர மாற்றத்தால் தவறான நேரம் பேணப்பட்டு வருவதாகவும் மக்களிடையே ஓர் உணர்வு ஏற்பட்டுள்ளது.

மதத்தலைவர்கள் மற்றும் சோதிடக் கலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாறான கருத்தைக் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

ஆனால், உண்மையில் 1996 ஆம் ஆண்டிற்கு முன்னரும் நாங்கள் உண்மையான நேரத்தை அனுசரித்துவரவில்லை. எமது நாடு கிறீன்விச்சிலிருந்து கிழக்கே 80-81 ரேகையில் அமைந்துள்ளது. இதன்படி கிறீன்விச்சிற்கும் கொழும்பிற்கும் நேர வித்தியாசம் 5 மணித்தியாலம் 20 நிமிடங்கள். அதாவது 320 நிமிடங்களாகும் (80X4) ஆனால், எமது பொதுநேரம் 5 மணித்தியாலம் 30 நிமிடங்களாக இருந்தது. இது புவியியல் அடிப்படையில் 10 நிமிடங்கள் அதிகமாகும்.

புவியியல் அடிப்படையிலான நேரத்திற்கும் பொது நேரத்திற்கும் இடையே பல நாடுகளில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. நாட்டின் கிழக்கு எல்லைக்கும் மேற்கு எல்லைக்கும் புவியியல் ரீதியான நேரத்தில் மணித்தியாலங்கள் கூட வித்தியாசப்படுகிறது.

உதாரணமாக, இந்தியாவை எடுத்துக்கொள்ளுவோம். இந்தியாவின் பொது நேரம் காலை 9.00 மணியாக இருக்கும் போது கிழக்கு எல்லையில் அமைந்துள்ள கொல்கத்தாவில் உள்ளூர் நேரம் காலை 9.15, மேற்குப் புறத்தில் அமைந்துள்ள மும்பாயில் உள்ளூர் நேரம் காலை 8.45.

தற்போது 1996 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைமுறையில் இருந்த நேரத்தை மீண்டும் அனுசரிப்பது எனச் சிந்திக்கப்படுகிறது. கடந்த காலங்களில் நாங்கள் பெற்ற தவறான அனுபவங்கள் குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். அன்று இடம்பெற்ற ஒவ்வொரு தவறுகள் குறித்தும் நாம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். அவ்வாறில்லாமல் தான்தோன்றித்தனமாக எடுத்த முடிவுகள் காரணமாக நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய சாதகங்கள் இழக்கப்பட்டன. மீண்டும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வது பொறுப்புடையவர்களின் கடமையாகும்.

---

## மகிழ்ச்சியான கற்பனை...

வரண்ட நிலத்தில் நின்று...
பச்சை வயலைப் பார்க்கிறேன்...
ஆஹா! இயற்கை எத்தனை அழகு
மழை வருமா என ஏக்கம்
கார்முகில்கள் சூழ்கின்றன
மின்னல் வெட்டுகிறது
இடிச்சத்தம் காதைக் குடைகிறது
ஆனாலும்,
இன்னும் மழை வரவில்லை
காய்ந்த நிலம் ஏங்குகிறது
பலநாள் ஏங்கி ஏங்கி தோற்றதனால்
நம்பிக்கை வரவில்லை - அதற்கு
நீண்ட நாள் மழை இல்லாததால்
இறுகிப் போய்க்கிடக்கிறது
இரக்கமெனும் பொருளிலா
அரக்கரைப்போல!
ஒரு மழைபெய்தால்
கனவிலும் நினைவிலும் தணியாத ஏக்கம்
மனிதர்கள் வருவார்கள்!
பண்படுத்தி உழுவார்கள்!
விதைகளைத் தூவுவார்கள்!
வண்ணமயமாய்ப் பயிர்கள்
தலையசைத்து விளையாடும்.
வாடைக்காற்று வந்து விடும்...
குருவிகள் தீனி பொறுக்கும்
கீச்... கீச்... என்ற அவற்றின்
இனிய தாலோசையில் மதிமயங்கிப்
போவேன் நான்
வளமாய்க் கற்பனை செய்கிறது நிலம்
ஆனாலும் -
ஒரு துளி மழையும் நிலத்தில்
விழவில்லை
காலை முதல் மாலைவரை
மீண்டும் மீண்டும்
சூரியப் பார்வையில் கருள்கிறது
நிலம்!

ஜி.சித்தர், நல்லூர்.

---

## எனது கனவில் சிரித்தவர்கள்

காலமுள் கிழித்த
காயத்திலிருந்து வடிகிற
குருதியை வழித்து
கோபத்துடன்
மேகங்களில் வீசியெறிகிறது
செவ்வந்திச் சூரியன்.
சாலையோரத்து உதிர்சருகு
தன்னை மிதித்த கால்களை
முறிப்பதாய்ப் பேசியபடியே
முறிகிறது துகள்களாய்
'தெரியாதே மிதித்தேன்'
எனச் சத்தியமிட முடியாத ஒரு
நேர இடைவெளிக்குள்
என்னை
கொட்டி விட்டுச் சுருள்கிறது
சிறு எறும்பு.
இவ்வாறாக இவைகள்
வாழ்ந்துவருகிற உலகில்
வாழ்ந்து வருகின்ற நான்
சகோதரனுக்கோ
துணைவருக்கோ
கொடுப்பினையில்லாதபடிக்கு
வீதிக்கிறங்கிய பொழுதொன்றில்
என்னுடலில் இச்சையுற்ற
ஒற்றை வார்த்தையை
உமிழ்ந்தாய் என்மீது
காறித் துப்பிய
உமிழ்நீராய்.
அந்த எச்சில்
பிறகாதுகள்
ஏதாவதொன்றில்
விழுந்திருக்குமோவென
அலைகிற என்
கண்களை
மேலும் தாழ்த்தி
நடந்தேன்
கடல் நடுங்கிப் பதற.
என் அதிர்ஷ்ட வேளை
எவரும்
கேட்டிருக்கவில்லை.
எவரும் கேலிக்கவில்லை
எனினும்........
இரவானது
அமைதியுற்றதன் பிறகு
என் கனவில் வந்து
என்னைப் பார்த்துச்
சிரித்தன
செவ்வந்திச் சூரியனும்
ஒரு சருகும்
சின்னதோர் எறும்பும்
தாங்க முடியவில்லை.

ராங்கா தயாநந்தன்

# அமெரிக்க யுத்தக்கப்பலை ஆட்டிப்படைக்கும் ஆவிகள்



**'யு**.எஸ்.எஸ்.ஹொனட்' என்ற அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான அந்தப் பிரமாண்டமான விமானம் தாங்கிக் கப்பல் அந்தவேளையில் அத்திலாந்திக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்தது. மத்தியதரைக் கடல் ஊடாக இந்துமா சமுத்திரப் பரப்பை அடையும் நோக்குடன் அந்தக் கப்பலின் பயணப்பாதை அமைந்திருந்தது. கப்பலில் கடமையில் இருந்த ஊழியர்கள் தமது கடமைகளில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்ட வண்ணமிருந்தனர். கப்பலின் ஆயுதக் களஞ்சியப் பிரிவில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படை அதிகாரியொருவரின் பார்வை ஏதேச்சையாக அவசர ஆயுத விநியோகப் பிரிவின் பக்கம் செல்ல நேர்ந்தது. வழமைக்கு மாறாக அவசர ஆயுதவிநியோகப் பிரிவில் ஆள் நடமாட்டம் காணப்பட்டதை அவர் அவதானித்தார். அவரது கூர்ந்த பார்வைக்கு அந்தப் பிரிவில் கடற்படை ஊழியர் ஒருவர் ஏதோவொரு பொருளைக் கையில் வைத்து உற்று நோக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. எவராயினும் அந்தக் கடற்படை அதிகாரியின் முன் அனுமதி இன்றி அவசர ஆயுத விநியோகப் பிரிவிற்குள் பிரவேசிக்க இயலாத கட்டுப்பாட்டு விதிகள் அக்கப்பலில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

அவ்விதமிருக்க, மற்றொரு கடற்படை ஊழியரால் எவ்விதம் அந்தப் பிரிவிற்குள் பிரவேசிக்க முடிந்ததென்ற சந்தேகம் அந்தக் கடற்படை அதிகாரியின் மனதில் எழுந்தது. எனவே, அது குறித்து உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கில் அவர் உடனடியாகக் கப்பலின் திடீர் நடவடிக்கைப் பிரிவின் அதிகாரியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அது குறித்து விசாரித்தார். அவ்விதம் கப்பலின் ஆயுத விநியோகப்பிரிவில் எவரையாவது கடமையில் அமர்த்தியுள்ளாரா என அந்த அதிகாரியிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது. ஆனால், அவ்விதம் எந்தவோர் ஊழியரையும் தாம் அங்கு கடமையாற்றுமாறு அனுப்பி வைக்கவில்லை எனவும், அவ்விதம் அவசர தேவை எதுவும் கப்பலில் ஏற்படவில்லை எனவும் மறு முனையில் இருந்து அவருக்குப் பதிலளிக்கப்பட்டது. இதனால் குழப்பத்திற்குள்ளான ஆயுதக் களஞ்சியப் பகுதிக்குப் பொறுப்பான அந்த அதிகாரி, உடனடியாக ஆயுத விநியோகப்பிரிவிற்குத் தாமே நேரடியாகச் சென்று அவதானிப்பது என்று முடிவெடுத்தார்.

### ஆவியின் நடமாட்டம்

அதன்படி, அவர் ஆயுத விநியோகப் பிரிவிற்குள் பிரவேசிக்க முற்பட்டவேளை அப்பிரிவின் மறுமுனையில் தாம் முன்னர் அவதானித்த கடற்படை ஊழியர் பெரிய பீரங்கிக் குண்டொன்றைச் சிரமத்துடன் தூக்கித் தள்ளுவண்டியில் வைத்து விட்டு தள்ளுவண்டியைத் தள்ளிச் செல்ல முயல்வதை அவரால் அவதானிக்க முடிந்தது. இதனால் பதற்றமடைந்த அந்தக் கடற்படை அதிகாரி கப்பலின் அபாய எச்சரிக்கை மணியை ஒலிக்கவைத்தார். அந்த அபாய எச்சரிக்கை மணியோசை கேட்டு கப்பலின் ஏனைய பிரிவுகளில் கடமையில் ஈடுபட்டிருந்த அனைத்து ஊழியர்களும் உஷாரடைந்தனர். ஆனால், ஒரு சில நிமிடங்களில் அந்தச் சம்பவத்தின் மர்மம் துலங்கியது. உண்மையில் அந்த ஆயுதக் களஞ்சியப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி நம்பிய விதத்தில் எந்தவொரு கடற்படை ஊழியரும் ஆயுத விநியோகப் பிரிவிற்குள் பிரவேசிக்கவில்லை என்பதும், அவ்விதம் பீரங்கிக் குண்டொன்றைத் தள்ளு வண்டியில் வைத்து எடுத்துச் செல்ல முயற்சிக்கவில்லை என்பதும் தெளிவாகியது.

நடந்தது இதுதான்,

உண்மையில் அந்த அதிகாரி கண்டது கடற்படை ஊழியர் ஒருவரையல்ல. கடற்படை ஊழியரொருவரின் ஆவியின் நடமாட்டமே அந்த அதிகாரியை அவ்விதம் குழப்பமடைய வைத்துள்ளது என்பது பின்னர் நிரூபணமாயிற்று.

இந்த யூ.எஸ்.எஸ். ஹொனட் என்ற கப்பலில் அதற்கு முன்னரும் பல தடவைகள் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்பதை அக்கப்பலில் தொடர்ந்து பல காலம் சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய பல ஊழியர்களும் அதிகாரிகளும் தெரிவித்ததை அடுத்து அந்தக் கப்பலின் ஆயுதக் களஞ்சியப் பகுதிக்குப் பொறுப்பான அதிகாரியின் மனம் சமாதானமடைந்தது.

பொதுவாக, நீண்ட கடற்பயணங்களை மேற்கொள்ளும் இத்தகைய கப்பல்களில் அடிக்கடி இவ்வகையான சம்பவங்கள் நடைபெறுவதுண்டு என்பதை வரலாற்றுத் தகவல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. தாம் கடமையாற்றும் கப்பலில் இத்தகைய ஆவிகள் உலாவுவது பற்றிக் கேள்விப்படும் வேளை கப்பலின் பல்வேறு பகுதிகளில் இரவுவேளையில் கடமையில் ஈடுபடும் ஊழியர்கள் அதிர்ச்சியும் அச்சமும் அடைவது வழக்கமெனவும் கூறப்படுகின்றது.

### கப்பலின் வரலாறு

அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான பெரிய கப்பல்கள் வரிசையில் யூ.எஸ்.எஸ். ஹொனட் என்ற அந்தக் கப்பலும் ஒன்றாகும். 40 ஆயிரம் தொன் நிறையுள்ள அந்தப் பாரிய கடற்படைக் கப்பலின் மேற்றளத்தில் ஒரே சமயத்தில் 125 தாக்குதல் விமானங்களை நிறுத்திவைக்கும் வசதி உள்ளது. இந்தக் கப்பலின் நங்கூரத்தின் நிறை மட்டும் 30 ஆயிரம் இறாத்தல் என்பதிலிருந்து அதனது தோற்றத்தையும் விசாலத்தையும் உணர்ந்து கொள்ள இயலும். ஏறக்குறைய 1500 பேர் வரையில் ஒரே சமயத்தில் இக்கப்பலில் பயணம் மேற் கொள்ளத்தக்க வகையில் இக்கப்பலில் அவசியமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று கடற்பயணங்களின் போது இத்தகைய கப்பல்களில் அடிக்கடி ஆவிகளின் நடமாட்டம் அவதானிக்கப்படுவது வழமையாயினும், இக்கப்பலில் இருபதிற்கும் மேற்பட்ட ஆவிகள் அடிக்கடி உலாவுவது மட்டுமல்லாது அவை கப்பலில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் கடற்படை வீரர்கள் என்ற பேதம் எதுவுமின்றி சகலருக்கும் பலதரப்பட்ட இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருவதாகவும் இந்தக் கப்பலில் பணியாற்றிய அனுபவம் கொண்ட பலர் தெரிவித்துள்ளனர். இக்கப்பலில் பற்பல சமயங்களில் இடம்பெறும் ஆவிகளின் நடமாட்டம் குறித்து நீண்ட வரலாறு உண்டு.

'யு.எஸ்.எஸ்.ஹொனட்' என்ற இந்தக் கப்பல் 1968 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு அமெரிக்கக் கடற்படையின் பாவனைக்கென ஒப்படைக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை இந்தக் கப்பல் லட்சக் கணக்கான மைல்கள் உலகின் அத்தனை சமுத்திரப் பரப்பிலும் பயணங்களை மேற்கொண்டு முடித்துள்ளது. அத்தகைய பயணங்களின் போது பல சந்தர்பங்களில் இக்கப்பல் பல இயற்கை அனர்த்தங்களில் சிக்கி மீண்டுள்ளது. அது மட்டுமின்றி, பல சந்தப்பங்களில் வேற்றுக் கப்பல்களின் தாக்குதல்களுக்கும் உட்பட்டுப் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இயந்திரக் கோளாறு, பாறைகளில் மோதுவதால் ஏற்படும் சேதம் போன்றவற்றுக்கு இக்கப்பல் ஒரு சில சந்தர்ப்பங்களில் முகங் கொடுக்க நேர்ந்துள்ளது.

இத்தகைய இயற்கை மற்றும் எதிர்பாராத திடீர்ச் சேதங்கள் என்பவற்றின் காரணங்களால் இக்கப்பலில் பயணம் செய்த ஊழியர்கள் மற்றும் கடற்படை வீரர்கள் உயிரிழக்கவும் நேர்ந்துள்ளது. அவைதவிர, விரக்தி, ஏமாற்றம் போன்ற காரணங்களால் அவர்களில் ஒரு சிலர் கப்பலிலேயே தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அவ்விதம் கப்பலில் பயணிக்கும் சமயம் அவலமரணம் மற்றும் தற்கொலை போன்ற சம்பவங்களில் மரணமுற்ற கடற்படையினர் ஆவியுருவில் அக்கப்பலில் அடிக்கடி தோன்றி உலாவுவதாக ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'டேவிட் ரீவன்சன்' என்பவன் முன்னர் 'யு.எஸ்.எஸ்.ஹொனட்' என்ற இக்கப்பலில் கடமையாற்றிய ஒரு கடற்படைச்சிப்பாய் ஆவான். வழமை போல் அன்றும் அவன் தனது கடமையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கப்பலின் கீழ்த் தளத்தில் கப்பலை சரியான திசைக்குச் செலுத்தும் சுங்கான்பகுதியில் தனியொருவனாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த சமயம் அவனுக்கு விசித்திரமானதோர் அனுபவம் வாய்த்தது. எங்கும் நிசப்தம் நிலவும் நள்ளிரவு வேளை அது. கப்பலின் எஞ்சின் பகுதியில் இருந்து எழும் சீரான ஒலி மட்டுமே வெளிவந்து கொண்டிருந்த அந்தச் சூழ்நிலையில் தனக்கு முன்னாலிருக்கும் சுங்கான் பகுதியில் திடீரென மற்றோர் உருவம் தென்படுவது அவனது கூரான பார்வையில் தட்டுப்பட்டது. இதனால் சற்றுக் கலவரமடைந்த அவன், அது குறித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஓரிரு நிமிடங்கள் கண்களை அகற்றாது உன்னிப்பாக அந்த உருவத்தை அவதானித்தான்.

### சீருடையில் ஆவி

சந்தேகமில்லை, தனது இருக்கைக்கு முன்னால் ஓரிரு மீற்றர்கள் தூரத்தில் அந்த உருவம் உட்கார்ந்திருந்ததை, அதுவும் கடற்படை வீரர் ஒருவனின் சீருடையில் உட்கார்ந்திருந்ததை அவனால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

எதற்கும் முயன்று பார்ப்போமே என்ற எண்ணத்தில் அந்த உருவத்தை நோக்கிக் குரல் கொடுத்தான் 'டேவிட் ரீவன்சன்'. பதிலில்லை.

மீண்டும் மீண்டும் ஓரிரு தடவைகள் குரல் கொடுத்தும் அந்த உருவம் அசைவதாகத் தெரியவில்லை. இப்போது டேவிட் ரீவன்சனை அச்சம் பற்றிக் கொண்டது. தனது உடம்பிலுள்ள மயிர்க்கால்கள் அனைத்தும் குத்திட்டு நிற்பதை - தனது இதயம் அளவுக்கதிகமாக விரைவாக அடித்துக் கொள்வதை அச்சமயம் டேவிட் ரீவன்சனால் உணர முடிந்தது.

என்ன இருந்தாலும் ஒரு கடற்படை வீரனுக்கு இருக்க வேண்டிய துணிச்சல் அவனிடம் இருக்கத் தானே வேண்டும்.

முன்னோக்கிச் சென்று அந்த உருவத்தை அண்மிக்கும் தைரியம் வராத போதிலும் தனது இருக்கையை விட்டு சற்றுப் பின்னோக்கிச் சென்று கப்பலின் தொலைத் தொடர்பு அறையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள ரீவன்சனால் முடிந்தது.

கப்பலின் சுங்கான் அமைந்துள்ள பகுதியில் தான் காணும் உருவத்தைப் பற்றி ரீவன்சன் விவரித்த போது அவனுக்கு கிடைத்த பதில் ஒரு கணம் அவனது இரத்தத்தையே உறையவைப்பதாக அமைந்தது.

'அவ்விதம் எந்தவொரு கடற்படைச்சிப்பாயோ, கப்பல் ஊழியரோ சுங்கான் பகுதியில் இருக்கச் சாத்தியமில்லை. இது உன்னுடைய மனப் பிரமையே' என்பதே அவனுக்கு கப்பலின் தொலைத் தொடர்பு அறையில் இருந்து கிடைத்த பதிலாகும்.

உண்மையில் ரீவன்சன் கண்ட உருவம் பல ஆண்டுக்கு முன்னர் அந்தக் கப்பலில் கடமையாற்றிய சமயம் விபத்தொன்றில் சிக்கி கப்பலுக்குள்ளேயே உயிரிழந்த ரோஜர் மார்ட்டின் என்ற கடற்படைச் சிப்பாயின் ஆவியே ஆகும்.

### பெண் பணியாளர்களுக்குத் தொல்லை

1970 ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக அந்தக் கப்பலுக்குள் நிகழ்ந்த விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்த ரோஜர் மார்ட்டினது ஆவி அடிக்கடி இரவு வேளைகளில் அந்தக் கப்பலின் கீழ்த்தளத்திலும் மேற்தளத்திலும் உலாவியதைக் கப்பல் ஊழியர்கள் பல தடவைகள் கண்டுள்ளனர்.

எப்படியோ ரீவன்சன் ஏற்படுத்திய களேபரத்தால் உஷாரடைந்த ஏனைய ஒரு சில கப்பல் ஊழியர்கள் ரீவன்சனை அழைத்துக் கொண்டு ரீவன்சன் தெரிவித்த அந்த இடத்தை துணிச்சலுடன் நெருக்கிச் சென்ற போது அந்த உருவம் அவர்களது கண்முன்னாலேயே காற்றில் மறைந்து போனது. அந்தவகையில் அந்தக் கப்பலின் கடமையாற்றிய வேளையில் அகாலமாக உயிரிழந்த அந்தக் கப்பல் ஊழியர்களில் ரோஜர் மார்ட்டின் 38 ஆவது நபராவார்.

'யு.எஸ்.எஸ்.ஹொனட்' கப்பலில் அடிக்கடி உலவி கப்பலில் பயணம் மேற்கொண்டோரைச் சிரமங்களுக்கு உள்ளாக்கிய இத்தகைய ஆவிகளில் மிகப் பயங்கரமாகவும் ஆக்ரோசமாகவும் செயற்பட்ட ஆவி 'ஸ்ரீவன் சகோ' என்பவனது ஆவியாகும். அது அடிக்கடி அக்கப்பலில் பயணித்த கடற்படையினரின் அறைகளுள் அவர்கள் தூங்கும் சமயங்களில் புகுந்து அவர்களது போர்வைகளை இழுத்தெறிந்து தொல்லைகொடுப்பதை வழக்கப்படுத்திக்கொண்டிருந்தது. இந்த ஆவி பெரும்பாலும் பெண் கடற்படைச் சிப்பாய்கள் மற்றும் பெண் கடற்படை அதிகாரிகளின் அறைகளில் புகுந்து அவர்கள் தூங்கும்வேளைகளில் தொல்லை கொடுப்பது வழக்கமாயிருந்தது.

'ஸ்ரீவன் சகோ' என்ற அந்தக் கடற்படை அதிகாரி நீண்ட காலமாக 'யு.எஸ். எஸ்.ஹொனட்' கப்பலில் பணியாற்றி வந்துள்ளான். அவன் ஒரு கறுப்பினத்தவன். எப்போதும் பெண்களுடன் சகவாசம் வைத்துக்கொள்வதில் அவன் கடும் ஈடுபாடு காட்டி வந்துள்ளான்.

அதே 'யு.எஸ்.எஸ்.ஹொனட்' கப்பலில் பணியாற்றிய கடற்படை பெண் அதிகாரிமீது அவன் தீராத காதல் கொண்டு பெரும்பாலும் அவளையே சுற்றிச்சுற்றி வர ஆரம்பித்தான். ஆனால், அந்தப் பெண் கடற்படை அதிகாரியோ கறுப்பினத்தவனான 'ஸ்ரீவன் சகோ'வின் காதலை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவன் பல தடவைகள் அவள் மீதான தன்து தீராக் காதலை அவளுக்குத் தெரிவித்து தன்னை மணந்துகொள்ளுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டபோதிலும் அவள் தயவு தாட்சணியம் இன்றி அக்கோரிக்கையை ஏறக மறுத்து விட்டாள். இதனால் மனமுடைந்த 'ஸ்ரீவன் சகோ' ஒருநாள் அக்கப்பலிலேயே தற்கொலை செய்து கொண்டான். அவன் அவ்விதம் பரிதாபகரமாக தற்கொலை செய்து உயிர் விட்ட போதிலும் அவனது ஆவி அந்தக் கப்பலிலேயே சுற்றிச்சுற்றி வர ஆரம்பித்தது. அந்தச் சோகமயமான சம்பவம் இடம்பெற்ற நாள் முதல் 'ஸ்ரீவன் சகோ' ஆவி பெண் கடற்படைச் சிப்பாய்கள் தூங்கும் அறைகளில் - குறிப்பாக அவனது காதலியான அப்பெண் கடற்படை அதிகாரி தங்கும் அறையுள் இரவு வேளையில் புகுந்து அவர்களது போர்வைகளை இழுத்தெறிந்து ஆர்ப்பாட்டம் செய்வதை வழக்கப்படுத்திக் கொண்டது.

**தமிழில்: வியெஸ்ரி**

'ஸ்ரீவன் சகோ'வின் ஆவியின் இத்தகைய ரகளையால் பல ஆண்டுகளாக பெண் கடற்படைச் சிப்பாய்களும் அதிகாரிகளும் இரவில் நிம்மதியாகத் தூங்கமுடியாது சிரமப்பட நேர்ந்தது. இவ்விதம் அக்கப்பலில் கடமையாற்றிய சமயம் தற்கொலை செய்துகொண்டு அவலச் சாவைத் தழுவிய 'ஸ்ரீவன் சகோ' அக்கப்பலில் உயிரிழந்த நபர்களில் 41ஆவது நபராவார்.

'யு.எஸ்.எஸ்.ஹொனட்' கப்பலில் உலவிய ஆவிகளில் கப்பலின் மேற்தளத்தில் அடிக்கடி உலாவிய ஒருவனது ஆவி அக்கப்பலில் பணி புரிந்த ஊழியர்களின் பேச்சில் அடிக்கடி விமர்சிக்கப்பட்ட ஆவியாக அமைந்தது. அது 'கெனட் பாலட்' என்பவனது ஆவியாகும்.

### நம்பினால் நம்புங்கள்

1972 ஆம் ஆண்டில் அவன் அக்கப்பலின் சுங்கான் அறையில் கடமையாற்றும் அதிகாரியாகச் செயற்பட்டு வந்தான். ஒருநாள் இரவு அவன் சுங்கான் அறையில் கடமையில் இருந்த சமயம் கப்பலைச் சரியானபாதையில் செலுத்தும் சுங்கான் கருவியின் அருகில் இறந்து கிடக்கக் காணப்பட்டான். அந்தவேளையில் இருந்து அடிக்கடி அவனது ஆவி சுங்கான் அறையிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கப்பலின் மேற்றளத்திலும் உலாவுவதை அக்கப்பலில் பணிபுரியும் ஊழியர்கள் பலர் நேரில் மிக நெருக்கத்தில் கண்டிருக்கின்றார்கள். ஆனால், ஊழியர்களைக் கண்ட மாத்திரத்திலேயே கெனட் பாலட்டின் ஆவி எந்தவித ஆர்ப்பாட்டமும் செய்யாது தூர விலகி காற்றில் கலந்து மனிதர்களது பார்வையிலிருந்து மறைந்து சென்று விடுவதாக அந்த ஆவியை நேரில் கண்ட ஊழியர்கள் திருப்திப்பட்டுக் கொண்டனர்.

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் ஆவிகள் பற்றிய நம்பிக்கை பொய்யானது என நிரூபிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இன்னும் உலகின் கணிசமான மக்கள் மத்தியில் இந்த ஆவிகள் பற்றிய உறுதியான நம்பிக்கை நிலவி வருகின்றது என்பதே யதார்த்தமாகும். விஞ்ஞானத் துறையில் பற்பல சாதனைகள் புரிந்த புத்திஜீவிகளுக்கும் கூட இன்னும் உலகின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்று வரும் இத்தகைய ஆவிகள் நடமாட்டம் குறித்த நிகழ்வுகள் புரியாத புதிராகவே ஆகியுள்ளன. ✱

# பெண்களும்... தொழில் நிலையும்...

நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களுக்கு இது ஒரு சிறந்த காலம் என்றே சொல்ல வேண்டும். தலைமைப் பண்புகளும் நிர்வாகத் திறமையும் கொண்ட பெண்களுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் தேவை அதிகரித்து வருகிறது. அதே சமயத்தில் தங்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறும்



போது உரிய அங்கீகாரத்தை சம்பாதிப்பதிலும் சொந்த வாழ்க்கைக்கும் செய்தொழிலுக்கும் சமன்படுத்திக் கொள்வதிலும் அவர்கள் கடுமையான சவால்களைச் சந்திக்க வேண்டிய சூழலே இன்னும் உள்ளது.

சமீபத்தில் நிறுவனங்களில் பணிபுரிவோரிடம் ஆய்வு நடத்திய நிறுவனம் ஒன்று பின்வரும் ஆய்வு முடிவுகளைத் தெரிவிக்கிறது:

1. ஆண்கள் கொடுக்கப்பட்ட பணியினை நிறைவேற்றுவதிலும் மொத்த நோக்கத்திலும் கவனம் செலுத்தும் அதேவேளையில், பெண்கள் குழு உருவாக்கத்திலும் குழு உறுப்பினர்களிடையே நல்லுறவு மற்றும் ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

2. அநேக பெண் பணியாளர்கள், சக ஆண் பணியாளர்களை விட தாங்களே சிறந்த குழு மனப்பான்மை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (பாதிக்கும் மேற்பட்ட சக ஆண் பணியாளர்கள் இக்கூற்றை மறுத்துள்ளனர்)

3. பெண் மேலாளர்கள் பணியிடங்களில் சமவாய்ப்பு மறுக்கப்படும் விடயத்தில் கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

4. உயர் மேலாண்மைப் பதவிகள் என்று வரும்போது ஆண்களை விட



பெண்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுவதாக அறுபது சதவீதத்திற்கும் மேற்பட்ட பெண் பணியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

5. முக்கியப் பணிகளைப் பொறுத்தவரை ஆண்களே அதிகம் விரும்பப்படுவதாக வும், முக்கிய பொறுப்புகளை வகிப்பதில் பெண்கள் இன்னும் பாரபட்சத்துடனே நடத்தப்படுவதாக வும் பெரும்பாலான பெண் பணியாளர்கள் கருதுகின்றனர். ஒரு ஆண் பணியாளரும் பெண் பணியாளரும் செல்லும்போது ஆணைத் தலைவரென்றும் பெண்ணைத் துணைபுரிபவர் என்றும் தன்னிச்சையாகப் புரிந்து கொள்ளும் நிலை இன்னும் சமூகத்தில் நீங்கவில்லை.

6. 65 சதவிகித ஆண் பணியாளர்கள் பணியிடத்தில் பெண்களைத் தலைவராக ஏற்றுக் கொள்வதில் எந்தத் தயக்கமும் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

7. பெண்கள் தங்கள் குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகக் கண்டறியப்பட் டுள்ளது. எனவே, வேலைக்கும் வீட்டிற்கும் சமரசம் செய்து கொள்வது அவர்களுக்குப் பெரும் சவாலாக உள்ளது. அது போன்ற சந்தர்ப்பங்களில் மிகுந்த சிரமத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக 72 சதவிகித பெண்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். குடும்பப் பொறுப்புகளின் காரணமாகப் பணி லட்சியங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாகத் பெரும்பாலான பெண்கள் கருதுகின்றனர். சில சமயங்களில் தொழில் இலக்குகளைத் தள்ளிவைத்து விட்டு பளு குறைவான பணிகளை ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தமும் குழந்தை பெறுவதற்காக முடிவுகளை மேற்கொள்வதில் தாமதமும் உண்டாவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தகுதிக்கு முதலிடம் கொடுக்கும் நவீன தொழில்நுட்ப நிறுவனங்களில் பெண்கள் உயர்ந்த பதவிகளை வகிக்க முடிகிறது. முன்னணி கணனித் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் முதல்வராக இருக்கும் அருணா ஜெயந்தி தொழில் நுட்ப உலகைப் பொறுத்தவரை பெண்களுக்கென்று தனியான தடை என்று ஒன்றும் இல்லை என்று கூறுகிறார். முன்னணி கணனி



நிறுவனமான (TCS)இல் 10 ஆண்டுகள் உட்பட பல முன்னணி கணனி நிறுவனங்களில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாகப் பணியாற்றும் இவர் இத்துறையில் தடைகள் இருப்பதாகக் கருதினால் அது அப்பெண்களின் மனத்தில் தானே தவிர தொழிலில் அல்ல என்கிறார்.

ஆனால், வங்கி, காப்பீடு அல்லது உற்பத்தித் துறை போன்ற பரவலான துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கு இதேபோன்ற சூழல் இல்லை. இத்துறையில் தகுதியுள்ளவர்கள் முன்னேற்றம் பெறும் கலாசாரம் இல்லை என்றும், தொழில் முன்னேற்றம் என்பது உங்களுக்கு யாரைத் தெரியும் என்பதையும் உங்களது காய் நகர்த்தும் திறனையும் பொறுத்த விடயமாகி விட்டது என்பது அவர்கள் கருத்தாக உள்ளது.

(நன்றி : வெப் உலகம்)

---

# உறுதியுடன் செயற்படுவோம் உரிமைகளை வென்றெடுப்போம்

இப்பொழுது பெண்களின் தொழில் முன்னேற்றம் என்பது நாம் நினைத்தும் பார்க்காத வகையில் வளர்ச்சியடைந் துள்ளன. அலுவலகப் பணிகளில் மட்டுமல்ல உடல் வருத்தி உழைக்கும் தொழில்களிலும் பெண்கள் தம்மை உள்நுழைத்து திறமையைக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

தச்சுவேலை, மேசன் போன்ற கடின வேலைகளைக் கூட செய்வதற்கு பெண்கள் துணிந்து விட்டார்கள்.

ஆயினும், இன்றும் கூட தொழிலில் ஈடுபடும் பெண்கள் அதிகம் அடங்கிப் போய் – தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் அக்கறையற்று – இருக்கின்றார்கள்.

அலுவலகத்திலோ, தொழில் நிலையத்திலோ பணிபுரியும் பெண்களிடம் தங்கள் உரிமைகளை நிலைநாட்டும் உறுதி அவசியம். மாறிவரும் உலக நடப்புகளுடன் தங்கள் வாழ்வைக் கொண்டு செலுத்து வதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் உறுதியைக் கடைப்பிடிப்பது கட்டாய தேவை.

உறுதியைக் கடைப்பிடிப்பதென்பது எந்த நேரமும் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு, சிடுசிடுவென இருக்குமாறு கூறவில்லை. உறுதியாகப் பேசுவதென்பது மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுக்காது முரண்பட்டு பேசுவதல்ல.

நாம் ஒரு விடயத்தைப் பற்றிப் பேசும் போது அது சரியானதா என யோசித்துப் பேச வேண்டும். நமது சொந்த விடயமெனில் உரிமையை நிலை நாட்டும் வகையில் பேசவேண்டும்.



அதற்காக மற்றவர்களின் உரிமையில் வீணாகத் தலையிட்டு அவர்களின் உரிமையையும் பறிக்க முயற்சிப்பதாக உங்கள் பேச்சு அமையக் கூடாது.

நாம் உறுதியாகவும் அதேசமயம் சரியானதாகவும் பேசினாலும் பலர் நம்மை சண்டைக்காரர் என்றே மதிப்பிடலாம். அதற்காக நாம் மிகவும் அடங்கிப் போயிருத்தல் எம்மை முன்னேற்றுவதற்கான வழியாக இருக்காது.

மற்றவர் சொல்வதை எல்லாம் நாம் ஏற்றுக்கொண்டால் அவர்களால் விரும்பப்படுவோம். அவர் சொல்வது பிழையான கருத்தாக இருந்தாலும் கூட 'ஆமாம் சாமி' போட்டால் அவர்கள் மட்டில் நாம் மதிக்கப்படுவோம். அது மிக இலகுவான விடயமும் கூட. உறுதியாக இருப்பதென்பது எதிலும் தனிப்பட்ட நம்பிக்கையை வெளிப்படுத்துவது. சரியானது என்று உறுதியாகத் தெரியும் விடயங்களில் நமது நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நாம் செயற்படாது ஆமாம் சாமிகளாக இருப்போமானால் பல உரிமைகள் தம்மை விட்டுத் தொலைதூரம் சென்றுவிடும். மற்றவர்கள் தம்மை எளிதாகவும் இயல்பாகவும் ஏமாற்றக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.

தொழில் செய்யும் இடத்தில் பிரச்சினை எதற்கு என்று அநேகமானோர் ஒதுங்கிப் போகின்றனர். அவ்வாறு பிரச்சினைகளைச் சந்திக்கப் பயம் கொள்பவர்களுக்கு உரிமைகள் வெகுதூரம்.

– சம்யுக்தா.

## பெண் நெஞ்சம்

பெண்ணே நீயும் அன்பை
கொடுப்பதில்; கடலாயிரு!
பூமிக்கு வெண்ணிலாப் போல்
உறவுக்கு விளக்காயிரு!
மண்ணைவிட்டுப் பறக்கும்
பறவையைப் போல்; மூடத்தனமின்றி
சாதனை படைக்கக் கற்றுக்கொள்!
விழிகள் தேடும் காட்சியைப் போல்
நெஞ்சத்தில் தழுவும் நட்புக்காக விழித்திரு!
வாசத்துடன் சேர்ந்த மலரைப் போல் நீயும்
புன்னகையுடன் கலந்துறவாடு!

- த.பிரிபி, ஏழாலை.

---



## நீ

அன்பென்ற வார்த்தைக்கு
அர்த்தம் நீ
ஆனந்தம் என்பதையெனக்கு
தந்தவள் நீ
இன்னல்கள் பலவற்றைக்
களைந்தவள் நீ
ஈடில்லா நட்பிற்கு
உதாரணம் நீ
உன்மனதன்போடு எனை
உணர்ந்தவள் நீ
ஊக்கியாய் எனதருகேயென்றும்
இருந்தவள் நீ
என்றும் என் நினைவில்
வாழ்பவள் நீ
ஏனின்று விலகிப்போய்
இருக்கிறாய் நீ
ஐயமென்பது என்மேல் என்றும்
கொள்ளாதவள் நீ
ஒன்றோடு ஒன்றாய் என்னிதயம்
கலந்தவள் நீ
ஓராயிரம் உறவிற்கு
ஒப்பானவள் நீ
ஔடதமாய் என் துன்பம்
தீர்த்தவள் நீ
அஃதே எப்போதென் வேதனை
தீர்ப்பாய் இனி (நீ)!

இரையவன்,
மீசாலை.

பெண்களின் திறமைகளை
வெளிப்படுத்துவதற்கும் அவர்களின்
எண்ணங்களைப் பிரதிபலிப்பதற்குமான ஒரு திறந்த
களமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதே 'திலகம்' பகுதி.எனவே,
சகோதரிகளே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கருக்களுக்கு
உருக்கொடுத்து கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள் போன்ற
ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். இறுக்கமாகவும், சுருக்கமாகவும்
தரமாகவும் அமையும் உங்களின் ஆக்கங்கள் இந்தப் பகுதியை
அலங்கரிக்கும்.
அனுப்பவேண்டிய முகவரி:- 'திலகம்'
சூரியகாந்தி, உதயன் ஞாயிறு சிறப்பம்சம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 'கோழி கடத்தல்' ஸ்ரீலங்காவின் புதிய கண்டுபிடிப்பு!

பொதுவாக இலங்கைத் தீவில் என்ன கோளாறு வந்தாலும் அதற்குக் காரணம் தமிழர்களே எனக் கண்ணை மூடிக்கொண்டு கூறும் வழக்கம் சிங்களவர்களிடம் உண்டு. இது அவர்களுக்குப் பரம்பரையினூடாகக் கடத்தப்பட்ட வியாதி. அரசியல் வாதிகளிலிருந்து பத்திரிகையாளர்கள் வரை எவருமே இதற்கு விதிவிலக்கல்ல.

இந்த மாற்றமுடியாத புற்றுநோயின் ஒரு வெளிப்பாடே இந்தியாவிலிருந்து படகுகளில் கடத்திக்கொண்டுவரப்படும் கோழிகள் மூலம் இலங்கையிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பறவைக் காய்ச்சல்நோய் தொற்றக்கூடிய அபாயம் இருப்பதாக வெளிவந்துள்ள கூற்று அமைந்துள்ளது. இது தொடர்பான செய்தியொன்றினை றொய்ட்டர் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் அமரசேகராவே இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார். அவரது பேட்டியில் 'இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இடம்பெயரும் அல்லது கடத்தப்படும் பறவைகள் முதலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கே வந்து சேர்கின்றன. ஆனால், அப்பகுதிகளில் நாம் மிருக வைத்தியங்களை மேற்கொள்ளமுடியாத ஒரு நிலை இருக்கிறது. இப்போதுள்ள நிலைமையின்படி பறவைக்காய்ச்சல் நோய் இலங்கையிலும் தொற்றுவதற்கான சாத்தியங்கள் கூடுதலாக இருக்கின்றன' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாகத் தமிழர்கள் தமது பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியின்போது 'பஞ்சதந்திரக் கதைகள்' போன்றவற்றையே கற்பிப்பதுண்டு. மூளை விருத்தியைக் கருத்திற்கொண்டே இவ்வாறான கதைகளைச் சொல்வதுண்டு. ஆனால், 'மாதன மூத்தர்' போன்ற கதைகளையே பெரும்பாலும் சிங்களக் குழந்தைகளுக்குச் சுவையுடன் சொல்லிக் கொடுப்பதுண்டு. இவற்றின் வெளிப்பாடே பணிப்பாளர் அமரசேகராவின் கருத்து என்றெண்ணி இதனைப் புறந்தள்ளி விடவேண்டியதுதான்.



இந்தியா - தமிழர்கள் தொடர்பாக இப்போதுதான் சிங்களவர்கள் 'அதி புத்திசாலித்தனக் கருத்துகளை வெளியிடுகின்றார்களென்றில்லை. 1970 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணிக் கட்சி ஆட்சியில் இருந்தபோது கடுமையான உணவுத் தட்டுப்பாடு நிலவியது. மாவட்டத்திற்கு மாவட்டம் குறிப்பிட்ட அளவுக்குமேல் அரிசி கொண்டுபோக அனுமதியில்லை. பாணுக்குக் கூட இரவிரவாக வரிசையில் நின்றே ஒன்றோ இரண்டோ இறாத்தல் பாண் பெறமுடியும். அப்போது கிளிநொச்சித் தொகுதி யாழ்.மாவட்டத்தினுள் அடங்கியிருந்தது. (இப்போதும் தேர்தலில் யாழ்.மாவட்டத்திற்குள்தான்) மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசி கொண்டு போகத்தானே தடை - ஏன் ஒரே மாவட்டத்தினுள் இருக்கும் கிளிநொச்சியிலிருந்து மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு அரிசியைக் கொண்டுசெல்லத் தடை விதிக்கிறீர்கள் என்று அடிக்கடி கேட்கப்படுவதுண்டு. ஒரு சமயம் அப்போதைய விவசாய அமைச்சரான ஹெக்டர் ஹொப்பேகடுவ ஒரு நூதனமான பதிலைச் சொன்னார். 'வல்வெட்டித்துறையிலிருந்து இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுகிறது. அதுதான் நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்குக் காரணம்' என்றார். இந்தப் 'புத்திசாலி' தான் பின்னர் 1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

இனவாதம் என்ற கண்ணாடியைச் சிங்களவர்கள் போட்டுக் கொண்டிருப்பதால்தான் அவர்களால் எந்தப் பிரச்சினையையும் சரியாக விளங்கிக் கொள்ள முடியாது என்பதற்கு ஹெக்டர் ஹொப்பேகடுவவின் கூற்றுக்கும் அமரசேகராவின் கூற்றுக்கும் இடையில் ஆயிரம் உதாரணங்களைக் கூறமுடியும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இந்தியாவிலிருந்து கோழிகளைக் கொண்டு வருவதைக் கண்டுபிடித்த அமரசேகராவின் கண்ணாடி, அவரது கூற்றில் உள்ள இன்னொரு விடயத்தைப் பற்றி ஏன் அலட்டிக் கொள்ளவில்லை?.

'அப்பகுதிகளில் (விடுதலைப் புலிகளின் பகுதிகளில்) நாம் மிருக வைத்தியங்களை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை இருக்கிறது' என்ற அவரது கூற்று எதைக் குறிக்கிறது. மிருகங்களிலும் தமிழ் மிருகம், சிங்கள மிருகம் என்றிருக்கிறதா? இப்பகுதிகளில் மிருக வைத்தியங்களை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது என்றால், அதற்கான தவறுக்கு அவரும் அவர் சார்ந்த சிங்கள அரசும் தானே காரணம்? தமது பகுதியில் மிருக வைத்தியம் மேற்கொள்ள அரச வைத்தியர்களுக்குத் தடை என்று விடுதலைப் புலிகள் சொன்னதாக எந்தச் செய்தியுமே வெளிவரவில்லையே?

(VIIபக்கம் பார்க்க)

---

# முகாமைத்துவத்தில் மன அமைதி...!

பாடசாலைகள் உட்பட அரசாங்க நிறுவனங்களில் வினைத்திறன் மந்தகதி அடைந்திருப்பது பற்றிய குற்றச்சாட்டுகள் பரவலாகக் கூறப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் வினைத்திறன் அதன் பணியாளர்களின் திருப்தியில்தான் தங்கி உள்ளது. பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான - திருப்திகரமான - சூழலை உருவாக்கிக் கொடுப்பது அந்த நிறுவனத்தை முகாமை செய்வோரின் முதற்பணி. இன்று அரச துறையில் அருகி வருகின்ற சிறப்பான முகாமைத்துவத்தை தூக்கி நிறுத்தக் கூடிய ஆலோசனைகளை உள்ளடக்கியது இந்தக் கட்டுரை. கல்வி நிர்வாகத்தில் சேவை மூப்பும் பட்டறிவும் நிறைந்தவர் கட்டுரையாளர். அவர் கூறும் ஆலோசனைகள் சூரியகாந்தியில் தொடராக வெளிவருகின்றன.

## நிறுவன முகாமைத்துவம் சில ஆலோசனைகள் 05

நடராஜா அனந்தராஜ் (எம்.ஏ.)

பயன்பாட்டிற்கு உதவாத பொருள்களையும் கழிவுகளையும் அதற்கென வைக்கப்பட்ட கழிவுத்தொட்டிகளில் அல்லது பெயர்ப்பலகை பொருத்தப்பட்ட இடங்களில் போடுதல்.

- அலுவலகங்களில் கூட கசக்கிய காகிதங்களை மூலையில் எறிந்து விடுவார்கள். இதற்காக அலுவலகங்களில் கூடைகளை வைக்கலாமே?

- எமது நாட்டைப் பற்றி வெளிநாட்டவர்கள் சுட்டிக்காட்டும் ஒரு முக்கியமான குறைபாடாக உள்ளது. எமது வீடுகளில் சேரும் குப்பைகளையும் கழிவுகளையும் வீதிகளில் வீசிவிடுவதையும் வாழைப்பழத்தோலைக்கூடத் தெருவில் போடுவதையும் அவற்றைப் பார்த்து மற்றவர்கள் கூட எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட முயற்சி செய்யாது கடந்து போவதையும் பார்த்திருக்கின்றோம்.

- இலங்கையை விட ஒரு காலத்தில் எல்லா விடயங்களிலும் பின் தங்கியிருந்த சிங்கப்பூர் இன்று தூய்மைக்குப் பெயர்பெற்ற ஒரு

### அதைக் கெடுக்கும் சூழலை தடுப்பது அவசியம்

நாடாகவும் விளங்குகின்றது. தெருவில் நடந்து போகும் பொழுது 'ரொபி' உறைகளை வீதிகளில் வீசி எறிந்தால் போதும், உடனடியாகக் காவல் துறையினரால் தண்டம் அறவிடப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முகாமைத்துவ ஒழுங்கு முறையிலும் பொருளாரத்திலும் மிகவும் பின்தங்கியிருந்த சிங்கப்பூரின் அன்றைய பிரதமராக இருந்த லீகுவான்யூ சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் இலங்கையைப் பார்த்து விட்டுக் கூறிய வார்த்தைகளை நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும்.

'எனது சிங்கப்பூரைக் கொழும்பைப் போல விரைவில் உருவாக்குவேன்...' என்று கூறியதுடன் நின்று விடாது அன்றைய பிரதமர் லீகுவான்யூ சொன்னபடி செய்து சிங்கப்பூரை மிகக் குறுகிய காலத்தில் அழகிய, தூய்மையான, பொருளாதாரத்தில் உயர்ந்த ஒரு தேசமாக உருவாக்கினார். அதற்குப் பின் பல ஆண்டுகளின் பின்னர் இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறிய வார்த்தைகள் இதற்கு எதிர்மாறாக இருந்தது.

'இன்னும் பத்து ஆண்டுகளில் ஸ்ரீலங்காவை சிங்கப்பூராக மாற்றுவேன்' என்று அவர் குறிப்பிட்டு 25 ஆண்டுகள் கடந்து போய்விட்டன. ஆனால், இன்றும்கூட எமது அரசோ அல்லது அரச அதிகாரிகளோ அல்லது மக்களோ தூய்மையைப் பேணுகின்ற ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த முன்வரவில்லை.

✱ சுத்தம் செய்யும் செயற்பாடுகளில் பாடசாலைகளில் உள்ள சகல அதிபர்களும் ஆசிரியர்களும் அலுவலர்களும் கூட்டாகப் பங்கு கொள்வதுடன் ஏனைய மாணவர்களையும் இதில் இயல்பாகவே செயற்படவைக்கவேண்டும்.

அப்பொழுதுதான் அலுவலகங்களும் பாடசாலைகளும் அவற்றினூடாக வீடும் நாடும் தூய்மையாகவும் அழகாகவும் இருக்கும்.

**கட்டம் 4 - செய்கெற்சோ (தரப்படுத்தி வைத்தல்)**

எமது சூழலிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள பொருள்கள் அனைத்தையும் முறையாகவும் சுத்தமாகவும் பேணும் பொழுது, வேலை செய்யும் எந்த நேரமும் மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படுகின்றது என்பது அனுபவத்தால் பெற்ற ஒரு உண்மையாகும்.

'Seiketso' என்ற யப்பானிய பதத்தின் கருத்துகளைக் குறிக்கும் 'தரப்படுத்தி வைத்தல்' என்பது முக்கியமான ஒரு முகாமைத்துவச் செயற்பாடாகும்.

இங்கு சுத்தம் என்பது பொருள்களின் தூய்மை என்பது மட்டுமன்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டவை போன்று -

✱ பொருள்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளுக்கேற்ப, தயாரிக்கப்பட்ட பொருள் பட்டியலொன்றை வைத்திருப்பதுடன், அவற்றின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகளுக்கேற்பவும் வடிவங்களுக்கேற்பவும் தரப்படுத்தி வைத்தல்.

✱ பெறுமதிக்கேற்ற முறையில் அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் வகைப்படுத்துதல்.

✱ தூரநோக்கு நிர்வாக முறையைச் செயற்படுத்துதல்.

✱ ஒவ்வொரு பொருளினதும் உபகரணத்தினதும் இயங்கும் முறைகளையும் அவற்றைக் கையாளும் முறைகளையும் எல்லோரும் அறியக்கூடிய வகையில் தயாரித்துக் காட்சிப்படுத்துதல்.

✱ ஒரு செயலைச் செய்து முடிக்கத் தேவையான நேரம், நிதி, தொழில் திறன், வெளியீட்டுத் திறன் என்பவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்துதல்.

✱ எப்போதும் பரிசோதிப்பதற்கான செவ்வை பார்க்கும் பட்டிய லொன்றைத் தயார் செய்து, அந்தப் பட்டியலின் படி வேலையைச் செய்யப் பழகவேண்டும். இதனால், காலதாமதமோ அல்லது ஒரு வேலையை நிறைவு செய்யாது விடுவதோ நீங்குவதால் ஒவ்வொரு பணியும் குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படும்.

இவ்வாறு உரிய பொருள்கள் அந்தந்த இடத்திலும் தூய்மையுடனும் பராமரித்து, இலகுவில் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் இருந்தால் ஒரு நிறுவனம் அல்லது பாடசாலையின் கவிநிலையும் (Climale) சூழலும் வேலைத்திறனும் மகிழ்ச்சியுடையதாக இருக்கும். ஏனெனில், குறிப்பிட்ட பொருள் அல்லது சேவை போன்றவை குறித்த இடத்தில் வைக்கப்படாது, வேறு இடங்களில் தவறுதலாக வைக்கப்படுமாயின், அவற்றை தேடுவதற்காக அதிக நேரம் எடுப்பதுடன் மன அபத்தமும் அமைதியின்மையும் ஏற்படுகின்றது.

இவ்வாறான மன அமைதியின்மையும் மன அழுத்தமும் ஏற்படுவதாலேயே ஒரு அதிபரோ அல்லது முகாமையாளரோ தனது நிறுவனத்தில் உள்ள பணியாளர்கள், அலவலர்கள், ஆசிரியர்கள் மீது எரிந்து விழுவதைக் காணமுடிகின்றது.

(வளரும்)

# இன்றே வேண்டும்!

சிறுவர்கள் நாட்டின் முதுகெலும்புகள். இவர்கள் வரு ங்காலச் சமுதாயத்தின் உறுதி மிக்க தூண்கள். இவர்களுக்குத் தேவை யான கல்வியும், உணவும், உடையும் அளிக்க வேண்டி யது பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.

இன்று உலகம் பல்வேறு துறைகளில் முன்னேறி விட்டது. எமது நாடும் கல்வி நிலையில் முன்னேறி விட்ட இக் காலகட்டத் தில் எம் நாட்டின் யுத்தம் காரணமாக சிறுவர் களாகிய எமது கல்விநிலை வெகுவாகப் பாதிப்படைகிறது. எமக்குக் கல்வி வேண்டும். நாம் நிரந்தரமாக எமது நாட்டில் வாழ வேண்டும். இதற்குச் சுதந்திரம் வேண்டும். இந்த யுத்தத் தால் பாதிப்படைவது சிறுவர்களாகிய நாமே.

நாம்எமது நாட்டிலும், எமது வீட்டிலும் நிம்மதியாகவும், சமாதானமாகவும், மனச்சாந்தியுடனும் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் நமது கல்வி சீர்பெறும். எம் கல்வியின் பாதையில் தடைக்கல்லாக இருப்பது எது? என்பதை உரியவர்கள் சற்று ஆராய வேண்டும். சிறுவர் உரிமைப் போராட்டம் வலுப்பெற்று விட்ட இந்நேரத்தில் சிறுவர்களாகிய நாம் ஏங்கி ஏங்கி எமது காலத்தைக் கழிக்கின்றோம்.

யுத்தத்தால் மரணித்துவிட்ட சிறுவர்கள் எத்தனை பேர். அங்கவீனமாக்கப்பட்ட சிறுவர்கள் எத்தனை பேர். சமாதானமின்றி இப்படியொரு யுத்தம் தொடர்ந்தால் எதிர்காலத்தில் சாதனையாளர்களை, விண்வெளி வீரர்களை, வைத்தியர்களை, ஆசிரியர்களை விரல்விட்டுத்தான் எண்ண வேண் டும். ஏன்? இராணுவ வீரர்களையும் விரல் விட்டுத் தான் எண்ணவேண்டும்.

நாம் கல்விமான்களாக வரவேண்டு மென்பதற்காகத் தான் இன்றைய அரச கல்விச்சட்டத்தின் புத்தகச் சுமை யினை எம் முதுகினில் சுமக்கின்றோம். இதன் பலனை எமது பெற்றோரும், நாமும் அனு பவிக்கவேண்டுமென் றால், நாட்டில் யுத்தம் வேண்டாம். ஏங்கி நிற்கும் சிறுவர் சமுதாயத்திற்காக நிரந்தர சமாதானம் எமது நாட்டிற்கு வேண்டும்.

எம்மைப் படிக்க வைக்க விரும்பும் பெற்றோர் எமது உயிரைக் பாதுகாப்பது எவ்வாறென்று புலம்புகிறார்கள். எனவே, நாம் எம் உடல், உள நலம் பாதிக்காமல் வாழ விரும்புகின்றோம். அதற்கு எம் நாட்டில் சமாதானம் வேண்டும். அது "இன்றே" வேண்டும்.

**சிறிபாஸ்கரன் தர்மினி**
தரம் -9, உடுவில் மகளிர் கல்லூரி

## உங்களின் கைவண்ணங்கள்



**சி.தினேஸ்சங்கர்,**
தரம் - 10ஈ,
யா/ கொக்குவில் இந்து கல்லூரி.




**கி.கிருஸ்ணவேணி,**
தரம் - 8ஏ,
யா/கோப்பாய் மாகவித்தியாலயம்.



**யோகராஜா அஜந்தன்,**
தரம் -1பி,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.

## யானையின் ஆயுள்

1. ஆபிரிக்க யானையின் ஒரு காது எடை 50 கிலோ.
2. ஆபிரிக்க யானையின் ஆயுள் 70 ஆண்டுகள்.
3. ஆசிய யானையின் ஆயுள் 78 ஆண்டுகள்.
4. நீர்யானையின் ஆயுள் 54 ஆண்டுகள்.
5. கடல் யானை என்றழைக்கப்படும் சீல் 5.5மீற்றர் நீளம் வளரக்கூடியது.

## வாழ்வில் இரண்டு

1. வருவதும் போவதும் - இன்பம், துன்பம்
2. வந்தால் போகதவை - புகழ்,பழி
3. போனால் வராதவை - மானம்,உயிர்
4. தானாக வருபவை -இளமை, முதுமை
5. அடக்க முடியாதவை - ஆசை, தூக்கம்
6. தவிர்க்க முடியாதவை - பசி, தாகம்
7. நம்மை விட்டுப் பிரியாதவை - பாசம், பந்தம்
8. அழிவைத் தருபவை - கோபம், பொறாமை
9. எல்லோருக்கும் சமமானவை - பிறப்பு, இறப்பு
10. கண்கண்ட தெய்வம் - மாதா, பிதா

**ஸ்ரீ.கௌசிகன், தரம் - 8 சி.**
யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி.

## தாயன்பு

ஈரைந்து மாதம் கருவறையில்
என்னைச் சுமந்தாய்
ஈன்றெடுத்த பின்னும்
கண்விழித்து என்னைக் காத்தாய்

உதிரத்தைப் பாலாக்கி - என்
உடலுக்கு ஊட்டம் தந்தாய்
நிலாச்சோறு நீயூட்ட - உன்
நிலாமுகம் பார்த்து
நான் உணவு உண்டேன்

என் பிஞ்சு விரல் நீ பிடிக்க - உன்
தயவில் நான் நடை பயின்றேன்
பள்ளிப் பருவம் வந்ததும்
படாத கஷ்டமெல்லாம்
பட்டு - என்னைப் படிக்க வைத்தாய்

பரீட்சை நெருங்கி வந்ததும் - உன்
பசி தூக்கம் மறந்து
என்னுடன் துணை இருந்தாய்
இன்னுமோர் ஜென்மம் இருக்கில்

உன் கருவில் மீண்டும் உருவாகி
உன்மடியில் தவழ்ந்திட
வரமொன்று தருவாயோ
என் தாயே!

**விதுர்ஷா பவளராசா,**
தரம் 10, தச்சந் தோப்பு- கைதடி.

## வேரில்லாத தாவரம்!

கடற்பாசிகளில் ஆயிரக்கணக்கான வகைகள் உள்ளன. அவற்றில் ஒரு வகை கடற்பாசிதான் படத்தில் இருப்பது. இதற்கு வேர் கிடையாது. பின், எப்படித்தான் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்படாமல் ஒரே இடத்தில் இருக்கிறது என்பது தான் ஆச்சரியமான விஷயம்.



இவை பெரிய பாறைகள், பெரும் கூழாங்கல் அல்லது பெரிய சிப்பிகளை தனது வேர் போன்ற அமைப்பைக் கொண்ட 'ஹோல்ட் பாஸ்ட்' எனப்படும் பகுதியில் இறுகப் பற்றிக்கொள்ளும். அதனால்தான் இவை அலைகளால் அடித்துக்செல்லப்படாமல் ஒரே இடத்தில் இருக்கிறது. ஆனால் இந்த 'ஹோல்ட் பாஸ்ட்' பகுதியால் தண்ணீர் மற்றும் உணவுப் பொருள்களை உறிஞ்சி உண்மையான வேர்கள் செய்யும் பணியை போல் செயற்பட முடியாது. ஆகக் குறைந்தது இறுகப் பற்றிக் கொள்ளத்தான் முடியும்.




## வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!

போட்டி இலக்கம் - 13



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரூ.150/=, ரூ.100=, ரூ.75 /= பெறுமதியான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும். 5ஆம் தரத்துக்கு உட்பட்ட சிறுவர்களே இப்போட்டி யில் கலந்துகொள்ளமுடியும். எங்கே முயன்று பாருங்கள்! கை வண்ணத்தைக் காட்டுங்கள்!!

*இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -*

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
*212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே : 222 5542*

*அனுப்பவேண்டிய முகவரி:-*
'வர்ணம் தீட்டுவோம்' - 13, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் -12இல் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் விவரங் கள் வருமாறு:-

- **முதலாம் இடம் :-**
  *யே.செபஸ்ரினா புனிதா,*
  *றோ.க.த.க.பாடசாலை, எழுவைதீவு.*
- **இரண்டாம் இடம் :-**
  *இராசயோகன் யமுனாவாணி, தரம் - 4ஏ*
  *மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.*
- **மூன்றாம் இடம் :-**
  **திலீபன் சுகிர்தன்,*
  *தரம் - 4ஏ,*
  *பரியோவான் கல்லூரி. யாழ்ப்பாணம்.*

## சிட்டுக்குருவியே...

சிட்டுச்சிட்டுக் குருவிக்கு கூடு இருக்கு
அது சொந்தமாக பறக்க - சிறகிருக்கு
பார்த்துப் பார்த்து ரசிக்க வானமிருக்கு
தத்தித் தாவி உண்ண பழமிருக்கு - அது
சுதந்திரமாக சுவாசிக்க- தென்றால் இருக்கு
கொஞ்சிக் குலாவி மகிழ பூஞ்சோலையிருக்கு
தாகம் தீரப் பருக நல்ல தேனிருக்கு
சின்னஞ் சிறு மானிட சிட்டுகள் எமக்கு
இவற்றை காட்டி ரசிக்க
சொல்லித் தருவாயா?

**- ஜெயன்**

## விடுகதைகள்

- பார்க்க அழகான பூ. கையில் எடுக்க முடியாத பூ. அது என்ன?
  **நெருப்பு**
- போட்ட இடத்தில் அடிபடுவான். கிடைத்த இடத்தில் கிழிபடுவான். அவன் யார்?
  **கடிதம்**
- வெயிலில் மலரும். காற்றில் உலரும். அது என்ன?
  **வியர்வை**
- வாயைத் திறந்த வாயாடி ஓயாமல் அழுகிறாள். அவள் யார்?
  **தண்ணீர்க் குழாய்**
- அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும். அது என்ன?
  **கரும்பு**
- அனலிலே பிறப்பான். ஆகாயத்தில் பறப்பான். அவன் யார்?
  **புகை**

சு.செல்வப்பிரியா, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,

# ஒரு பேய் பற்றிய கதை

எனது புதல்வன் மறுபடியும் அந்தக் கேள்வியை எழுப்பினான். அவன் குரலில் பயம், ஆச்சரியம். நம்பமுடியாத தன்மையா? .... இருக்கா? இல்லையா?

'அப்பா பேயென்ற ஒண்டு இருக்காப்பா?'

அவனுக்கு அடுத்துப் பிறந்தவளும், சகோதரன் என்ன கேட்கிறான். போயும் போயும் பேயைப் பற்றி கேட்கிறானே என்ற பயத்தில் அவனோடு ஒட்டியபடி நின்றாள்.

இருவருக்கும் இரண்டு வருடங்களே வித்தியாசம்.

'என்னப்பா பேசாமல் இருக்கிறியள்?'

'பேய் இருக்காப்பா?'

நேரமோ மாலைபோய் பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. மகனுக்கு என்ன சொல்வது?

'பேய் இருக்காப்பா?'

மகனோ ஆண்டு ஐந்து படித்துக் கொண்டிருக்கிறான். எங்கே இவன் பேயைப் பார்த்திருப்பான். அல்லது புலமைப்பரிசிலில் 'பேய்' பற்றி கேள்வி வருமெண்டு யோசிக்கிறானா?

பாடசாலையில் யார் பேயைப் பற்றி கதைத்து இருப்பார்கள்?

ஆசிரியர், மாணவர்கள், யாராவது தெரிந்தவர்கள் உறவினர்கள்...

பாவம் பள்ளி ஆசிரியர்கள் 'எங்கே பேயைப் பற்றி கதைக்க நேரமிருக்கின்றது. சில வேளை மாணவர்கள் படித்த கதைகளில், திரைப் படங்களில், கேட்ட கதைகளில்....' பேயைப் பற்றி அறிந்திருக்கலாம். இந்த வகையில் எனது பிள்ளைகள் பேயைப் பற்றிய அறிமுகத்தைப் பெற்றிருப்பார்கள்.

பேய் என்றால்... அது பயம் தரும் உருவமாகத்தான் இன்றுவரை சித்திரித்துக் கொண்டு இருக்கிறார்கள். பிள்ளைகளும் எங்கேயோ... பேய் பற்றி அறிந்து விட்டார்கள்.

அதுதான் இப்போது மகனுக்குப் பேய் பிடித்து ஆட்டும் நிலை...

யார் மூலம் இவர்கள் பேயைப் பற்றி அறிந்திருப்பார்கள் என அறிய கேட்டுப் பார்த்தால்

'சே.... என்ன அப்பா நீங்கள்... பேய்...'

'கொஞ்சம் பொறுங்கோ.... ஏன் பிள்ளையள் இருந்தாற்போல் பேய் பற்றி கேக்கிறியள்?'

மகனின் முகத்தில் பயக் களை தெரிந்தது. முகம் இறுகிக் காணப்பட்டது.

'அண்டைக்கு என்னோட படிக்கிற ரகுதான்... பேயைப் பற்றி கதைச்சவன்'

'என்ன கதைச்சவன்...?'

''பேய் கறுப்பில் இருக்காம்... வெள்ளையிலும் இருக்காம். அது ராவில வருமாம்... கால் இருக்காதாம். பெரிய நாக்கு கீழ நீண்டு தொங்குமாம்... வாயில இரண்டு கரையிலும் பல்லு இருக்குமாம்... தலையை விரிச்சுப்போட்டு கண்ணை உருட்டிக்கொண்டு வருமாம். உ....ண்...மை... யே... அப்பா?''

மகனோ இப்போது நெருங்கி வந்து என்னோடு ஒட்டியபடி இருந்தான்... இவனது பேய் பற்றிய கதையோடு.... குழம்பியபடி நின்ற மகளும் என்னோடு ஒட்டினாள்.

இருள் கருமையைக்

'உண்மையே அப்பா இப்படி இருக்கோ?'

மகனுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

குழந்தைகள் இந்த வயதில் அதிக கேள்வி கேட்பார்கள். கேள்வியால் குடைந் தெடுப்பார்கள். தெரியாத விசயங்களைத் துருவித் துருவி ஆராய்வார்கள். அவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவேண்டும். மறுக்கக்கூடாது, குழப்பக் கூடாது, பொய் சொல்லக் கூடாது, உண்மை சொல்ல வேண்டும்.

நான் என்ன பதில் சொல்ல....?

பேய் இருக்கா....?



நானும் அவனின் பருவத்தைக் கடந்து வந்தவன் தான். எத்தனை பேய்க் கதைகளைப் படித்து வந்துள்ளேன், கேட்டு வந்துள்ளேன். அம்மா, அப்பா மூலம் பல கதைகளைக் கேட்டு வந்துள்ளேன்.

இன்றுவரை எனக்கும் பேய் பற்றிய சந்தேகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

உண்மையா? பொய்யா?

புளிய மரத்தடிக்குப் போகக் கூடாது. பேய் பிடிக்கும். இரவில் கொள்ளிவால் பிசாசு துரத்தும். இந்தப் பரம்பரைக் கதைகளை விஞ்ஞானத்தில் விளக்கங்கள் தந்து 'பொய்யென' நிறுவினாலும் சில நேரங்களில்...

ஏற்றுக்கொள்பவர்கள் ஒருபுறம், ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஒரு புறம்.

காலங்கள் விரைந்து ஓடின... பேய் பற்றிய கதைகளும் பேய்போல் 'காலில்லாமல்' விரைந்து ஓடின.

மகனின் வயதில் நான் கேட்ட கதைகள்...

அப்பா தோட்டம் செய்யும் காலம் பொயிலைக்குத் தண்ணீர் விடும்போது அதிகாலை வேளைக்குப் போக வேண்டிய கட்டாயம். வெளியே 'கூப்பிடும் குரல்...' அந்தக் குரலுக்கு உரியவரோ... போய்க் கிணற்றடியில் பட்டையை விட்டுத் தண்ணீர் பாய்ச்சும் போது... பாத்திக்குத் தண்ணீர் விடும் ஆள் காணாமல் போய்விடும்... தேடிப் பார்த்தால் ... வந்தது பேய்தான் எனக் கதை வரும். இரத்தம் கக்கி இறக்கச் செய்த முனியாண்டி, மோகினிப் பிசாசு, இரத்தக் காட்டேறி...

ஆவியை துணைக்கு அழைக்கிறான்.

'இதுவும் ரகுதான் சொன்னவன்... ஆக்கள் செத்துப்போனால்... ஆவியாய் திரிவினமாம்... செத்த வீட்டில... எட்டுச் செலவுக்கு... சின்னாள்களை பக்கத்தில நிக்க விடமாட்டினமாம். கழிப்புக் கழிச்சுக் கொண்டு போகேக்க... ரகு போகப் பேசிச் கலைச்சுப் போட்டினமாம்'

மகன் சொல்லிவிட்டு அடக்கமாட்டாமல் சிரித்தான்.

தங்கச்சிக்கும் சிரிப்பு வந்திட்டுது. பேய் பற்றி கதைச்ச நேரதில அந்தச் சிரிப்பு...

'அப்பா கழிப்பு கழிச்சா... பேய் வராதேயப்பா?'

'நம்பிக்கையில செய்யினம்'

'அப்பு படிக்கிற நேரமாச்சு படிப்பம்'

எத்தனை விதமான பேய்கள். பாவம் எல்லாமே இரவில்தான் வருகின்றன. இரவில் சத்தமிடுகின்றன. இரவில் ஆர்ப்பாட்டம் செய்கின்றன . இரவில் அமைதியைக் குலைக்கின்றன.

மொத்தத்தில் சர்வ நாசம். அதுசரி, அவைகளுக்கு ஏன் அப்படியொரு கூட்டுறவு ஒற்றுமை.

இவைகள் பகலில் வந்தால் என்ன? பகலில் பயமுறுத்த முடியாதா? வெருட்ட முடியாதா? அல்லது அட, உவையே பேய்கள் என்று மக்களிடம் பயம் குறைந்து போய்விடுமா?

பகலில் பேய்த்தனமாகக் கூத்துக் காட்டினாலும் எத்தனை பேய்கள் வந்தாலும் ... மானிடர்கள் உங்களை நம்ப மறுத்து விடுவார்களா?

பேய்களுக்கும் 'ஐயோ... நாங்கள் சத்தியமாக இரவில் வரும் பேய்கள்தான்' என நிரூபிப்பது மிகவும் கஸ்ரமாகிப் போய்விடுமா...?

'என்னப்பா... ஒண்டும் சொல்லுறியள் இல்லை'

மகன் மறுபடி என்னை இழுத்தான்.

'அப்பு பொறுங்கோ... நான் பிள்ளையின்ர அப்பாவெல்லோ... நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் சரியான பதிலெல்லோ சொல்லவேணும்''

'அப்பா பேய்... ஆவி... எல்லாம் ஒண்டுதானே!'

'ஏனப்பு கேக்கிறியள்'

சே... ஏன் மகன் பேயோடு

'அப்பா நான் கேட்ட கேள்விக்கு...'

அவன் கோபத்துடன் சிணுக்கினான். பத்திரிகையிலும் பேய், ஆவி பற்றிய செய்திகள் வரத்தான் செய்கின்றன...

தொழில் பிரச்சினையா? தடங்கலா? முன்னேற்றம் இல்லையா? வாழ்க்கையில் வெறுப்பா? இவற்றிற்கு காரணம்... பேய், பிசாசு, பில்லி, சூனியம், செய்வினை... அத்தகை தடைகளையும் தாயத்து வாங்கிக் கட்டிக்கொண்டால் விடுபடலாம்.

எனவே, பேய் பற்றிக் கதைப்பது சாதாரண விடயமல்ல. பேய் என்ற சொல்லின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தாய் மொழியில் அதற்கு தகுந்த முன்னிடத்தை கொடுத்துள்ளனர்.

நமது அன்றாடப் பேச்சில் 'பேய்' என்பது பகலிலும் வந்து போய்க் கொண்டிருக்கிறது.

மகனுக்கு சந்தேகத்தை தீர்க்க வேணும். 'அப்பு பேய் பற்றின கதை கேட்டவுடன் எப்படி இருக்கு?'

'பயமாய்க் கிடக்கப்பா.... நாங்கள் பார்த்த சாமிப் படங்களில் பேயைக் காட்டேக்க பார்க்க ஏலாது. ராவில வாறது... சத்தம் போடுறது... ஆக்களைப் பிடிக்கிறது. இனி ராவில 'சூ...வுக்கு போகேக்க அப்பாவும் என்னோட கூட வரவேணும்'

மகள் என் கைகளைப் பிடித்தாள். கண்களில் மருட்சி கலக்கம்.

'சீச்சீ... உப்பிடி பயப்படக்கூடாது. உது யார் சொன்னது... போயாவது ஆக்களை பிடிக்கிறதாவது. உது விசர்க்கதை... ரகு பிள்ளையை நல்லா வெருட்டிப் போட்டான்.... பயப்படக் கூடாது.

'அவனப்பா... வாயை ஆவெண்டு.... பல்லைக் காட்டி... நாக்கை தொங்கப் போட்டு.... பார்க்க பயமப்பா'

அவன் உடல் நடுங்கிக் குலுங்கியது. 'சே... ரகுவுக்கு வேற வேலையில்லையோ... வீட்டைபோய் ஒருக்கா சொல்லத்தான் வேணும். பாடசாலைக்கு வந்தா படிச்சுப்போட்டு போறதுக்கு சும்மா 'பேய்கதை கதைச்சுக் கொண்டு....'

நான் உரத்து சத்தம் போட்டேன்.

மகனும் பயந்து விட்டான்.

தேவையில்லாமல் பேய்க் கதை தொடங்கி கோஷ்டி மோதல் வந்தவிடுமோ என யோசித்தேன். எனது கத்தலுடன் மனைவி இரவுச் சமையலைக் கைவிட்டு எங்களிடம் வந்தாள்.

''என்னப்பா உங்களுக்கு 'குளறி' ரத்தினத்தின்ர வியாதி வந்திட்டுதோ.... அவன்தான் குடிச்சுப்போட்டு இராவில குளறிக்கொண்டு திரியிறவன்... நீங்களேன் இப்ப பேய்க் கத்து கத்துறியள்''

மனைவி கோபமாக இருந்தாள்.

மகன் படபடவென கதைத்ததைக் கூறினான்.

'அட அவன் சும்மா பகிடிக்குச் சொல்லி இருப்பான்... போய்ப் படியுங்கோ... பேய், பிசாசெண்டு ஒண்டுமில்லை. உங்களுக்கும் தலைக்குள்ள ஒண்டுமில்லை. பிள்ளையளைப் படிக்க விடுறதுக்கு... சும்மா...'

'பொறப்பா பிள்ளையள் பயந்து இருக்குதுகள்'

'குஞ்சுகள் பயப்பட வேண்டாம். அந்தக் காலம் தொடங்கிப் பேயைப் பற்றி... கதைச்சுக்கொண்டுதானே இருக்கினம் ... யாரும் பேயைக் கண்ணால பார்த்தினமோ தெரியாது... சும்மா கதைத்துக் கொண்டு இருக்கினம்... நான் ஒருக்காலும் இன்னும் பேயைக் காணேல்ல... சே... நாங்கள்தான் பேய்கள்...

மகனும் மகளும் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்கள். முகங்களில் ஏகப்பட்ட வினாக்குறிகள். வெளியே குளறி ரத்தினத்தின் அட்டகாசமான குரல். அதனோடு மனைவியின் சத்தம்.

'என்ன மனுசனப்பா நீ... போகேக்க மனுசன் மாதிரி போறாய்.. வரேக்க 'பேய் மாதிரி' வாறாய் ... பிள்ளையளைப் பார், பேயைக் கண்ட மாதிரி பயந்து போய் நிக்குதுகள்'

பிள்ளைகள் இப்போதெல்லாம் பேயைப் பற்றி ஒன்றும் கதைப்பதில்லை. அதுபற்றி ஒன்றும் கேட்பதில்லை.

(யாவும் சிந்தனை)

## 'கோழி கடத்தல்'...

(V பக்கத் தொடர்ச்சி)

முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான யாழ். மாவட்டத்தின் கரவெட்டிப்பகுதியில் ஆளற்ற வேவு விமானமொன்று வீழ்ந்ததற்கு நோர்வே புலிகளுக்கு வழங்கிய வானொலிச் சாதனமே காரணம் என்றும் அந்தச் சாதனத்தாலேயே வீழ்த்தினர் என்றும் ஒரு புத்திசாலித்தனமான ஜே.வி.பி. உறுப்பினர் கண்டுபிடித்தமை பற்றி ஜே.வி.பி. இரண்டு தடவையும் புரட்சி (கிளர்ச்சி) செய்து இரண்டு தடவையும் தோற்றது. ஏன் என்பது இப்போதுதான் புரிகிறது என்று ஒரு தமிழ்ப் பத்திரிகை கிண்டல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேபோல, முன்னொரு தடவை இலங்கையில் புகைபிடிப்போர் வீதம் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகம் என ஓர் அதிகாரி கண்டுபிடித்ததும் நினைவு கூரத்தக்கது.

தென்னிலங்கைப் பத்திரிகைகளும் தமது பங்குக்கு அடிக்கடி ஏதாவது புரளியைக் கிளப்பி, பின்பு தாமே அதை நம்பிவிடுவதுமுண்டு.

ஆக, தாங்கள் செய்யத் தவறிய ஒரு விடயம் தொடர்பான குற்றத்தையும் சிங்களவர் தமிழர் மீதே (குறிப்பாக புலிகள் மீது) போடும் முயற்சி இது.

எந்த மருந்துத் தடை இருந்த போதும் தமது மக்களின் சுகாதாரம் தொடர்பான விடயங்கள், சூழல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் விடுதலைப் புலிகள் எவ்வளவு கரிசனையாகவுள்ளனர் என்பது வெளியுலகம் அறிந்த ஒன்று.

சிங்களப் பகுதிகளில் எந்தத் திட்டமும் இல்லாமலே வனவளம் அழிக்கப்படுகின்றது. 'ஜெயசிக்குறு' நடவடிக்கை இடம்பெற்ற காலத்தில் வன்னியிலும் பெருமளவிலான மரங்களை வெட்டி (குறிப்பாக தேக்கு) சிங்கள இராணுவ அதிகாரிகள் பதவிநிலைக்கேற்ப இலட்சாதிபதிகளாகவும் கோடீஸ்வரர்களாகவும் மாறியதும் இரகசியமான விடயமல்ல.

தமிழீழ வனவளப்பிரிவு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்பன வனவளத்தைப்பேண மேற்கொள்ளும் முயற்சிகளில் எத்தனை வீதம் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதைக் கணக்கிட்டால், சுற்றுச்சூழல் தொடர்பாக விடுதலைப் புலிகள் எவ்வளவு கரிசனையுடன் உள்ளனர் என்பது புரியும்.

மேலும் டெங்கு நோய் பற்றிய பீதி தென்னிலங்கையை உலுப்பியபோது, அவ்வளவு மருந்துத் தடைகளுக்கு மத்தியிலும் புலிகளின் பகுதிக்குள் அது நெருங்க முடியவில்லை. புலிகளால் அவ்வளவு தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார விழிப்புட்டல், நோய்த் தடுப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா அரசைவிட விடுதலைப் புலிகள் எந்தளவிற்கு அக்கறையாக இருக்கின்றனர் என்பது அமரசேகராவுக்குத் தெரியாவிட்டாலும் அனேகருக்கு நன்கு தெரியும்.

புலிகளின் பகுதிக்குள் இந்தியாவில் இருந்து கோழி கடத்தி வரப்படுகின்றது என்ற கூற்று நகைப்புக்கிடமானது. இது அமரசேகராவிற்குப் புலிகளைப் பற்றியும் தெரியாது, இலாபநட்டக் கணக்கும் பார்க்கத் தெரியாது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

சிங்களவர் ஒருவர் தற்செயலாகச் சறுக்கி வீழ்ந்தாலும் அதற்கும் தமிழரே காரணம் எனக் கூறுமளவிற்கு ஸ்ரீலங்காவில் இனவாதம் கோலோச்சுகிறது.

**வன்னி மகன்,** (நன்றி : தமிழ்நாதம்)

# இந்தமுறை தனித்து நின்று தேர்தலைச் சந்திக்கிறது அ.தி.மு.க.

## மக்கள் கூட்டணி யார் பக்கம்?

சமீப காலத்தில் முதன்முறையாக பெரிய கட்சிகளின் கூட்டணி இல்லாமல், சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. இப்போது தனியாகப் போட்டியிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

'மக்கள் கூட்டணிதான் எனக்கு நிரந்தரமான அரசியல் கூட்டணி. வல்லமை பெற்ற அந்தக் கூட்டணி என்னுடன் இருக்கும்போது இந்த மண்ணில் எந்தச் சக்தியாலும் என்னை வெல்லமுடியாது' என்று சமீபத்தில் முதல்வர் ஜெயலலிதா பேசியுள்ளார்.

பா.ம.கவுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் திடீரென அ.தி.மு.க. அணியில் சேர்ந்துள்ளார்.

தி.மு.க. அணியில் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், மறுமலர்ச்சி தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் உள்ளன.

அ.தி.மு.க. அணிக்குச் செல்ல மாட்டோம் என்று பல மாதங்களாகவே பா.ம.க. உறுதியாகக் கூறிவந்தது. இந்த நிலையில், ம.தி.மு.கவை தங்கள் பக்கம் இழுக்க அ.தி.மு.க. மேற்கொண்ட முயற்சியும் நிறைவேறவில்லை.

பொதுவாகவே தமிழகத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் குறிப்பிட்ட சதவீத வாக்குகள் உள்ளன. அ.தி.மு.க., தி.மு.க. ஆகியவை பெரிய கட்சிகளாக இருந்தபோதிலும் காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் எந்த அணியில் இருக்கிறதோ அந்த அணி வெற்றி பெற வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் பெரிய கட்சிகளின் கூட்டணி இன்றி சட்டப் பேரவைத் தேர்தலைச் சந்திக்க இருக்கிறது அ.தி.மு.க.

காங்கிரஸில் இருந்து பிரிந்து திண்டிவனம் ராமமூர்த்தி தொடங்கியுள்ள தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை அ.தி.மு.க. அணிக்கு வந்துள்ள போதிலும் தமிழகம் முழுவதும் இக்கட்சிகளுக்குச் செல்வாக்கு இருப்பதாகக் கூறமுடியாது.

சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி ஜெயேந்திரரைக் கைது செய்ததால், ஜெயலலிதாவுடன் அணி சேரக்கூடாது என பா.ஜ.கவினர் கூறி வருகின்றனர். தனியாகப் போட்டியிடப் போவதாகவும் பா.ஜ.க. அறிவித்துள்ளது.



நடிகர் விஜயகாந்த் கட்சிக்கு மக்களிடையே எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்று தேர்தலில் அவரது கட்சிக்குக் கிடைக்கும் வாக்குகளைப் பொறுத்தே சொல்ல முடியும். இதுவரை எந்த அணியுடனும் சேராமல் இருக்கிறார் விஜயகாந்த். அவர் தனியாகப் போட்டியிட்டால் அவரது உண்மையான பலம் தேர்தல் முடிவில் தெரியவரும்.

அ.தி.மு.கவின் பிரசார உத்தி அ.தி.மு.கவின் 5 ஆண்டு கால சாதனைகளைத் தீவிரமாகப் பிரசாரம் செய்தால்தான் கணிசமான வாக்குகளைப் பெற்று தி.மு.க. கூட்டணியைச் சமாளிக்கமுடியும்.

மணல் குவாரிகளையும் மதுக் கடைகளையும் அரசுடைமையாக்கி அரசின் நிதி நிலையைச் சீராக்கியது, லொத்தர் விற்பனையைத் தடைசெய்து, லொத்தரால் அழிந்த பல குடும்பங்களைக் காத்தது, மின் கட்டணம் குறைப்பு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள், ரேஷன் அரிசி விலையை உயர்த்தாதது என பல்வேறு சாதனைகளையும் அ.தி.மு.கவினர் தீவிரமாகப் பிரசாரம் செய்வர்.

ஆழிப்பேரலை, வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது மேற் கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகளும் பிரசாரத்தில் இடம்பெறும்.

தேர்தல் நடைபெறும் நேரம் கோடைகாலம் என்ற போதிலும் பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்து, ஏரி, குளங்கள், அணைகள் நிறைந்திருப்பதால் தண்ணீர் பிரச்சினை இருக்காது. எனவே, இம்முறை தேர்தலை சந்திக்கும்போது குடிதண்ணீர் பிரச்சினை முக்கிய இடம்பெறாது.

ஆனால், பெரும் மழை காரணமாக ஆங்காங்கே பாலங்கள், வீதிகள் சேதம் அடைந்துள்ளன. சேதமான சாலைகள் சீரமைக்கவேண்டும். உடைந்த பாலங்களை மீண்டும் கட்டவேண்டும். வெள்ள நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதே பல மாவட்டங்களில் முக்கிய தேர்தல் பிரச்சினையாக இருக்கும். இப்பிரச்சினையை எதிர்க்கட்சியினர் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு தேர்தலின்போது பிரசாரம் செய்வர்.

அரசு செய்த நன்மைகளும் நன்மைகள் என நினைத்து செய்தவற்றில் ஏற்பட்ட சில தவறுகளும் மக்களால் இப்போது பேசப்படுகின்றன.

இரு தரப்புமே மக்கள் தங்கள் பக்கம் என்று சொன்னாலும் மக்கள் கூட்டணி யாருக்கு என்பதை அறியக் காத்திருக்கவேண்டும்.

---

# தொலை மருத்துவம் (Telemedicine)

## கனவு நனவாகும் நாள்கள் தொலைவில் இல்லை

தொலை மருத்துவம் (Telemedicine) என்ற பதம் மருத்துவ உலகில் மிக மிக மெதுவாகப் பிரபலம் அடையத் தொடங்கியுள்ளது. தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற பதங்களின் வரிசையில் இதுவும் வெகுவிரைவில் மக்கள் மத்தியில் அதிகம் பழக்கத்தில் வரக்கூடும். 'தொலை மருத்துவம் என்றால் என்ன?' என்ற வினாவுக்கு இலகுவிடை 'மருத்துவத் தகவல்களையும், சேவைகளையும் வழங்கத் தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தல்' என்பதாகும். சாதாரணமாக ஒரு நோயாளிபற்றி இரு வைத்தியர்களிடையேயான தொலைபேசி உரையாடல் முதல் இரு கண்டங்களுக்கிடையேயான செய்மதி மூல ஒளிப்படக் கலந்துரையாடல் (Video Conference) ரோபோத் தொழில்நுட்பப் பயன்பாடு வரை தொலை மருத்துவ வீச்சு விசாலமானது.

தற்போது இருவகையான தொழில்நுட்பங்கள் தொலை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

**1. சேமித்தலும் முன்நகர்த்தலும்** (Store and Forward) **நுட்பம்.**

உதாரணமாக ஒரு டிஜிற்றல் ஒளிப்படக்கருவியில் படம் பிடித்தல் சேமித்தல் ஆகும். அவ்வாறு சேமிக்கப்பட்ட தரவை கணனி மூலம் இன்னோர் இடத்திற்கு அனுப்புதல் முன்நகர்த்தல் ஆகும். அவசரமற்ற மருத்துவ நிலைமைகளில் நோய் நிர்ணயம் (Diagnosis), மருத்துவ ஆலோசனைகள் போன்றவற்றை 24 - 48 மணிகளில் பெற்றுக்கொள்ள இம்முறை பொருத்தமானது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள CTயை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுடன் இம்முறை மூலம் இணைப்பதன் மூலம் எமது வளப்பங்கீட்டை உச்சநிலைக்குக் கொண்டுவர முடியும். இவ்வாறே எமது பகுதியில் ஒரு நோயியல் ஆய்வுகூடம் (Pathology Lab) இல்லா நிலையில் எமது ஆய்வு கூடத்தை தென்பகுதியிலுள்ள ஆய்வு கூடங்களுடன் இணைப்பது பற்றியும் சிந்திக்கலாம்.

**2. இருவழித் தொலைக்காட்சி** (IATV Interactive Television) **நுட்பம்.**

நோயாளியும் மருத்துவரும் ஒருவரோடு ஒருவர் கலந்துரையாட வேண்டிய நேரங்களில் இரு புறத்திலும் இரு ஒளிப்படக் கருவிகளையும் இரு தொலைக்காட்சிகளையும் பொருத்துவதன் மூலம் இச்சூழலைச் சாத்தியமாக்குவது இந்நுட்பம். நகர்ப்புறங்களிலிருந்து கிராமப் புறங்களுக்கு மருத்துவ வசதிகளை விரிவாக்குவதை இம்முறை இலகுபடுத்துகின்றது.

நோயாளியின் நோய்ச்சரிதத்தை (History) எடுப்பது சரி, சாத்தியமே. ஆனால், பரிசோதிப்பது (Examination) எப்படி? இரண்டுமே இரு கண்கள் அல்லவா? என்று நீங்கள் உணர்வது புரிகிறது. கவலையை விடுங்கள். (Otoscope Stethescope) போன்ற உபகரணங்கள் இணைக்கப்பட்ட (IATY) உபகரணத் தொகுதி உங்கள் சேவைக்காகக் காத்திருக்கின்றது.

''எல்லாம் வாசிக்க நன்றாகத்தான் இருக்கும். நடைமுறைக்குச் சாத்தியமா?'' என்ற கேள்வி உங்களுக்கு எழக்கூடும். உலகில் ஏற்கனவே வெற்றிகரமாக இயங்கி வரும் பல தொலைமருத்துவச் செயற்திட்டங்கள் இருக்கின்றன என அடித்துக்

கெ.இந்திரமோகன் 22ஆம் அணி

கூறமுடியும். உதாரணத்திற்கு ஒன்று. கன்சாஸ் பல்கலைக்கழகத் தொலை மருத்துவ நிகழ்ச்சித்திட்டம் பல வருடங்களாகப் புற்றுநோயியல், உளமருத்துவம் போன்ற துறைகளில் தமது சேவையை உள்ளூர் சிறைச்சாலைகளுக்கும் சுற்றயல் மருத்துவ மனைகளுக்கும் வழங்கிவருகின்றது. பாடசாலைகளும் அதன் சேவையை இப்போது பெற்றுவருகின்றன.

இது இவ்வாறு இருக்க, மறுமுனையில் இராணுவமும் சில பல்கலைக்கழகங்களும் தொலை அறுவைச்சிகிச்சை (Telesurgery) பிரயோகத்தில் குறியாயிருக்கின்றன. ஆபத்தான களமுனைகளிலிருந்து தொலைவில் பாதுகாப்பான இடத்தில் இருந்து கொண்டு விழுப்புண் அடைந்த வீரர்களுக்கு சிகிச்சை அளிப்பதே இதன் நோக்கம் ஆகும். நடவடிக்கை லிண்ட்பேர்க் (Operation Lindbergh) என்ற குறியீட்டுப் பெயருடன் புரட்டாதி 7, 2001இல் பேராசிரியர்களான ஜக்குவிஸ் மரேசகக்ஸ், கக்னர் ஆகியோர் நியூயோர்க்கில் இருந்துகொண்டு அட்லாண்டிக்கின் இக்கரையில் பிரான்சின் ஸ்ராஸ்பேர்க் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 68வயதான



பெண்மணிக்கு Laproseopic Cholecystectomyயை 45 நிமிடங்களில் ரோபோவைப் பயன்படுத்தி வெற்றிகரமாகச் செய்தனர். 2003ஆனி 17இல் கொழும்பு அப்பலோ மருத்துவமனை அதன் சென்னை மருத்துவமனையுடன் ஒரு Teleconsultationஐ செய்தது. இது இலங்கை மருத்துவ வரலாற்றில் புதிய அத்தியாயங்களைத் திறந்துவைத்துள்ளது. இத் தொலை மருத்துவம் பல பிரகாசமான சந்தர்ப்பங்களை எமக்கு அளித்துள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட வினைத்திறன் வாய்ந்த மருத்துவசேவையை வழங்குவது இதன் மூலம் இலகுபடுத்தப்பட்டுள்ளது. நோயாளிகள் அலையத் தேவையில்லை. வீட்டிலிருந்தவாறே தமது வைத்தியருடன் கலந்துரையாடமுடியும். நோயாளியின் சிறுநீரைப் பரிசோதித்து ஏதாவது மாற்றங்கள் இருப்பின் உடனடியாக உங்களது குடும்ப வைத்தியருக்கு மின்னஞ்சல் செய்யக்கூடிய தன்னியக்க உபகரணத் தொகுதிகளும் இன்றைய தேதியில் சாத்தியமே. நீங்கள் சிறுநீர் கழித்துவிட்டு வெளியேவரும்போது உங்களுக்குத் தேவையான மருந்து பொதியிடப்பட்டு தயாராய் வீட்டு வாசலில் வந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கனவு கண்டது போதும். யதார்த்த உலகிற்கு வரச்சொல்கிறீர்களா? ''என்ன இருந்தாலும் வைத்தியர் நேரடியாகப் பார்ப்பது போல் வராது'' என்றீ நோயாளிகள் உணர்ந்தால் தொலை மருத்துவம் 'அம்போதான்'. ஒரு முறை தொலைமருத்துவ உபயோகத்துக்கு [15 நிமிடங்களுக்கு] 6.500ரூபா வரை செலவாகின்றது. உபகரணத்தொகுதியின் பெறுமதி ஒரு கோடி இலங்கை ரூபா வரையாகும் .பொருளாதாரம் ஒரு எல்லைப்படுத்தும் காரணி (Economy is a Limiting Factor) என்பது ஒரு கசப்பான யதார்த்தம். எமது தொலைபேசி இணைப்புகளின் வினைத்திறன், கம்பியில்லாத் தொழில்நுட்பத்தின் நிலையாமை என கனமான சுமைகள் எம்மைக் கனவுலகிலிருந்து யதார்த்த உலகிற்கு கீழே இழுத்துவருகின்றன.

''எல்லாம் தயாராகும் வரை துறைமுகத்தில் காத்திருக்கும் ஒரு கப்டன் தனது கப்பலை ஒருபோதும் வெளியே எடுக்கமாட்டான்.'' என்ற ஆங்கிலப் பழமொழியை நினைவு கூருவோம்.

எமது கனவை நனவாக்க நாம் கடினமாக உழைப்போம்.

''முடியாது என்பது கிடையாது.''

நன்றி: நாடி